# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 31 | கதிர் 364 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 09, வியாழக்கிழமை 24.11.2016







## மாணவரைச் சுட்டுக் கொல்வோம்

### பல்கலை. விடுதிக்குள் இரவில் நுழைந்து துப்பாக்கி காட்டிப் பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் விடுதிக்குள் நேற்று முன்தினம் இரவு அத்துமீறி-அடா வடியாக உள் நுழைந்த பொலிஸார், மாணவர்களைச் சுட்டுக் கொல்வோம் என்று துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி-அச்சுறுத்தியுள்ளதாக, பல்கலைக் கழக மாணவர் ஒன்றியங்கள் குற்றம் சுமத்தியுள்ளன. >> 29

## மாவீரர் நாளன்று மாலை 6.05 க்கு சுடரேற்றுவோம்

மாலை 6.05

### வவுனியா மாவட்டப் பிரஜைகள் குழு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
நிலப்பசி எடுத்து புறப்பட்டு வந்த நில ஆக்கிரமிப்புப் படைகளை, தமிழர் தாயகத்தின் எல்லைகளில் >> 29

## இந்தியாவை தாக்கிவிட்டு சீனாவுக்கு பறந்த மகிந்த



யாழ்ப்பாணம், நவ. 24
சீன நீர்மூழ்கிக் கப்பல் கொழும்புக்கு வந்தபோது கத்திக் குழறிய இந்தியா, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையே சீனாவுக்கு தற்போதைய அரசு தாரை வார்க்கும்போது கமுக்கமாக இருப்பது ஏன் என்று கடும் தாக்குத் தாக்கியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.
விமர்சனக் கணைகளை இந்தியா மீது தொடுத்து விட்டு நேற்று அதிகாலை சீனாவுக்கு மகிந்த பயணமாகியுள்ளார்.
சீன அரசின் அழைப்பின் பேரில், பீஜிங்கிற்கான ஒரு வார காலப் பயணத்தை, >> 28

# தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதை தவிர்க்கிறது அரசு



### போர்க்குற்ற சிறப்பு நீதிமன்றை அமைக்கத் தாமதிப்பதற்கு அதுவே காரணம் என்கிறார் ஸ்ரீபன் ராப்

யாழ்ப்பாணம், நவம்பர். 24
போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சிறப்பு நீதிமன்றத்தை அமைத்தல் உள்ளிட்ட விடயங்களை இலங்கை அரசு தாமதித்து வருவ >> 28

## ராணுவப் புரட்சிக்கு இடமளிக்கமுடியாது

### கூறுகிறார் கடற்படைத் தளபதி

யாழ்ப்பாணம், நவ. 24
எமது நாடு ஜனநாயக நாடு. அதனை உருவாக்கியவர்கள் மக்கள். மக்களின் வாக்குகளால் உருவாக்கப்பட்ட அரசைப் பாதுகாப்பதே இராணுவத்தின் கடமை. இன்று வரை இராணுவம் அதனைச் செய்து வருகிறது. இராணுவச் சூழ்ச்சியை மேற்கொள்ளவோ அல்லது புரட்சியை ஏற்படுத்தவோ ஒருபோதும் நாம் இடமளிக்கப் போவதில்லை.
இவ்வாறு கடற்படைத் தளபதி ரவீந்திர விஜேகுணவர்த்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தில் மக் கள் பிரதிநிதி ஒருவர் திடீரென இராணுவப் புரட்சி தொடர்பில் கருத்து தெரிவித்தமையையிட்டு நாம் பெரும் அதிருப்தியில் >> 29



## தமிழ்க் கைதிகளை நிபந்தனைகளின்றி விடுதலை வேண்டும்

### கொழும்பில் நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனைகளும் இன்றி உடனடியாக விடுவிக்க வேண்டும்.
இதனை வலியுறுத்திக் கொழும்பு கொள்ளுப்பிட்டிப் பகுதியில் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அரசியல் கைதி களை விடுதலை செய்வதற் >> 29

### வவுனியாவில் பிடிபட்ட

## கொள்ளை கும்பலிடம் மேலும் கத்திகள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 24
வன்னியின் பல பகுதிகளிலும், திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தில் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்ட குழுவினரிடம் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைவாக அவர்களிடமிருந்து மேலும் கத்திகள், வாள்கள், கையுறைகள், ரோச் லைற்றுகள், குறடுகள் என்பன நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த 17 ஆம் திகதி கொள்ளை >> 28



## மகிந்தவை நேரடி விவாதம் நடத்த அழைக்கிறார் ரவி



யாழ்ப்பாணம், நவ. 24
2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பற்றிச் சந்தி சந்தியாக நின்று பொய்ப் பரப்புரை செய்யாமல் அது பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக நேரடி விவாதத்துக்கு வருமாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச >> 28

## இந்தியாவில் இருந்து திரும்பிய அகதிகள் இங்கு நடுத்தெருவில்

### அரச அதிபர், தூதுவரிடம் நேரில் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 24
நாடு திரும்பிய பின்னர் எங்களுக்கு என்ன தேவை என்பதைக் கேட்பதை விட, நாடு திரும்புவதற்கு முன்னரே அதனை ஆராய்ந்து ஏற்பாடு செய்து தந்த பின்னர் எம்மை நாட்டுக்கு அழைத்து வரலாம்தானே.
இவ்வாறு இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிகள், யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகளிடமும், இந்தியத் துணைத் தூதுவரிடமும் தெரிவித்தனர்.
இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று மீண்டும் நாடு திரும்பியவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தேவைகள் தொடர்பில் இலங்கை ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் >> 29

## அச்சுவேலியில் நில ஆய்வுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

யாழ்ப்பாணம், நவ. 24
அச்சுவேலிப் பிரதேசத்தில் நிலம் கீழிறங்குதல் தொடர்பில் ஆய்வை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது.
அச்சுவேலிப் பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி திடீரென நிலம் தாழிறங்கியது. இதனால் வீட்டுச் சுவர்களிலும் வெடிப்பு ஏற்பட்டது. திடீரென ஏற்பட்ட இந்தத் தாழிறக்கத்தினால் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.
இந்தத் திடீர் இடர் தொடர்பில் ஆய்வுகள் ஏற்கனவே >> 29

## புலிகளை நினைவு கூர்ந்தால் ராணுவம்பார்த்துக்கொள்ளும்

### கூறுகிறார் அமைச்சர் ராஜித

யாழ்ப்பாணம், நவ. 24
போரில் இறந்த தமது உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவு கூருவதில் தவறில்லை. புலிகளை நினைவு கூர்ந்தால் அது குறித்து >> 29

## பஸ் சாரதிகளுக்கான தண்டம் ரூ. 2 லட்சம் வரை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
அனுமதிக்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் இன்றி பேருந்துகளைச் செலுத்துவோருக்கு எதிராக மாவட்ட நீதிமன்றங்களின் மூலம் தற்போது அறவிடப்படுகின்ற குறைந்த தண்டப் பணத் தொகையை 10 ஆயிரம் ரூபா முதல் >> 29

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாக்கப்பட்டே கொல்லப்பட்டார் முன்னாள் பொலிஸ் அதிகாரி

## சந்தேகத்தில் இருவர் கைது

வவுனியா, நவ. 24

மதுபோதையில் சென்ற இருவர் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தியதிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக முதல் கட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளோம். மேலதிக விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. தாக்குதலாளிகள் இருவரையும் கைது செய்துள்ளோம். இவ்வாறு வவுனியாப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனி நேற்றுத் தெரிவித்தார்.

ஜேர்மனியிலிருந்து வந்து தங்கியிருந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான விக்கிரமரட்ண குணசிறி நேற்று முன்தினம்காலைஅடிகாயங்களுடன் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் தெரிவிக்கையிலேயே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்தின மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த திங்கட்கிழமை பொலிஸ் அவசரத்தொலைபேசிக்கு அழைப்புக் கிடைத்தது. தொலைபேசி அழைப்பு எடுத்தவர், வவுனியா பத்தினியார் மகிழங்குளத்தில் ஒரு குடும்பச்சண்டை நடைபெறுகின்றது என்று தகவல் வழங்கினார். பொலிஸார் தகவல் வழங்கிய நபர் சொன்ன இடத்துக்குச் சென்றனர். கணவன் – மனைவி இடையே சண்டை நடந்தது. அது குடும்பச் சண்டை. பொலிஸார் அந்த வீட்டுக்காரர்களுக்கு ஆலோசனை வழங்கி விட்டுப் பொலிஸ் நிலையம் திரும்பினர். சண்டை நடைபெற்ற வீட்டுக்கு அருகில்தான் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் வசித்து வருகின்றார்.

திங்கட்கிழமை மாலை சண்டை நடந்த வீட்டில் பிறந்த நாள் கொண்டாட்டம் நடைபெற்றுள்ளது. இதன்போது நான்கு பேர் கலந்து கொண்டு மது அருந்தியுள்ளனர். அளவுக்கு அதிகமாக மது அருந்தியுள்ளனர். இதன்போது, பொலிஸ் அவசர தொலைபேசிக்கு வீட்டில் நடந்த சண்டையை யார் தெரிவித்தது என்பது தொடர்பில் கதைத்துள்ளனர். பக்கத்து வீட்டில் வசித்து வந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இந்தக் குடும்பத்தினருக்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெற்று வந்தது. இதனால் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரே இந்தத் தகவலை பொலிஸ் அவசர தொலைபேசிக்குத் தெரிவித்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு, அவருடன் முரண்பட்டுள்ளனர். அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (த-5)



# அமெ. கடற்படையின் கப்பல் திருமலையில்

யாழ்ப்பாணம், நவ. 24

அமெரிக்கக் கடற்படையின் அன்ரனியோ வகையைச் சேர்ந்த, ஈரூடக போக்குவரத்துக் கப்பலான, யு.எஸ்.எஸ். சோமசெற், திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

பயிற்சிக்கான பயணமாக திருகோணமலைத் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்த அமெரிக்கக் கடற்படைக் கப்பலுக்கு கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

மாகின் தீவில் உள்ள அமெரிக்கக் கடற்படையின் ஈரூடகத் தயார் நிலை அணியில் இடம்பெற்றுள்ள இந்தக் கப்பல், இந்தோ– பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் உறுதி நிலையைப் பேணுவதற்காக, 11 ஆவது மரைன் நடவடிக்கைகளுக்கான அணியுடன் இணைந்து 78ஆவது கப்பற் படைப் பிரிவின் பகுதியில் பணியில் ஈடுபட்டு வருகிறது.

நான்கு நாள் பயணமாக திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள அமெரிக்கக் கடற்படைக் கப்பல், நாளை மறுதினம் சனிக்கிழமை வரை இங்கு தரித்திருந்து, கடற்படையினருடன் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளது, இந்தக் கப்பலின் மாலுமிகள், திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். திருகோணமலைக்கு வந்துள்ள அமெரிக்கப் போர்க்கப்பல், 208.5 மீற்றர் நீளத்தைக் கொண்டதாகும். இதில், 28 அதிகாரிகளும் 333 மாலுமிகளும் பணியாற்றுகின்றனர்.

சுமார் 800 வரையான படையினரை ஈரூடகத் தாக்குதலுக்காக ஏற்றிச் செல்லும் வசதி படைத்த இந்தக் கப்பலில், நான்கு உலங்கு வானூர்திகள், இரண்டு விமானங்கள் தரித்து நிற்கும் வசதிகளும் உள்ளன.

கடந்த சில மாதங்களில், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நான்காவது அமெரிக்கப் போர்க் கப்பல் இதுவாகும். (த-5)

# அதிரடிப் படையின் முன்னாள் கட்டளை அதிகாரி நேற்றுக் கைது

கொழும்பு, நவ. 24

சிறப்பு அதிரடிப் படையின் முன்னாள் கட்டளை அதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.எல். எம்.சரத்சந்திர கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சிறப்பு அதிரடிப்படையின் வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.எல்.எம்.சரத்சந்திர கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் சிறப்பு விசாரணைப் பிரிவினால், கொழும்பு பிரதம நீதிவான் முன், முன்னிலைப்படுத்தப்பட்ட இவரை டிசெம்பர் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவுக்கான இணைப்புச் செயலராகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.எல்.எம்.சரத்சந்திர பணியாற்றியிருந்தார்.

இவர், சிறப்பு அதிரடிப்படையின் வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தியதால், அரசுக்கு 146,690 ரூபா இழப்பு ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இவர் தற்போது இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் பாதுகாப்புப் பணிப்பாளராக பதவி வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# 4 தென்னிலங்கை மீனவர்களை ஒப்படைத்த இந்தியக் கடற்படை

யாழ்ப்பாணம், நவ. 24

இந்தியக் கடல் எல்லைக்குள் படகுடன் புகுந்த தென்னிலங்கை மீனவர்கள் 4 பேரை இந்தியக் கடற்படையினர் கைது செய்து இலங்கைக் கடற்படையினரிடம் நேற்று ஒப்படைத்தனர்.

சிலாபத்திலிருந்து 44 அடி நீளப் படகில் கடற்றொழிலுக்குக் குறித்த 4 பேரும் புறப்பட்டுள்ளனர். படகுடன் அவர்கள் இந்திய எல்லைக்குள் நுழைந்துள்ளனர்.

இந்திய எல்லைக்குள் பிரவேசித்த அவர்களைக் கைது செய்ததோடு, அவர்களது படகையும் கைப்பற்றியது இந்தியக் கடற்படை. பின்னர் அவர்கள் இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

இந்தியக் கடற்படையினரால் கையளிக்கப்பட்ட படகை இலங்கை கடற்படையினர் மன்னார் கரைக்குக் கொண்டுசென்று தமது முகாமில் நங்கூர மீட்டுள்ளனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மீனவர்கள் 4 பேரும் மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று மாவட்ட நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-4-101)

# கலைத்துப் பிடிக்கப்பட்ட காரில் கஞ்சாப் பொதிகள்

## அதில் பயணித்த இருவரும் கைது

தென்மராட்சி, நவ. 24

சமிக்ஞையை மீறிச் சென்ற காரைப் பொலிஸார் துரத்திப் பிடித்துச் சோதனையிட்டபோது அதற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7 கிலோ 900 கிராம் கஞ்சாப் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் காரில் பய ணித்த இருவரையும் கைது செய்த சிறப்புப் போக்குவரத்துப் பொலிஸார் அவர்களைக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மு.ப. 10.30 மணிக்கு எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்றது.

சிறப்புப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர் நேற்று வீதிப் போக்குவரத்துப் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது வீதியில் வந்த காரை மறித்தபோது அது நிறுத்தாமல் சென்றுள்ளது. பொலிஸார் அதனைத் துரத்திப் பிடித்துச் சோதனையிட்டனர். இதன்போது காருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதிகளைப் பொலிஸார் கைப்பற்றினர். காரில் பயணித்த இருவரையும் கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.(த-9)

# இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்க மரைன் பயிற்சி

இலங்கைக் கடற்படையினால் அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரைன் படைப் பிரிவுக்கு அமெரிக்கக் கடற்படையின் மரைன் படையினர் பயிற்சி அளிப்பதாக இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று முதல், நாளை வரை இந்தப் பயிற்சி இடம்பெறவுள்ளது.

அமெரிக்கக் கடற்படையின், 11ஆவது மரைன் நடவடிக்கை அணியுடன் திருகோணமலை துறைமுகத்துக்கு அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ். எஸ். சோமசெற் என்ற ஈரூடக போக்கு வரத்துக் கப்பல் நேற்று வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் வந்துள்ள அமெரிக்கக் கடற்படையின் மரைன் படைப் பிரிவினரும், கடற்படை மாலுமிகளும், இலங்கைக் கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரைன் படைப் பிரிவுடன் இணைந்து கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தப் பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டம், அடிப்படை தற்காப்புத் தந்திரங்கள், போரில் உயிர் காப்புப் பயிற்சிகள், வெடிபொருள்களை செயலிழக்கச் செய்தல், விமானங்களுக்குப் பயிற்றுவித்தல், சிறிய படகு மற்றும் தொடரணி நடவடிக்கைகள், தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகளை உள்ளடக்கியதாகும்.

இலங்கக் கடற்படையில் ஆறு மாதங்களுக்கு முன்னரே மரைன் படைப்பிரிவு உருவாக்கப்பட்டதாகவும், உள்ளூரில் பயிற்றுவிக்கப்பட்ட இந்தப் படைப்பிரிவு, இலங்கைக் கடற்படையினரைக் கொண்டே உருவாக்கப்பட்டது என்றும் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார். (து)

# ஊடகங்களைக் கண்காணிக்க ஆணைக்குழு அமைக்க முடிவு

கொழும்பு, நவ. 24

அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் (வானொலி மற்றும் தொலைக்காட்சி) மற்றும் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இணையத்தளங்களில் செய்தி உள்ளடக்கங்களைக் கண்காணிப்பதற்கான சுயாதீன ஆணைக்குழுவினை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவை அமைப்பதற்கான முறையான பொதுமக்கள் ஆலோசனை செயன்முறையொன்றை பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இது தொடர்பில் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் வாண்மைத் தரத்துக்கு மற்றும் செயற்பாட்டு ஒழுங்கின் அடிப்படையில் செய்தி உள்ளடக்கங்களைக் கண்காணிப்பதற்கு இந்த ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத்துறைக்கு சட்டவிதிகளை உருவாக்க சுயாதீன நிறுவனம்

## அமைப்பதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, நவ.24

இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தை நீக்கி விட்டு, செய்தி ஊடகங்களுக்கு தொழில் ரீதியிலான சட்ட விதிகளை ஏற்படுத்தும் சுயாதீனம் பெற்ற அமைப்பை ஏற்படுத்த அரசு தயாராக இருக்கின்றது என்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தகவல்கள் மற்றும் அறிவித்தல்களை மக்களுக்குத் தெரிவிக்கும் பொறுப்பு ஊடகங்களிடம் உள்ளது. இந்த நிலையில், பொது மக்களின் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புதல் எனும் தலைப்பில் ஊடக அபிவிருத்தித் துறைக்கான முழுமையான மதிப்பீட்டைக்கொண்ட அறிக்கையை அரசு தயாரித்துள்ளது.

அதில், ஊடக தொழிற்துறையில் சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்குதல் மற்றும் ஊடகங்களின் சுயதணிக்கைச் செயற்பாடுகளைப் பலப்படுத்துவது பற்றியும் அரசு கலந்துரையாட விரும்புகின்றது.

பத்திரிகைத்துறை சுதந்திரத்துக்கு சட்ட ரீதியிலான அங்கீகாரத்தைவழங்குவதுடன்செய்தி ஊடகங்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் இன்றி தன்னிச்சையாக செய்தி மற்றும் தகவல்களைத் திரட்டுவதற்கு ஏதுவான இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும், செய்தி ஊடகங்களுக்குத் தொழில் ரீதியிலான சட்ட விதிகளை ஏற்படுத்தும் சுயா தீனம் பெற்ற ஓர் அமைப்பை ஏற்படுத்துவ தற்கும் அரசு தயாராகவுள்ளது.

இதுதொடர்பில் உங்களுடைய கருத்துக்களை டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், அரச தகவல் திணைக்களம் (அமைச்சின் செயலாளருக்கு பதிலாக) இல.163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு-05 என்ற அனுப்பி வைக்க முடியும் –என்றார். (வ-5)

# ஐ.எஸ். பயங்கரவாதிகள் இலங்கையில் இல்லை

## அமைச்சர் ராஜித உறுதி

கொழும்பு, நவ. 24

ஐ.எஸ். பயங்கரவாதிகள் எவரும் இலங்கையில் இல்லை. ஐ.எஸ். உறுப்பினர்கள் எவரும் இலங்கைக்குள் ஊடுருவவில்லை என்றும் தேசிய புலனாய்வுப் பணியகம் உறுதியளித்துள்ளது.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற் றுத் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 32 இலங்கையர்கள் மட்டுமே இணைந்து கொண்டுள்ளார்கள். நீண்ட நாள்களுக்கு முன்னரே இலங்கையிலிருந்து வெளியேறி பிற நாடுகளில் குடியேறியவர்கள்தான் இவ்வாறு இணைந்து கொண்டுள்ளனர். அங்கு இடம்பெற்று வரும் போரில் கலந்து கொள்ள இலங்கையிலிருந்து எந்தவொரு நபரும் செல்லவில்லை என்றும் பாதுகாப்புத் தரப்பிலிருந்தும் கூறப்பட்டுள்ளது.

இப்படியிருக்கும்போது தனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில்தான் அவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டதாக அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச கூறியிருந்தார். இது விடயம் தொடர்பில் நானும் அவருடன் கலந்து ரையாடினேன்.

இதுபோன்ற செயற்பாடுகளை மேற்கொண்டேனும் முஸ்லிம் வாக்குகளை அரசுக்கு இல்லாது செய்துவிட வேண்டும் என்பது தான் மகிந்த தரப்பினரின் முயற்சியாக இருக்கின்றது. ஒரு புறத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தூண்டிவிடுவதைப் போல, மறுபுறத்தில் வடக்கு வாழ் தமிழர்களின் வாக்குகளை எமக்கு கிடைக்காமல் செய்ய ஆவா ஆயுதக் குழுவையும் உருவாக்கியுள்ளனர்.

இனவாதத்தைத் தூண்டினர் எனும் குற்றத்துக்காக தற்போது கைது செய்யப்பட்டுள்ள டொன் என்பவர் நீலப்படையில் அங்கம் வகித்தவர். கைது செய்யப்பட்டுள்ள முஸ்லிம் நபர் கோத்தபாயவுக்கு தகவல்களைத் தெரிவிப்பவர். இதிலிருந்தே இவர்களின் முயற்சி தெளிவாகின்றது - என்றார். (ற-5)

# உண்மை விலைகளை தெளிவாக ஆடைகளில் பொறிக்க வேண்டும்

## பாவனையாளர் அதிகார சபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 24

புடைவை வியாபார நிலையங்களில் ஆடைகளில் குழுக்குறியீடு விலை பொறிக்கப்படாமல் அவற்றின் உண்மையான விலைகள் தெளிவாகப் பொறிக்கப்பட வேண்டும். அவ்வாறு பொறிக்கப்படாத ஆடைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அனேகமான புடைவை வியாபார நிலையங்களில் அனைத்து வகையான ஆடைகளிலும் புள்ளி அடிப்படையில் குழுக் குறியீட்டு முறையில் விலைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விலைகள் பொறிக்கப்பட்டுள்ளமையால் ஆடைகளின் சரியான விலைகளைக் கொள்வனவு செய்பவர்கள் புரிந்துகொள்ள முடியாத நிலையில் திண்டாடுகின்றனர்.

பண்டிகைக் காலங்களில் இவ்வாறான புள்ளி அடிப்படை விலைகள் மக்களிடம் பெரும் அதிருப்தியை ஏற்படுத்துகின் றது. தற்போது பண்டிகைக் காலமும் நெருங்கி வருகின்றன. அனைத்துப் புடைவை வியாபாரிகளும் தமது கடைகளில் உள்ள ஒவ்வொரு ஆடைகளுக்கும் புள்ளி விவரங்கள் அடிப்படையில் விலைகளைத் தவிர்த்து பொதுமக்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் அதன் உண்மையான விலைகள் தெளிவாகப் பொறிக்கப்படவேண்டும்.

அவ்வாறு இல்லாமல் புள்ளி அடிப்படையில் குழுக்குறியீடு முறையில் விலை குறிப்பிடப்பட்டிருந் தால் அந்தக் கடைகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தக் குழுக் குறியீட்டு முறையில் உள்ள விலையை கடைகளில் நிற்ப வர்களே பல விலைகள் சொல்வதால் கொள்வனவு செய்பவர்கள் குழம்புகின்றனர். இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபைக்கு இது வரை 4 முறைப் பாட்டுக் கடிதங்கள் கிடைத்துள்ளன – என்றார். (ற-10)

# சில பகுதிகளுக்கு இன்று மின் தடை

யாழ்ப்பாணம், நவ.24

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் யாழ்.பிரதேசத்தில் பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார். (வ-10)

# ஆலோசனைக் கூட்டம்

பாதுகாப்பான புலம் பெயர் தொழிலாளர்கள் தொடர் பான பிரதேசமட்ட ஆலோசனைக் கூட்டம் வடமராட்சி தெற்கு – மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறும் என்று கரவெட்டி பிரதேச செயலர் அறிவித்தார். (வ-35)

# நாடக விழா இடமாற்றம்

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் நாடக விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்துவதென முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாத காரணத் தினால் இடம் மாற்றப்பட்டது என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ-9)

# ரவிராஜ் படுகொலை வழக்கில் சாட்சியங்கள் பதிவு ஆரம்பம்

கொழும்பு, நவ. 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் படுகொலை வழக்கு விசாரணை கொழும்பு மேல்நீதி மன்றில் அறங்கூறம் அவை முன்பாக இடம்பெற்று வருகிறது.

இந்த வழக்குடன் தொடர்புடைய முதலாவது சாட்சியாளரான பிரிதிராஜ் மன்னம்பேரி அறங்கூறும் அவை முன்பாக நேற்றுச் சாட்சியங்களைப் பதிவு செய்தார். இன்றும் வழக்கு விசாரணை இடம்பெறவுள்ளது.

ஏனைய மூன்று பிரதிவாதிகளும் கருணா குழுவின் உறுப்பினர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டதுடன் அவர்கள் நாட்டில் இருந்து வெளியேறி நீதி மன்றத்தில் முன் [illegible] என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# பொலிஸ் உத்தியோகத்தர் அடாவடி கைத்துப்பாக்கி காட்டி பட்டா சாரதிக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், நவ. 24

பட்டா வாகனத்தை முந்திச் சென்று வழிமறித்த பொலிஸ் உத்தியோகத்தர், சாரதிக்கு கைத்துப்பாக்கியைக்காட்டி மிரட்டினார் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினை தெல்லிப்பழை பொலிஸ் நிலையம் வரை சென்றபின்னர் இருதரப்பினரும் சமாதானமாகச் சென்றனர் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

'பட்டா வாகனம் சுன்னாகம் சந்தியைக் கடந்து சென்றுள்ளது. அதன் முன்னே பயணித்த 3 மோட்டார் சைக்கிள்கள் சமாந்தரமாக சென்றுள்ளன. அவை ஒரு கட்டத்தில் விபத்து ஏற்பட விருந்தபோது திடீரென பிறேக் பிடித்ததாக பட்டா வாகன சாரதியால் கூறப்பட்டது. ஆனால், பட்டா வாகன சாரதி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தன்னை மோத வந்ததாகவும் அதனால் கைத்துப்பாக்கியை எடுத்து தன்னைப் பொலிஸ் என்று அடையாளப்படுத்தி ஏன் மோத வந்தாய் என்று கேட்டிருந்ததாகவும் பொலிஸ் உத்தியோகத்தரால் கூறப்பட்டது.

பொலிஸ் உத்தியோகத்தர் சீருடை அணிந்திருந்த போதும், அதன்மேலே மழைக்குப் போடும் கோர்ட் போட்டிருந்தார். அவர் கைத்துப்பாக்கியைக் காட்டியபடி தர்க்கத்தில் ஈடுபட்டதனை வீதியால் சென்றவர்கள் கண்டுள்ளனர். அந்தச் சம்பவம் இடம்பெற்ற பகுதி தெல்லிப்பழை பொலிஸ் பிரிவு. அதனால் இருதரப்பினரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு இருதரப்பு நிலைப்பாடுகளையும் இருதரப்பினரும் கூறியுள்ளனர். [illegible] சமாதானமாகச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,101)

Galaxy Star
வெற்றி வாரம் 112 திகதி 23.11.2016
11 07 10 22 53
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,084,880 /-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2820 திகதி 23.11.2016
33 42 50 53 J 44
ரூ. 37,653,625/-
Web: www.dlb.lk

பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது சகோதரன்
மனுவேல்
அருணாயோகநேசன்
(சமாதான நீதிவான் -வடமாகாணம்)
அவர்கள் 31.10.2016 அன்று
வடமாகாணம் முழுவதுக்குமான
சமாதான நீதிவானாக யாழ் மாவட்ட
நீதிபதி
ஜெ.கஜநிதிபாலன்
முன்னிலையில் சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டமையைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் இவரது சேவை
எமது மக்களுக்கு தொடர்ந்து கிடைக்க எல்லாம் வல்ல
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்: தங்கை - சாந்தி தர்மராசா, மச்சான் - தர்மராசா,
மருமக்கள் - ரிஷாந், அஜுனன்(சுவிஸ்)
(7.6325)
(14,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2017

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 06 பிரதேச செயலகங்களுக்குமான 2017 ஆம் ஆண்டிற்குரிய கீழ்வரும் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குநர்களாக பதிவு செய்ய விருப்பமுடையவர்கள் அழைக்கப்படுகின்றனர். மேலும் பதிவு விண்ணப்பம் **28.11.2016 ஆம் திகதியிலிருந்து 20.12.2016 ஆம் திகதி பி.ப 03.00 மணிக்கு முன்னர் கணக்குக் கிளை, மாவட்ட செயலகம் முல்லைத்தீவில் ரூபாய். 1000.00 இனைப் பணமாகச் செலுத்தி நேரடியாகவும், தபால் மூலமாக பெற விரும்புபவர்கள் "அரசாங்க அதிபர் முல்லைத்தீவு"** என்ற பெயரிற்கு வங்கி கட்டளை அனுப்புவதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். பெறப்படும் விண்ணப்பப் படிவங்கள் 27.12.2016 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு நடவடிக்கைகளிற்காக மீண்டும் மாவட்ட செயலகத்தில் சமர்பிக்கப்படல் வேண்டும்.

**முல்லைத்தீவு மாவட்ட செயலகம்**
**பொருள்கள் சேவைகள் வழங்குவதற்கான வழங்கல் விவரங்கள்**

| இல | விவரம் | ஆம் / இல்லை |
|---|---|---|
| 01 | எழுது பொருள்கள் காகிதாதிகள் | |
| 02 | மரத் தளபாடங்கள் | |
| 03 | உருக்குத் தளபாடங்கள் | |
| 04 | றோணியோ இயந்திரங்கள் | |
| 05 | Photocopy இயந்திரங்கள் | |
| 06 | கணினிகள் மற்றும் மடிக் கணினிகள் | |
| 07 | தொலைநகல்கள் | |
| 08 | தட்டச்சு இயந்திரங்கள் | |
| 09 | கணினி வலைப்பின்னல் உபகரணங்கள் | |
| 10 | கணினி அச்சியந்திரங்கள் | |
| 11 | ரோணர்கள் மற்றும் றிபன்கள் ( Photocopy இயந்திரம் மற்றும் கணினி அச்சியந்திரம்) | |
| 12 | ஜன்னல் கதவுகளுக்கான திரைச்சீலைகள் | |
| 13 | சீருடைகள் | |
| 14 | மின்சார சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | |
| 15 | மின் இணைப்பு வயர்கள் | |
| 16 | கட்டட எயார் கெண்டிசனர்கள் | |
| 17 | வாகன எயார் கெண்டிசனர்கள் | |
| 18 | விளையாட்டு உபகரணங்கள்/ பொருள்கள் | |
| 19 | உடற்பயிற்சி உபகரணங்கள் / பொருள்கள் | |
| 20 | அச்சிடுதல் / ஸ்கிறீன் அச்சிடுதல் / Office அச்சிடுதல் / Digital அச்சிடுதல் | |
| 21 | அலுமினிய பிற்றிங் வேலைப் பொருள்கள் | |
| 22 | ஜெனரேற்றர்கள் | |
| 23 | நீர் இறைக்கும் மோட்டார் குழாய்கள் | |
| 24 | பெயின்ற் பூச்சுக்கள், வானிஸ் மற்றும் பெயின்ற் பிறஷ் | |
| 25 | பைப்புக்கள் பைப் இணைப்புக்கள் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள் | |
| 26 | மோட்டார் வாகனங்கள் | |
| 27 | டயர் ரியூப்புக்கள் | |
| 28 | வாகன பற்றரிகள் | |
| 29 | உலர் மின்கல பற்றரிகள் | |
| 30 | பற்றரி அசிற் | |
| 31 | இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும் | |
| 32 | Hardware பொருள்கள் | |
| 33 | பிளாஸ்ரிக் உற்பத்திகள் | |
| 34 | இறப்பர் முத்திரைகள் | |
| 35 | உள்ளக தொலைபேசி வலைப்பின்னல் உபகரணங்கள் / சேவைகள் | |
| 36 | தொலைபேசிகளும் அதன் வயர்களும் | |
| 37 | பெயர் பலகைகளும் முப்பரிமாண (3D) எழுத்துக்களும் | |
| 38 | பொலிசிங் குளோத் | |
| 39 | கட்டட வேலைகளும் அதற்கான பொருள்களும் மார்பிள் வகைகளும் | |
| 40 | தோல் வகை உற்பத்திப் பொருள்கள் | |
| 41 | பால்மா வகைகளும் பிளாஸ்ரிக் குவளைகளும் (Nescafe Premix & Disposal Cups.etc) | |
| 42 | குடிநீர் போத்தல்கள் மற்றும் சுடுநீர் போத்தல்கள் | |
| 43 | சோடா (மென்பான வகைகள்) | |
| 44 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள், மொப்பர்கள், வைப்பர்கள் | |
| 45 | காப்பிக், விம், பினோல், சவர்க்காரம், அசிற், குளோறின், எயார் பிறஷ்னர் etc | |
| 46 | சாதாரண மற்றும் நைலோன் கயிறுகள் | |
| 47 | சுண்ணாம்புக்கல்/ கருங்கல் / சல்லிகள் / உற்பத்தி செய்யப்பட்ட கட்டட பொருள்கள்.(வழங்கக் கூடியவற்றின் கீழ் அடையாளமிடவும்) | |
| 48 | மணல் மண் மற்றும் கிரவல் மண் வகைகள் (குறிப்பிடவும்) ........................................................ | |
| 49 | ஒலிபெருக்கி சாதனங்கள், ஒலிவாங்கி சாதனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பானவை | |
| 50 | வாகனங்கள் தூய்மிப்பு மற்றும் அதற்கான பொருள்கள் | |
| 51 | வாகன திருத்தங்கள் | |
| 52 | வாகன திருத்தத்திற்கான உதிரிப்பாகங்கள் | |

திருமதி.றூ.கேதீஸ்வரன்,
மாவட்டச்செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

# அவன்காட் வழக்கு: தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ.24

எவன்காட் நிறுவனத்துக்குச் சொந்தமான ஆயுதக் களஞ்சிமாகப் பயன்படுத்தப்பட்ட கப்பலை, விடுவிப்பதா? அல்லது உடைப்பதா? என்பது தொடர்பான தீர்ப்பு நேற்றைய தினம் அறிவிக்கப்படவிருந்த போதும் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வழக்கு காரணமாகக் காலித் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கும் அவன்காட் கப்பல் தொடர்பிலான இறுதித் தீர்ப்பை நாளை வரை ஒத்திவைப்பதாக காலி பிரதான நீதிவான் தெரிவித்துள்ளார்.

அவன்காட் நிறுவனம் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் கப்பலை பொறுப் பேற்க மறுத்ததைத் தொடர்ந்து நீதிவானால் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. குறித்த கப்பல் ஒரு வருடமாக நங்கூரமிடப்பட்டுள்ளதால், இதனைப் பராமரிப்பதற்கு 77 மில்லியன் ரூபா வரையில் செலவாகி உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**
புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.
1Kg 400/= மட்டும்
U.S.A பாம்,
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

**சிறுநீரகம் தேவை**
$A^+$ குருதி வகையைச் சேர்ந்த 48 வயது ஆண் ஒருவருக்கு A அல்லது O வகை குருதியுடையவரின் சிறுநீரகம் தேவை.
077 4085 397, 077 006 5028

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2017

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2017ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருள்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருள்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருள்கள் உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணினி, இலத்திரனியல் பொருள்கள், நிழல்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் மாபிள்கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருள்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருள்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 07 | மின்சாரப் பொருள்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருள்கள், மின் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருள்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப் பொருள்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாங்கள், துணைப் பொருள்கள், |
| A - 11 | எரிபொருள்கள், உராய்வுநீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 15 | தீராந்திகள், பலகைகள் |
| A - 17 | அலங்காரப் பொருள்கள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணினி, பிரதியாக்கல் இயந்திரம், அதனுடன் இணைந்த பொருள்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுகுளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம், திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருள்கள் மற்றும் கட்டட மூலப்பொருள்கள்) |
| B- 09 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 10 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 11 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

1. வழங்கல்கள் 2017ஆம் ஆண்டுக்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
3. விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் எமது தலைமை அலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ. 1000.00 (VAT, NBT நீங்கலாக) செலுத்தி தலைமை அலுவலத்தில் பெற்றுக் கொள்ளலாம்
4. விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் -2017 எனக்குறிப்பிட்டு "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்" எனும் முகவரிக்கு 23.12.2016 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

(C/ 26598) (11,18,21) **தீ.சுதர்சன்- செயலாளர்,வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பஸ்தர் மீது கத்திவெட்டு; ஐவருக்கு மறியல்

சாவகச்சேரி, நவ.24

வளவுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்த குடும்பஸ்தரை கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கைதான ஐவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

மிருசுவில் தெற்கைச் சேர்ந்த கதிரவேலு நிரோஜன் என்பவரின் வளவினுள் அத்துமீறி நுழைந்த கும்பல் அவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பியோடியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக காயமடைந்தவரின் மனைவி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். வெட்டுக்காயத்துக்கு இலக்காகி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தரிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் அவரை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையோரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கைது செய்யப்பட்ட ஏனைய நால்வரையும் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த ஐவரையும் எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

காயமடைந்த நபர் ஏற்கனவே அந்தப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் அவரை வீடு புகுந்து தாக்குதல் நடத்தியும் கத்தியால் வெட்டியும் காயப்படுத்தியுள்ளனர் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## அதிகாரத்தின் நடைபாதைகள் கண்காட்சி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், நவ.24

அதிகாரத்தின் நடைபாதைகள் எனும் தொனிப்பொருளிலான கண்காட்சி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் கீழ் இயங்கும் கிரவுண்ட்விவ்ஸ் தளத்தால் நடத்தப்படும் இந்தக் கண்காட்சி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். 1978ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து மிக ஆழமான பிழைகளைக் கொண்டுள்ள அரசமைப்பில் மேலும் மாற்றங்களைக் கொண்டு வருவது எவ்வளவு தூரம் அர்த்தமற்ற விடயம் என்பதை இந்தக் கண்காட்சி வெளிப்படுத்தியுள்ளது. எதேச்சதிகாரத்தின் வளச்சியையும், ஸ்திரத்தன் மையின் மாயையையும் வெளிப்படுத்தும் விதத்தில் இந்தக் கண்காட்சி அமைந்துள்ளது. (ற)

லயன் ஆளுநர் கருமத்திருதி
டாக்டர் வை.தியாகராஜா
அவர்களுக்கான
கௌரவிப்பும்
கலாசுரபி மலர் வெளியீடும்



தலைவர் : திரு.சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கள்
பீடாதிபதி, யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி.
இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
பிரதான மண்டபம்
காலம் : இன்று (24.11.2016) வியாழக்கிழமை,
பிற்பகல் 3.00 மணி

பிரதம விருந்தினர்கள்

லயன் ஆளுநர் கருமத்திருதி
டாக்டர் வை. தியாகராஜா அவர்கள்
சிரேஷ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர், யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி
அவர்தம் பாரியார் திருமதி இரஞ்சிதமலர் தியாகராஜா அவர்கள்

அனைவரையும் அன்புடன் வருக வருகவென வரவேற்கின்றோம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர்.

அறிவித்தல்

வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

வட்டாரம் :- 14
ஆதன இல:- 65 (புதிய பதிவு)
கல்வளை வீதி.

வட்டாரம் 14, கல்வளை, ஆதன இலக்கம் 65 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவிற்பற்று, சண்டிலிப்பாய் இறை 'திடல்' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு குளி 17.3 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாயைச் சேர்ந்த அப்பச்சிப்பிள்ளை பரராசசிங்கம் அவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த அப்பச்சிப்பிள்ளை கணேசமூர்த்தி பெண் தர்மராணி என்பவருக்குப் பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.சீவரத்தினம் முகதாவில் நிறைவேறிய 965 ஆம் இலக்க 04.08.1985 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.A.கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 2016.05.64 ஆம் இலக்க 2016.10.24 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் Lot 01 நிலப்பரப்பு குளி 17.37 கொண்ட இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத்திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் அப்பச்சிப்பிள்ளை கணேசமூர்த்தி பெண் தர்மராணி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
(J/ 6323) (11,17,21) வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்

2017 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், என்பவற்றினை 01.01.2017 தொடக்கம் 31.12.2017 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 164300.00 | |
| 2 | கருவாட்டுக்கடை - 03 | 750.00 | 7500.00 | 41650.00 | 250.00 |
| 4 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 54850.00 | 250.00 |
| 5 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 145000.00 | 250.00 |
| 6 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 38600.00 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 24.11.2016 – 01.12.2016 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 02.12.2016 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 02.12.2016 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 2016.10.20 ஆம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி.சுதர்சன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

மலேசியாவில் உடனடி வேலை வாய்ப்பு

01. பேணிச்சஸ் (தம்ரோ கம்பனி) 30 ஆண் 1000RM 40000SR தங்குமிட வசதி மருத்துவ வசதி உண்டு. + OT (85000/= மட்டுமே)
02. கட்டார் (செக்குறுட்டி காட்) 1400Rg SR56000 + OT உணவு தங்குமிட வசதி உண்டு.

E-Mail:-capitalcolombo@gmail.com
L.NO. 2486 (J 6318) (22,18,21)

077 889 8752, 076 357 5117

கோழிக்குஞ்சும் வான்கோழிக்குஞ்சும் விற்பனை

பைராஹ BAIRAHA No- I குஞ்சு.ஊர்க்குஞ்சு ரூபா 70/= மற்றும் ஒருநாள் வான் கோழிக்குஞ்சு ரூபா 350/=இற்கு பெற்றுக் கொள்ளலாம். தேவையானவர்கள் முற்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

SAHANS FARM +
Main street, Nelliady

077 995 9382, 077 995 7700

கைதடி வீட்டுத் திட்டச் சங்கம் (நம்பிக்கைப் பொறுப்பு) அறிவித்தல்

மேற்படி வீட்டுத் திட்டச் சங்கம் 1974.03.14 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு சிதம்பரநாதன் முகதாவில் 2434 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நம்பிக்கைப் பொறுப்பு உறுதிச் சாதனத்தின் பிரகாரம் செயற்பட்டு வருகிறது.

குறித்த சங்கத்தின் தற்போதைய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் வீட்டுத் திட்டச் சங்கத்துடன் சம்பந்தப்பட்ட காணிகள் தொடர்பாக பின்வரும் முடிவினை எடுத்துள்ளனர். காணியின் உரித்து உறுதிகளைப் பெறாதவர்கள் அவற்றைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் காணியின் உரித்து உறுதிகளைப் பெற்று உடமைக்குவராதவர்கள் அவரவர் காணியின் உடமையைப் பெற நடவடிக்கை எடுப்பதற்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி (2017.03.01) ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கவுள்ளனர்.

குறித்த கால அவகாசத்திற்குள் அவரவர்கள் தமக்குரிய நடவடிக்கையை எடுக்கத் தவறுமிடத்து சம்பந்தப்பட்ட காணிகள் யாவும் மேற்படி வீட்டுத் திட்டச் சங்கத்தின் உரித்துக்குள் மீளக் கொண்டுவரப்படும் எனவும், குறித்த சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் குறித்த காணிகளைச் சங்கத்தின் நோக்கத் திற்கமையக் கையாளுவார்கள் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

தலைவர்
புலவர் செ.து. தெட்சணாமூர்த்தி
கைதடி வீட்டுத்திட்டச் சங்கம்
238, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
பதிவு இல.2434/13/04/1974

அறிவித்தல்

வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

வட்டாரம் :- 15
ஆதன இல:- 27 (புதிய பதிவு)
யாழ்.காரைநகர் றோட்.

வட்டாரம் 15, யாழ்.காரைநகர் றோட், ஆதன இலக்கம் 27 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், மானிப்பாய் கோவிற்பற்று, சண்டிலிப்பாய் இறை 'பெத்தான் கிளான்' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 04 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாயைச் சேர்ந்த முருகேசு நமசிவாயம், மகள் ஜெயராணி, நமசிவாயம் பாலசுப்பிரமணியம் ஆகிய இவர்களால் சண்டிலிப்பாயைச் சேர்ந்த தண்டாயுதபாணி ஜெயதேவா பெண் அன்னலட்சுமி என்பவருக்குப் பிரசித்த நொத்தாரிஸ் திரு.S. இராசேந்திரன் முகதாவில் நிறைவேறிய 10959 ஆம் இலக்க 31.10.1977 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.ம.சிற்றம்பலம் அவர்களால் வரையப்பட்ட 4189ஆம் இலக்க 22.09.2016 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 3 குளி 17.0 கொண்ட இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் தண்டாயுதபாணி ஜெயதேவா பெண் அன்னலட்சுமி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.
(J/ 6316) (11,17,18,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இனவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண சகல தரப்புடனும் ஒரே மேசையில் பேச்சு

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 24

அமைதியான சூழலில் நாட்டு மக்கள் வாழவும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவுமே நல்லாட்சி அரசு உருவானது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இன,மதவாதப் பிரச்சினைகளுக்கு சகல தரப்புகளுடன் ஒரு மேசையில் அமர்ந்து கலந்துரையாடித் தீர்வுகளைப் பெறவேண்டும். இது கடினமான விடயமும் அல்ல.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புகளுடன் குறிப்பிடத்தக்க அளவிலான இலங்கையர்கள் இருப்பதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் அண்மைய காலத்தில் சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில் முஸ்லிம் மதத் தலைவர்கள், ஜம் ஈயத்துள் உலமா சபை உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு நீதி அமைச்சில் இடம்பெற்றது. இந்த சந்திப்பின் பின்னர் நீதியமைச்சர் விஜயதாச தெரிவித்ததாவது:

கடந்த சில மாதங்களாக சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருசில முரண்பாடுகள் மற்றும் அவநம்பிக்கை எழுந்துள்ளது. இந்த நாட்டில் மக்கள் மத்தியிலும் மத விவகாரங்களிலும் ஏதேனும் முரண்பாடுகள் எழுந்துள்ளது எனின், அது எவ்வாறான பிரச்சினைகள் என்பதை இனங்கண்டு அது தொடர்பில் உரிய தரப்புடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு அவற்றுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

சகல இன, மத மக்களும் அமைதியாக வாழ ஒரு சிறிய நாடே உள்ளது. உலகில் உள்ள நாடுகளில் இலங்கை போன்ற ஒரு சுதந்திரம், கௌரவம் வேறு எங்கும் இருக்காது. இங்கு அனைவரதும் மத சுதந்தரம், மொழி உரிமை மற்றும் ஏனைய சமய சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு இருக்கையில் அண்மைய காலங்களில் ஏற்பட்ட ஒருசில கருத்துக்கள், அரசியல் முரண்பாடுகள் காரணமாக சட்டத்தின் மீதும் பாதுகாப்பின் மீதும் மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. கடந்த காலத்திலும் முன்னைய ஆட்சியிலும் இந்த நிலமைகள் உக்கிரமடைந்து கரணப்பட்டன.

எனினும் நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்டது வெறுமனே விலை குறைப்பு, சலுகைகளை வழங்க மட்டும் அல்ல. முக்கியமாக சகல மக்களுக்கும் சட்டத்தின் மூலமாக அமைதியான சூழலை உருவாக்கி அதன் மூலம் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தவேயாகும். அந்த முக்கிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது.

பௌத்த மத அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் முரண்படாது வீதிக்கு இறங்கி போராடாது ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணத் தயாராக உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். நேற்றும் முஸ்லிம் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி யுள்ளோம். பிரச்சினைகளைத் தீர்க்க அனைத்துத் தரப்பையும் ஒன்றிணைத்து பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளோம். அனைவரும் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காணாவிட்டால் இலங்கையை பலப்படுத்த முடியாது. ஆகவே அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட அனைத்துத் தரப்பினாலும் முன்னெடுக்க வேண்டிய நகர்வுகளை அனைவரும் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (வ-4)


## விற்பனைக்குண்டு

### மோட்டார் சைக்கிள்கள்

1. BAJAJ PULSAR 135-NPBDJ-XXXX
2. BAJAJ PULSAR 150 AS-NPBDF-XXXX
3. BAJAJ PULSAR 150-NPBCS-XXXX
4. HUNK-NPBDV-XXXX
5. BAJAJ PULSAR 135-NPBDD-XXXX
6. BAJAJ PULSAR 150-NPBBY-XXXX
7. TVS WEGO-NPBDU-XXXX
8. PASSION PRO-NP BDQ-XXXX
9. HUNK-NP BDT-XXXX
10. HUNK-NP BDX-XXXX

தொடர்புகளுக்கு
மேனகாந்
077 0608074
077 3644409

TRADE FINANCE AND INVESTMENTS PLC
No-233,Stanley Road,Jaffna. 021 2219997, 021 2221898


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் நெசவு போதனா ஆசிரியராக கடமையாற்றும் **திருமதி கு. கணேஸ்வரியின்** அன்புத்தாயார்.

**சபாரத்தினம் பசுபதி**

அவர்கள் 21.11.2016 திங்கட்கிழமை காலமானார். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும்,
சக உத்தியோகத்தர்களும்,
பிரதேச செயலகம், கண்டாவளை.**

(ஜே/6331)(07.19.20)

## மரண அறிவித்தல்



**திருமதி குணரத்தினம் தருமராசா**

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் தருமராசா கடந்த (22.11.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் திரு திருமதி செல்லர்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லர் தருமராசாவின் அன்பு மனைவியும் சண்முகநாதன் (கனடா), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் சிவகுமாரன் (அமெரிக்கா), கேதீஸ்வரன் (சுவிடன்), சண்முகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புனிதவதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் முத்துலிங்கம், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் பராசக்தி, பஞ்சவர்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சியாமளா, கங்காதேவி, ரஜனி, வசந்தி, திருநாவுக்கரசு ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாளினி, சயந்தினி, சனோபா, ரேகா, விஜயமதி, ஆதவன், அபிராமி, மாதவி, தனுஜா, பிரியங்கா, ஓவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இசினி, ஐஸ்வர் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2016) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இணுவில் இல்லத்தில் நடைபெற்று பி.ப 4.00 மணியளவில் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காரைக்கால் சிவன் வீதி,
இணுவில் கிழக்கு.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

(J 6330)(16,17,19)

## செயன்முறைப் பயிற்சிக்குப் பழைய வாகனங்கள்

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ். மாவட்டத்தில் இயந்திரவியல் கற்கை நெறியை ஒரு பாடமாகக் கொண்டுள்ள பிரபல பாடசாலைகளுக்கு, மாணவர்களின் செயன்முறைப் பயிற்சிக்காகப் பழைய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் அவ்வாறு 5 பாடசாலைகளுக்குப் பழைய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றே பொலிஸாரினால் பாவிக்க முடியாத நிலையில் மாணவர் பயிற்சிக்காக பிரபல பாடசாலைக்கு வழங்கப்பட்ட வாகனமாகும்.

"ஜீ.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு எந்த வகையான வாகனங்கள் கையளிக்கப்பட்டன என்று ஆராய்ந்துதான் கூற முடியும்" என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். (வ-4,10)

### கூட்டமைப்பினர் மீதான தாக்குதல் வழக்கில்

# சாட்சியப் பதிவுகள் இன்று தொடரும்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம்- தீவகத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் உறுப்பினர்கள் மீது ஈ.பி.டி.பியினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான வழக்கில், ஒரு சாட்சி உயிரிழந்ததாகப் பொலிஸாரால் மன்றில் தெரிவிக்கப் பட்டதனால் நேற்றைய சாட்சியப் பதிவு இடம்பெறவில்லை. இன்று ஏனைய சாட்சிகளிடம் சாட்சியப் பதிவு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ் செழியன் முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது.

மூன்றாம் நாளான நேற்று சாட்சி அளிப்பதற்காக அழைக் கப்பட்டிருந்த நபர் உயிரிழந்த தாகப் பொலிஸார் நீதிமன்றத் தில் நேற்றுத் தெரிவித்தனர். அதனால் நேற்றுச் சாட்சியப் பதிவு இடம்பெறவில்லை. இதன் தொடர் சாட்சிப் பதிவுகள் கடந்த திங்கட்கிழமையிலிருந்து எதிர்வரும் 2ஆம்திகதி வரை இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

*பின்னணி*

2001ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி தீவகத்தில் தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது நாரந்தனைப் பகுதியில் மறித்து தாக்குதல் மேற்கொண்டதில், இரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் 15க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தொடரப்பட்டு, பின்பு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 4 சந்தேக நபர்களுக்கு எதிராக 47 குற்றச் சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பத்திரம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

2010 ஆம் ஆண்டு சில காரணங்களுக்காக திருகோணமலை மேல் நீதிமன் றத்துக்கு வழக்கு விசாரணை மாற்றப் பட்டது. மீண்டும் யாழ்பாணம் மேல் நீதிமன்றத்துக்கு இந்த வழக்கு மாற்றப் பட்டது.

இதில் 4 சந்தேக நபர்கள் மீது கொலைக் குற்றம் மற்றும் 15 க்கு மேற்பட்டவர்களைக் கடும்காயப்படுத்தியமை தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (வ-4,6)

## மரண அறிவித்தல்

**கனகரத்தினம் புவனேந்திரன்**

(பிள்ளையார்)



பிறப்பு 1971.05.29 — இறப்பு 2016.11.23

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் புவனேந்திரன் நேற்று (23.11.2016) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் வரலக்ஷ்மி தம்பதியரின் அன்புப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ண ராஜா - தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜநாயகியின் அன்புக்கணவரும் டிலஷ்ஷன், பிரவீணன் ஆகி யோரின் தந்தையும் இராஜேஸ்வரி, சற்குணராசா, தவராசா, சிவசக்தி, புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் அமலதாஸின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கதிர்காம கோயிலடி,
நீர்வேலி வடக்கு.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

(ஜே/6332)(17.19.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

“குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்.”

-வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

கார்த்திகை
01-30, 2016
“சொந்த மண் சொந்த மரங்கள்”
“ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்”

# பல்கலை. நிர்வாகப் பொறுப்பு மாகாண சபைக்கு வேண்டும்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

பல்கலைக் கழகங்களை நிர்வகிக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

உலக நாடுகளில் கல்வித்துறை வேகமாக வளர்ச்சி கண்டு வருகிறது. ஆடை வடிவமைப்பு உள்ளிட்ட துறைகளில் கூட கலாநிதி பட்டம் பெறுமளவுக்கு பாடத் திட்டங்கள் உள்ளன. இலங்கையில் அவ்வாறான தொரு நிலைமை இல்லை. மருத்துவத் துறை சார்ந்த பட்டப் படிப்புகளும் இல்லை. கலைத்துறையை மையப்படுத்தியே நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. உலகமயமாக்கலுக்கேற்ப கல்வி முறைமையிலும் மாற்றங்கள் அவசியமாகின்றன.

இந்தியா உட்பட பல நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு நான் சென்றுள்ளேன். இந்தியாவில் பத்தாம் தரத்தில் பயிலும் மாணவர்தான் எத்துறையில் கல்வி கற்றால் முன்நோக்கி செல்ல முடியும் என்று தீர்மானிக்கும் நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு உரிய ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களை முன்னேற்ற வேண்டுமானால், பன்னாடுகளில் உள்ள மிகச்சிறந்த பல்கலைக் கழங்களை அவற்றுடன் இணைக்க வேண்டும். நவீன யுகத்துக்கேற்ப முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

வடக்கில் போர் காலத்தில் கூட விழாமல் இருந்தகல்விநிலை இன்றுவீழ்ச்சியடைந்துள்ளது. எமது பகுதியிலுள்ள மாணவர்களுக்கு சரியான ஆலோசனைகள் வழங்கப்பட்டு புதிய பாடவிதானங்களை கற்று - துறை சார்ந்த ரீதியில் முன்னேறுவதற்கும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய உயர்கல்வி அமைச்சர் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் குரல் எழுப்பி வருபவர். கண்டியத் தலைவர்கள் அன்றே கூட்டாட்சிக் கட்டமைப்பக்கு ஆதரவளித்தனர். டொனமூர், சோல்பரி ஆகிய குழுக்களின் முன்னால் இது பற்றி சாட்சியம் வழங்கியதையும் அவர் நினைவுப்படுத்தி வருகிறார். இதேபோல் கல்வி சார்ந்த பிரச்சினைகளுக்கும் அவர் குரல் எழுப்ப வேண்டும் - என்றார். (ற-5)

# மண்டைக்கல்லாறு பாலத்தினூடான போக்குவரத்து தடைப்படும் அபாயம்

யாழ்ப்பாணம், நவ.24

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் உள்ள மண்டைக்கல்லாறு பாலத்தின் ஊடான போக்குவரத்து தொடர் மழையால் பாதிக்கப்படலாம் எனப் பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டனர்.

தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பூநகரி மண் டைக்கல்லாறு பாலத்தின் ஊடான போக்குவரத்தும் பாதிப்படையும் நிலை காணப்படுகின்றது. தற்போது குறித்த பாலத்தின் மேலாக ஒரு அடி உயரத்துக்கு மேல் வெள்ளம் பாய்கின்றது. இந்த பாலத்தினுடாக கனரக வாகனங்கள் பயணிப்பதை தவிர்க்குமாறு பூநகரி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

நீர் மட்டம் அதிகமானால் போக்கு வரத்து நிறுத்தப்பட்டு படகுச்சேவை ஆரம் பிக்கப்படும் என்று கூறப்படுகின்றது. (ற-6)

# உள நல மருத்துவக் கற்கை நெறி பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

தென்னிந்திய திருச் சபையின் நிறைவாழ்வு மையத்தின் உளநல மருத்துவக் கற்கை நெறி பட்டமளிப்பு விழா வட்டுக்கோட்டையில் அண்மையில் இடம்பெற்றது.

உளநல மருத்துவக்கற்கையில் ஒருவருடத்தை முழுமைசெய்த 19 மாணவர்களுக்கு பட்டமளிப்பு நடைபெற்றது. (ற-6, 34)

# குழு மோதலில் இரு மாணவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 24

வவுனியாவில் பிரபல பாடசாலை மாணவர் குழுக்களுக்கு இடையில் நேற்று நடைபெற்ற மோதலில் இரு மாணவர்கள் காயமடைந்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் எட்டு மாணவர்கள் விசாரணைக்கு பொலிஸாரால் அழைக்கப்பட்டனர்.

வவுனியாவில் உள்ள பிரபல்யமான பாடசாலையின் வளவினுள், கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்கள் மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்கள் இடையே நேற்று முன்தினம் குழு மோதல் இடம் பெற்றுள்ளது.

ஆசிரியர்கள் தலையிட்டு சமரசம் செய்து வைத்தனர்.

நேற்றும் மாணவர் குழுக்கள் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் இரண்டு மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் எட்டுப் பேர் விசாரணைக்காக பொலிஸாரால் அழைக்கப்பட்டனர். (ற-5)

# தொடரும் மழையால் பல இடங்களில் வெள்ளம்

## சிரமங்களின் மத்தியில் கிளிநொச்சி மக்கள்





கிளிநொச்சி, நவ.24

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பெரும்பாலான வீதிகள் - வாய்க்கால் போன்று மாறியுள்ளன. மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பரீட்சைக்கு செல்லும் மாணவாகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைக்குச் செல்கின்றனர்.

தொடர்ச்சியாக கடந்த நான்கு தினங்கள் பெய்து வரும்மழையால்சிறுகுளங்கள்வான்பாய்கின்றன. தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீதிகளில் வெள்ளம் குறுக்கறுத்து பாய்வதால் முறிகண்டி, இந்துபுரம், ஆனந்தநகர் மேற்கு, உருத்திரபுரம், அக்கராயன் மற்றும் தட்டுவன் கொட்டி ஆகிய கிராமங்களின் பாதைகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள காப்பிணித் தாய்மார்கள், முள்ளம்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் போன்றவாகளை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் கார்த்திகேயனின் உதவியுடன் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் மருத்துவர் கார்த்திகேயன் உருத்திரபுரம், சிவன்சோலை கிராமங்களில் வீதி போக்குவரத்து துண்டிக்கப்பட்ட இடங்களில் நின்று அவசர கால உடனடி ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்

கிளிநொச்சியில் - உருத்திரபுரம், பொன்னகர், இரத்தினபுரம், பரந்தன் - சிவபுரம், பண்ணங்கண்டி, மலையாளபுரம் இந்துபுரம், ஆனந்தபுரம் மேற்கு என பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இது வரை வெள்ளத்தினால் இடம்பெயரும் நிலைமை மக்களுக்கு ஏற்படவில்லை. மழை தொடர்ந்தும் பெய்துவருமானால் வெள்ளப்பாதிப்பு மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு இந்த முறையே அதிக வருமானம்

## அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ. 24**
நல்லாட்சி அரசில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த முறைதான் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளது.
இவ்வாறு பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.
கட்டப்பிராயில் நவீன வசதிகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையத்தைத் திறந்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
நாட்டில் உள்ள சகல எரிபொருள் விற்பனை நிலையங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாணத்தில் புதிதாக நவீன முறையிலான எரிபொருள் விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எரிபொருள் விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.
தற்போது கோப்பாய் பிரதேசத்தில் இப்படியாக நவீன வசதிகளுடன் கூடிய எரிபொருள் நிரப்பும் நிலையத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். விவசாய பூமியாகத் திகழும் இந்தப் பிரதேசத்தில் இப்படிப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையம் ஊடாக பிரதேச மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள்.
நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மூவின மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கே இந்த நல்லாட்சி அரசால் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. வடக்கு – தெற்கு மக்களிடையே உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் முகமாக நல்லிணக்கச் செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களை விட, தற்போது வடக்கு மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக நடமாடி வருகின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்லாட்சி அரசில் வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமைகள் வழங் கப்பட்டுள்ளன.
எனது பெற்றோலிய வள அமைச்சின் கீழ் பெற்றோலிய வகை வடக்கில் மேலும் அபிவிருத்தி செய்யப்படும். இங்கே சகல இடங்களிலும் பரவலாக மக்கள் சிரமம் இன்றி பெற்றோலியப் பொருள்கள் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நாட்டில் கூடுதலாக எரிபொருள் நிரப்பும் நிலையங்களை திறந்து வைப்பதன் மூலம், கூட்டுத்தாபனம் அதிக வருவாயைப் பெற்றுக்கொள்ளும். இந்த வருமானம் மூலம் மக்களே அதிக நன்மையடைவார்கள்.- என்றார்.
நிகழ்வில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ரி.ஜி.ஜெயசிங்க மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் சமயத்தலைவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (ந-5,17)



# துர்நடத்தைச் சந்தேகநபர்களுக்கு மறியலை நீடித்தது பரு. நீதிமன்று

**யாழ்ப்பாணம், நவ. 24**
பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த மூன்று சந்தேக நபர்களின் விளக்க மறியலை நீடித்தது பருத்தித்துறை நீதிமன்றம்.
கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பதின்ம வயது சிறுமி கூட்டு துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டார் என்று தெரிவித்து சிறுமியின் பெற்றோரால் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளையும் மேற்கொண்டனர்.
தொடர் விசாரணையில் சிறுமியிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் 8 சந்தேக நபர்கள் இனங்காணப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.
சில நாள்களுக்குள் இரண்டு சந்தேக நபர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஏற்கனவே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
மன்றில் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் சிறுமி இருவரையும் அடையாளம் காட்டியுள்ளார். இந்த நிலையில் இரண்டு சந்தேக நபர்களும் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.
விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்
சிறுமியிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் வாக்கு மூலங்களை அடிப்படையாக வைத்து விசாரணைகளில் இறங்கிய பொலிஸார் பிறிதொரு சந்தேக நபரை சிறப்பு சுற்றி வளைப்பு நடவடிக்கை யொன்றை மேற்கொண்டு கைது செய்தனர்.
குறித்த மூவரும் தொடர்ச்சியாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
சந்தேக நபர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.
வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் மூன்று சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.
(ந-5,109)

# திருமலையில் விபத்து: ஒருவர் உயிரிழப்பு

**மூதூர், நவ.24**
திருகோணமலையில் வீதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த லொறியுடன் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுக்காலை இடம் பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த ஏ. ஆர்.அனஸ் (52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
குறித்த நபர் என்.சீ. வீதியினூடாக மணிக்கூட்டுக் கோபுரப் பகுதி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே விபத்து இடம் பெற்றுள்ளது.
விபத்துத் தொடர்பாக திருமலை தலைமையகப் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(க-ய-40)

# நாடாளுமன்றில் ஒழுக்கத்துடன் நடக்கவேண்டும் உறுப்பினர்கள்

## சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், நவ. 24**
நாடாளுமன்ற விவாதங்கள் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றமையால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டும்.
இவ்வாறு சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.
நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணியளவில சபா நாயகர் தலைமையில் கூடியது. சிறப்பு அறிவித்தல் ஒன்றைவிடுத்து கருத்து வெளி யிடும் போதே சபாநாய கர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.
2017 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பிலான விவாதங்கள் 21 ஆம் திகதி முதல் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தானஅலைவரிசை ஊடாக நேரடியாக ஒளிபரப்பப்படு கின்றது.
கடந்த சில நாள்களாக இடம்பெற்ற விவாதங்களின்போது சில உறுப்பினர்கள் கூச்ச லிட்டு, ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கி அநாகரிக வார்த்தைகளைப் பிரயோகித்து கருத்துக்களை வெளியிட்டார்கள். இந்த நிலையிலேயே சபாநாயகர் கருஜய சூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
நாடாளுமன்ற விவாதங்கள் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றமையால் உறுப்பினர்கள் ஒருவர் ஒருவரை தாக்கிக் கொள்ளாது தத்தமது கருத்துக்களை வெளியிடுங்கள்.
நீங்கள் (நாடாளுமன்ற உறுப்பினர்கள்) இவ்வாறு செயற்பட்டால் அதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு நாடாளுமன்றம் மீதான நம்பிக்கை செயலிழக்கக் கூடும். உறுப்பினர்களை அவதானத்துடன் செயற்படுமாறு நான் இங்கு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ந-5)



# பகிரங்கமாக நீதிமன்றை அவமதிக்கும் பிக்குவை ஏன் கைதுசெய்யவில்லை?

## கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் கேள்வி

**மட்டக்களப்பு, நவ.24**
நீதிமன்ற உத்தரவை மீறி பகிரங்கமாகவே செயற்பட்டு நல்லாட்சிக்குச் சவால் விட்டுக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு பிக்கு மீது இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளதாக கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.
தேரரின் இனவாத செயற்பாடுகளைக் கண்டித்து நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இந்துக் குருமார்கள் நடத்திய அமைதிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற் றிய அவர் மேலும் கூறியதாவது;
நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி செயற்படும் புத்த பிக்குவின் அடாவடி நடவடிக்கைகளை பொலிஸாரும், அதிகாரிகளும் கைகட்டி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பது நாட்டின் நீதித்துறை கேவலத்துக்குள்ளாக்கப்படுகின்றது என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாகும்.
குறித்த பிக்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான அடாவடித்தனங்களில் பகிரங்கமாக ஈடுபடுவதன் மூலம் பேரினவாதம் இந்த நாட்டில் சிறுபான்மை, இனங்களை வாழ விடாது என்பதைப் பறை சாற்றி நிற்கின்றது.
எனவே, அவரைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் சரிந்து போயுள்ள நல்லாட்சியின் நம்பகத்தன்மையை ஓரளவு சரிசெய்து கொள்ளமுடியும் - என்றார்.
(க-ய-46)

# கைக்குண்டு மீட்பு

அம்பாறையின் காரை தீவுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை கைக்குண்டொன்று மீட்கப்பட்டது.
காரைதீவு - கந்தசாமி கோவில் வீதி 2ஆம் குறுக்கு வீதியில் விளம் பரப்பலகை நடுவதற்காக நிலத்தைத் தோண்டிய போதே கைக்குண்டு தென் பட்டுள்ளது.
இதுதொடர்பான தகவல் கிடைத்ததும் சம்பவ இடத் துக்கு விரைந்த பொலிஸார், பொத்துவில் - அறு கம் [illegible] படையினருக்குத் தெரியப் படுத்தியதால் குண்டு மீட்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பாக சம்மாந் துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(க-ய-49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் பிரிக்கப்பட்ட திண்மக் கழிவுகளே இனி அகற்றப்படும்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவுகள் அகற்றலின்போது தரம் பிரித்து வைக்கப்படும் கழிவுகள் மாத்திரமே இனிமேல் மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்களால் எடுத்துக் கொள்ளப்படும். அவ்வாறு செய்யாதவிடத்து அவற்றை மாநகரசபை அகற்றாது. இந்த நடவடிக்கை மிக இறுக்கமாக முன்னெடுக்கப்படும். இவ்வாறு யாழ். மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடுமுழுவதிலும் குப்பைகள் தரம் பிரித்தே அகற்றப்பட்டு வருகின்றன. யாழ். மாநகர சபைதவிர்ந்த ஏனைய மாநகர சபைகளில் இந்த நடவடிக்கை மிக இறுக்கமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உக்கக் கூடிய கழிவுகள், உக்காத கழிவுகள் என்று தரம் பிரித்தே மக்கள் வழங்க வேண்டும். இந்த நடவடிக்கையை நாம் இறுக்கமாக முன்னெடுப்போம்.

சுகாதாரத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் இந்த நடவடிக்கையில் சில தடங்கல்கள் ஏற்பட்டது. எதிர்வரும் காலத்தில் எந்தத் தடங்கலும் இல்லாமல் இந்த நடவடிக்கை மிக இறுக்கமாக முன்னெடுக்கப்படும் - என்றார். (ந-5,7)

## 36ஆவது தேசிய மாணவர் படையணி தலைமைச் செயலக ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 24

36ஆவது தேசிய மாணவர் படையணியின் தலைமைச் செயலகம் கிளிநொச்சி பூநகரி பகுதியில் உள்ள ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இன்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தேசிய மாணவர் படையணி இது வரை காலமும் 20ஆவது தேசிய மாணவர் படையணியின் (யாழ்ப்பாணம்) ஆளுகைக்குட்பட்டிருந்தது. தற்பொழுது 36ஆவது தேசிய மாணவர் படையணியாகப் பிரிக்கப்பட்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

அதன் கட்டளை அதிகாரியாக லெப்ரினட் கேணல் மாரப்பன, நிர்வாக நிறைவேற்று அதிகாரியாக லெப்ரினட் செல்வகுமார், பயிற்சி அதிகாரியாக இரண்டாம் லெப்ரினட் நிசாந் ஆகியோர் செயற்படுகின்றனர்.

தேசிய மாணவர் படையணி கல்வி அமைச்சினதும், பாதுகாப்பு அமைச்சினதும் கீழுள்ள அரச நிறுவனமாகும் என்று 36ஆவது தேசிய மாணவர் படையணியின் தலைமைக் காரியாலய நிர்வாக நிறைவேற்று அதிகாரி லெப்ரினட் ஆர்.செல்வகுமார் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ந-7)

# கூட்டு அரசிலும் ராணுவத்துக்கு காணி பறிப்பு

### வட்டுவாகலில் பகிரங்கமானது பொது அறிவிப்பு

முல்லைத்தீவு, நவ. 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் கடற்படைத் தளம் அமைந்துள்ள பொது மக்களின் காணியை சுவீகரிக்கும் பொது அறிவித்தல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் பகிரங்கப்படுத்தப்பட்டது.

வட்டுவாகலில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் நிலப்பரப்பில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. குறித்த காணிகளை முழுமையாக கையகப்படுத்த காணி சுவீகரிப்புச் சட்டம் 38 ஏ யின் கீழ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பலமுறை காணி அளவீட்டு முயற்சிகள் நடந்துபோதும் அனைத்தும் மக்களின் போராட்டங்கள் காரணமாக அவை தடுக்கப்பட்டிருந்தன.

ஆயினும் காணியை சுவீகரிக்கும் முயற்சிகளை கடற்படையினரும், பாதுகாப்பு அமைச்சும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கமைய பிரதேச செயலாளரால் மீண்டும் சுவீகரித்தல் உத்தரவு பகிரங்கப்படுத்தப்பட்டது.

கடற்படையினருக்கு 617 ஏக்கர் காணியை வழங்குவதில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே பகிரங்க அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. (ந-5,101)





வவுனியா நெடுங்கேணி பிரதேச இளைஞர் தலைமைத்துவ முகாம் வவுனியா மதியாமடு விவேகானந்த வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நெடுங்கேணி பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் கலந்து கொண்டார். (ந-10)



## இந்துக் கல்லூரி வீதி வெள்ளம் வடிய புதிதாகக் கால்வாய்

### யாழ். மாநகர சபை ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு முன்பாக எதிர்காலத்தில் வெள்ள நீர் தேங்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். கில்னர் வீதி ஊடாக கால்வாய் வெட்டி நீரை வெளியேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதியில் மழைவெள்ளம் தேங்குகிறது.

பாடசாலைக்குச் சென்று வரும் மாணவர்கள் மற்றும் அந்த வீதியைப் பயன்படுத்துவோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தேங்கியுள்ள வெள்ளத்தை, நீர் இறைக்கும் இயந்திரத்தின் ஊடாக வெளியேற்றுவதற்கு யாழ். மாநகர சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக கில்னர் வீதியின் ஊடாக கால்வாய் வெட்டி அதன் ஊடாக மழை நீரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

"யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக பள்ளங்களுக்கு மண் நிரவப்படுகின்றன. மழை காலங்களில் அதனை வெட்டி நீரை வெளியேற்றுகின்றனர். இவ்வாறு செய்ய வேண்டாம். மாநகர சபையின் தொழில்நுட்பப் பிரிவினருடனோ அல்லது பிரதேச செயலக தொழில் நுட்பப் பிரிவினருடனோ ஆலோசனைகளைப் பெற்று செலவுகளை மீதப்படுத்தலாம்"- என்று மாநகர சபை ஆணையாளர் குறிப்பிட்டார். (ந-5,7)

## மன்னார் மாவட்டத்தில் வாழ்வாதார உதவிகள்

மன்னார், நவ. 24

மன்னார் மாவட்டத்தில் வீடுகளை திருத்தம் செய்ய முடியாது சிரமங்களுக்கு உள்ளான இரு குடும்பங்களுக்கு வடமாகாண மீன்பிடி அமைச்சர் டெனிஸ்வரனால் வாழ்வாதார உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

இதுகுறித்து வடக்கு அமைச்சர் தெரிவித்ததாவது:

மன்னார் சவுத்பாறை கிராமத்தில் வசிக்கும் வறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு புனரமைப்புக்காக 300 கிடுகுகளும், 5 சிமெந்து பைக்கற்களும் வழங்கப்பட்டன.

குறித்த குடும்பத்தின் வீடு மிகவும் சேதமடைந்திருந்ததைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பணங் கட்டுகொட்டு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் முன்னாள் போராளி அவருடைய வீட்டைச் சீரமைக்க முடியாது சிரமத்தை எதிர்நோக்கியிருந்தார். அவருக்கு இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நன்கொடை நிதியிலிருந்து 15 சிமெந்துப் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன- என்றார். (ந-8)

## கஞ்சாவுடன் கைதானோருக்கு நீடிக்கப்பட்டது விளக்கமறியல்

நெல்லியடி, நவ.24

வடமராட்சி அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில் பகுதியில் 4 கிலோ 100 கிராம் கஞ்சா பொதிகளுடன் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களை எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் பெ. சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

வடமராட்சி அல்வாய் பகுதியில் 4 கிலோ 100 கிராம் கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்ட வழக்கில் நான்கு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஜெயசுதன், விக்னேஸ்வரன், கபில்ராஜ், கௌசிகன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த வழக்குத் தொடர்பில் [illegible] காந்தன், [illegible] ஆகிய சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

குறித்த இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் தேடிவந்த நிலையில் பிரபாகரன் என்ற சந்தேக நபர் ஆதிகோயிலடிப் பகுதியில் வீடொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த சந்தேக நபர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்குமாறு பிணை விண்ணப்பத்தை மன்றில் முன்வைத்தனர்.

விசாரணை முடிவடையாததால் பிணை வழங்க முடியாது என தெரிவித்த நீதிவான் பிணை விண்ணப்பங்களை நிராகரித்ததுடன் சந்தேக நபர்களை தொடர்ச்சியாக மறியலில் வைக்க உத்தரவிட்டார். (ந-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்து-உயிரிழப்பு இவ்வாண்டு அதிகம்

## அமைச்சர் சாகல தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டின் செப்ரெம்பர் மாதம் வரை நடைபெற்ற விபத்துக்களின் உயிரிழப்பு பெருமளவு அதிகரித்துள்ளது. 2015ஆம் ஆண்டு ஆயிரத்து 958 பேர் விபத்துக்களால் சாவடைந்திருந்தனர். இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையில் 2 ஆயிரத்து 207 பேர் விபத்துக்களால் உயிரிழந்துள்ளதாக, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த ஆண்டு உயிரிழப்பை ஏற்படுத்திய ஆயிரத்து 820 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன. இதில் ஆயிரத்து 958 பேர் சாவடைந்தனர். இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையில் 2 ஆயிரத்து 90 உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 2 ஆயிரத்து 207 பேர் சாவடைந்துள்ளனர்.

பாரதூரமான விபத்துக்கள் கடந்த ஆண்டு 4 ஆயிரத்து 985 பதிவாகிய நிலையில், நடப்பு ஆண்டின் செப்ரெம்பர் மாதம் வரை 6 ஆயிரத்து 142 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு சிறு விபத்துக்கள், நட்டம் ஏற்படுத்திய விபத்துக்கள், உயிரிழப்பு விபத்துக்கள் உள்ளடங்கலாக-25 ஆயிரத்து 150 சம்பவங்களும், 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையில் 29 ஆயிரத்து 630 சம்பவங்களும் பதிவாகியுள்ளன - என்றார். (த-5)

# சம்பந்தன் கூறுவதைப் போன்று அரசியல் தீர்வு கிட்டாது

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

மூதூர், நவ.24

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கூறுவதைப்போன்று வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு இன்றோ-நாளையோ தீர்வு கிடைக்கப் போவதில்லை. தமிழ், முஸ்லிம் சமூகத்தில் உள்ள தலைவர்கள் முதலில் ஒன்றுசேரவேண்டும். தலைவர்கள் அதிகரித்துள்ளமை, இரு சமூகத்தினதும் சாபக்கேடாகும் என தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

திருகோணமலை - கிண்ணியா நகரசபை நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற, முகம்மது பௌமியின் நிஜம் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு-கிழக்கு இணைவதோ? பிரிவதோ? வேறுவிடயம். கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் ஒருவர், கிழக்கு மாகாணத்தை ஆளவேண்டியவர்கள் தமிழர்கள் தான் என்று-கூறியிருக்கின்றார். இதைக் கேட்கின்ற முஸ்லிம் சமூகம் வடக்கு-கிழக்கை இணைக்க விரும்புவார்களா?

வடக்கையும்-கிழக்கையும் இணைக்க விரும்பினால், முதலில் முஸ்லிம் மக்களின் உள்ளங்களை வெல்லவேண்டும். அதை இன்னும் கூட்டமைப்பு செய்யவில்லை. இந்த நல்லாட்சியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது என்பதைத் தெரிந்திருந்தும்-சம்பந்தன் இன்னும் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் அவர் - என்றார். (க-ய-40)

# பிணைமுறி விடயத்தில் எனது பணிகள் நிறைவு

## சபையில் கூறினார் பிரதமர்

யாழ்ப்பாணம், நவ. 24

சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரத்தில் எனது பணி நிறைவடைந்துவிட்டது. அடுத்து என்ன வென்பது பற்றிக் கட்சித் தலைவர்களே தீர்மானிக்கவேண்டும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அமைச்சர் என்ற வகையில், மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பிலான எனது பணிகள் யாவும் நிறைவடைந்து விட்டன.

இது தொடர்பிலான கோப் குழுவின் விசாரணை அறிக்கையை நான் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளித்துவிட்டேன். எனது அமைச்சுடன் தொடர்புபட்ட விடயமென்பதால் விசாரணைக்கு முன்னுரிமை வழங்குமாறு கூறினேன். இது விடயத்தில் எனது தரப்பில் எவ்வித தாமதமும் ஏற்படுத்தப்படவில்லை.

அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கட்சித் தலைவர்களும், சபாநாயகருமே முடிவெடுக்கவேண்டும். எனது பணி முடிவடைந்து விட்டது.

சட்டமா அதிபர் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் வழக்குத் தாக்கல் செய்யலாம். தேவையேற்படின் சரத் என்.சில்வா அல்லது மொகான் பீரிஸை கட்சிகளின் அனுமதியைக் கேட்டு, இதில் நியமித்துக் கொள்ளலாம். இதில் எவர் மீது வழக்குத் தொடர்ந்தாலும் எமக்குப் பிரச்சினையே இல்லை - என்றார். (த-5)

# மீரியபெத்த மக்களுக்கு மேலும் 30 புதிய வீடுகள்

பதுளை, நவ.24

பதுளை - மீரியபெத்தை மண் சரிவில் பாதிக்கப்பட்ட மற்றும் அபாயம் எதிர்நோக்கப்பட்ட மேலும் 30 தொழிலாளர் குடும்பங்களுக்குத் தனி வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு ஊவா மாகாண சபை உறுப்பினர் வே.உருத்திர தீபன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மீரியபெத்தை வீடமைப்புத் திட்டத்தில் உள்வாங்கப்படாத இந்த மக்கள், மாகாண சபை உறுப்பினரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து அவர்களுக்கான வீடமைப்புத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

மாகாணசபை உறுப்பினர் உருத்திர தீபன், அமைச்சர் பழனி திகாம்பரத்துடன் மேற்கொண்ட பேச்சின் பேரில், அமைச்சர் குறிப்பிட்ட 30 குடும்பங்களுக்கும் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதியில் இந்த வீட்டுத் திட்ட வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-ய-41)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதில் பரீட்சை 2ஆம் திகதி

மூதூர், நவ.24

கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில், பொது அறிவு வினாத்தாள் இரத்துச் செய்யப்பட்டு, எதிர்வரும் 27ஆம் திகதி பதில் பரீட்சை நடத்தப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உறுதியளித்ததாக திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கடந்தமாதம் நடத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சையில் அறிவித்தலுக்கு முரணான வகையில் பொது அறிவு வினாத்தாள் அமைந்திருந்தது. இதனால் பரீட்சார்த் திகள் ஏமாற்றமடைந்ததுடன், அது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர். இம்ரான் கவனத்துக்கும் கொண்டு சென்றனர்.

அவர் இதனை ஆளுநரின் கவனத்திற்கு உடன் கொண்டு வந்தார். அதற்கு அனுப்பியுள்ள பதிலிலேயே ஆளுநர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். (க-ய-40)

# விபத்தில் காயமடைந்தவர் சாவு

பதுளை, நவ.24

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர், சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்துள்ளார்.

பெரகலை - வெல்லவாய வீதியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து, மதகொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது. (க-ய-41)

# இராணுவப் புலனாய்வு செயற்பாடுகள் ஆராய்வு



கொழும்பு, நவ. 24

இலங்கை இராணுவப் புலனாய்வுப் படைப் பிரிவின் பிரதானியாகப் பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் சுதந்த ரண சிங்க, புலனாய்வு அதிகாரிகளுடன் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

அண்மையில் இராணுவப்புலனாய்வுப்பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் சுரேஸ் சாலி, இராணுவப் புலனாய்வுப் பிரிவுத் தலைமையகத்துக்கு மாற்றப் பட்டிருந்தார். அதேவேளை, இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவின் பிரதானியாக இருந்த, மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் அந்தப் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில், இராணுவப் புலனாய்வுப் படைப் பிரிவின் பிரதானியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, கடந்த 16ஆம் திகதி, கரந்தெனியவில் உள்ள இராணுவப் புலனாய்வுப் படைப் பிரிவு தலைமையகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அவர் பதவியேற்றுக்கொண்ட பின்னர், இராணுவப்புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி களைத் தனியாகவும், புலனாய்வுப்படைப் பிரிவைச் சேர்ந்த படையினரைத் தனியாகவும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இதன்போது, இராணுவப் புலனாய்வுத் துறையின் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன. (த)

# 18 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 23

சட்டவிரோதமாக 18 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்களை நாட்டுக்குள் கொண்டு வர முற்பட்ட நபரொருவரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, சுங்கப்பிரிவினர் கைது செய்தனர். டுபாயில் இருந்து நாட்டுக்கு வருகை தந்த இலங்கையர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டார்.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளைச் சுங்கப் பிரிவினர் கையகப்படுத்தியதுடன், குறித்த சந்தேகநபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப் பட்டதாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (த)

# அவிசாவளையில் விபத்து; இளம் தம்பதி உயிரிழப்பு

கொழும்பு, நவ. 24



அவிசாவளை மஹதொல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் கணவன் - மனைவி ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டி ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. இதன்போது முச்சக்கர வண்டியில் பயணித்த அவிசாவளையைச் சேர்ந்த 30 வயதான கணவரும், 28 வயதான மனைவியும் உயிரிழந்ததாகப் பொலிஸார் கூறினர். இது தொடர்பான விசாரணைகளை அவிசாவளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ்நாட்டு மலை உச்சியில் முருகனுக்கு ஆலயம்

யாழ்ப்பாணம், நவ. 24
சுவிற்ஸர்லாந்தின் அல்பன் மலையின் உச்சியில் சோமஸ்கந்தவேல் என்ற நாமத்தில் முருகன் ஆலயம் சுவிஸ் நாட்டு பக்தர்களால் அமைக்கப்பட்டு கும்பாபிசேகம் நடத்தப்பட்டுள்ளது. ஆலயத்தில் சமய விதி முறைப்படி உற்சவங்கள், பூசைகள் நடைபெறுகின்றன.
1994 ஆம் ஆண்டு சுவிஸைச் சேர்ந்த துறவிகள் மனதில் உதித்த கனவின் அடிப்படையில் ஆலயம் அமைப்பதற்கான அத்திபாரம் இடப்பட்டது. 2011 ஆம் ஆண்டு ஆலயம் அமைக்கும் பணிகள் பூர்த்தியாகின. அதன் பின்னர் ஆலய மூர்த்திகள் அமைக்கும் பணி பூர்த்தியாகியது.
சுவிஸ் இனத்தைச் சேர்ந்த குருமார்கள், தமிழகத்திலிருந்து வந்த இந்துக் குருக்களின் உதவியுடன் கும்பாபிசேகம் செப்ரெம்பர் மாதம் நடைபெற்றது.
இந்த முருகன் ஆலயத்தில் மூலமூர்த்தியாக சோமஸ்கந்தர் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளார். மூன்றுதலை நாகத்துடன் சிவன், அம்பாள், முருகன் கொண்ட சோமஸ்கந்தராக மூலவர் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளார். ஆலய உட்பிரகாரத்தில் பிள்ளையார், நவக்கிரகம், நந்தி போன்ற மூர்த்தங்களுக்கு தனி ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்துடன் இணைந்து 80 பேர் தங்கக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. லண்டனில் மலைப் பகுதியில் அமைந்துள்ள வேல்ஸ்முருகன் ஆலயத்தின் கிளையாக இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தில் வாரமொரு தடவை தியானப் பயிற்சியும் கருத்தரங்கமும் நடத்தப்படுகின்றன. (ற-5)

## 50 வருமான பரிசோதகர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் நியமனம்

திருமலை, நவ.24
கிழக்கு மாகாணத்தில் வருமான பரிசோதகர்கள், புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 50 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.
கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவானவர்களுக்கு நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மாகாணசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இதில் வருமானப் பரிசோதர்கள் 29 பேருக்கும், புலனாய்வு உத்தியோகத்தர்கள் 09 பேருக்கும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 12 பேருக்கும் நியமங்கள் வழங்கப்பட்டன. (த-ய-45)

## காதலியின் தந்தைக்கு அசிட் வீசிய சிப்பாய்

விளக்கமறியலில்

பதுளை, நவ.24
பதுளை - வெலிமடை பிரதேசத்தில் காதலியின் தந்தைக்கு அசிட் வீசிய குற்றச்சாட்டில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
சந்தேகநபர் ஏற்கனவே திருமணமான நிலையில் பெண் ஒருவரை காதலித்துத் திருமணம் செய்துகொள்வதாகக் கூறி அழைத்துச் சென்றார்.
எனினும், சந்தேகநபர் ஏற்கனவே திருமணம் முடித்து ஒரு பிள்ளைக்கு தந்தையென்பதை அறிந்த காதலியின் தந்தை தனது மகளை வீட்டுக்கு அழைத்துவந்ததுடன் இது தொடர்பாக வெலிமடைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்தார்.
இதையறிந்த சந்தேகநபர் காதலியின் தந்தையின் முகத்தில் அசிட்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றபோது கைது செய்யப்பட்டார். பொலிஸாரைக் கண்டதும் சந்தேகநபர் கிருமி நாசினி அருந்தியதால் அவர் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டுப் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றார். (த-ய-41)

# மகிந்தவின் பிறந்த தினமன்று பலத்தைக் காட்டியது நல்லாட்சி

## அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 24
முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவின் பிறந்த நாளன்று 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை நிறைவேற்றி சக்திமிக்க நிலையான அரசு என்பதை தேசிய அரசு நிரூபித்துள்ளது. இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. அதில் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கடந்த நவம்பர் 18 ஆம் திகதி குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்சவின் 72 ஆவது பிறந்த தினமாகும். அதற்கு அடுத்த நாள் 19 ஆம் திகதி முக்கிய நாள். அன்றுதான் முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவின் பதவிக் காலம் முடியும் காலமாகும்.
நாட்டு மக்களின் அதிஷ்டம், (மகிந்தவின் ஆஸ்தான சோதிடர்) சுமணதாஸவின் கணிப்பு மற்றும் (முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர்) பி.பி.ஜயசுந்தரவின் பொருளாதார நடவடிக்கை என்பவற்றால் (பதவிக்காலம் நிறைவடைவதற்கு) 2 ஆண்டுகளுக்கு முன்னரே தேர்தலுக்கு சென்றார். இதனூடாக அந்த அடக்குமுறை யுகத்துக்கு முடிவுகட்ட முடிந்தது.
தேசிய அரசின் வரவு செலவுத் திட்டம் 18 ஆம் திகதிதான் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. 2 ஆவது வரவு செலவுத் திட்டத்தையும் நிறைவேற்றி எமது அரசு சக்திமிக்க- நிலையான அரசு என்பதை எம்மால் காட்ட முடிந்துள்ளது. என்றார். (ற-5)

## வரிச்சுமை 2018இல் குறையும்

அம்பாறை, நவ.24
கடந்த அரசு பெற்றுக்கொண்ட கோடிக்கணக்கான கடன்களினால் மக்கள் பெரும் வரிச்சுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். 2018 ஆம் ஆண்டில் இந்த வரிச்சுமைகள் குறைக்கப்பட்டு விடும் என சுகாதார பிரதியமைச்சர் பைசால் காசிம் தெரிவித்தார்.
நிந்தவூரில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது:
இந்த வரவு-செலவுத்திட்டத்தில் கடந்த அரசு பெற்ற கோடிக்கணக்கான கடன்களை மீளச்செலுத்த வேண்டிய நிலமை தோன்றியதாலேயே வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.
இந்த வரிச்சுமையானது எதிர்வரும் 2017 ஆம் ஆண்டோடு நீங்கிவிடும். 2018 ஆம் ஆண்டளவில் வரிச்சுமைகள் குறைக்கப்பட்டு நாட்டில் ஸ்திரமான பொருளாதார உட்கட்டமைப்புடன் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (த-ய-48)

# ஊவா தமிழ்க் கல்வித் துறையில் அரசியல் தலையீட்டை நிறுத்துக

## ஊவா உரிமைகளுக்கான ஒன்றியம் கோரிக்கை

பதுளை, நவ.24
ஊவா மாகாண தமிழ்க் கல்வித் துறையில் அரசியல் தலையீடுகள் நீக்கப்படவேண்டும் என ஊவா உரிமைகளுக்கான ஒன்றியம் கோரியுள்ளது.
அதிபர், ஆசிரியர்களைத் தனிப்பட்ட முறையில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.
ஊவா மாகாணத்தின் அனைத்து சிவில் அமைப்புகளையும் ஒன்றிணைத்த இந்த ஒன்றியம் இது தொடர்பாக நேற்றுமுன்தினம் மாகாண முதலமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளது.
ஊவாவில் அண்மையில் வழங்கப்பட்ட அதிபர் நியமனங்களில் முறையற்ற தெரிவுகள் இடம் பெற்றிருப்பதாக அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
புதிய நியமனங்களில், ஒருவர் அதிபராகவும், ஏனையவர்கள் உப அதிபர்களாகவும் நியமிக்கப்பட்டிருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.
இத்தகைய விரும்பத்தகாத செயற்பாடுகள் அகற்றப்பட்டு, மாகாணத்தின் தமிழ்க்கல்வி உயர் நிலை பதவிகளுக்கு, அரசியல் சாரா, துறைசார் சிரேஷ்ட நிபுணத்துவமிக்கவர்களை நியமிக்க வேண்டும். அல்லது தொடரும் பட்சத்தில், பெரும்போராட்டமொன்றை மேற்கொள்ள தயாராகவுள்ளதாக ஒன்றியத்தின் மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ய-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பூர்வீக வரலாறு பாடங்களில் மறைகின்றது

## வரலாறுகள் திரிபுபடுத்தப்படுகின்றன என சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 24

தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வரலாறுப் புத்தகங்களில் பூர்வீக தமிழர்களின் வரலாறு கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படுகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கல்வியமைச்சு மீதான குழு நிலை விவாவதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வரலாற்று புத்தகங்களில் தமிழர்களின் வரலாறுகள் அழிக்கப்பட்டுள்ளன. தமிழ் மன்னர்கள் தொடர்பில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. ஆயிரம் வருடங்கள் வரலாற்றைக் கொண்ட முஸ்லிம்களின் தொடர்பில் அந்த வரலாற்றுப் புத்தகங்களில் ஒரு வசனமேனும் இல்லை.

6,7,8 மற்றும் 9 ஆம் தர மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரலாற்றுப் புத்தகங்களின் தமிழர்களின் வரலாறுகளே இல்லை. சித்திரத்தில் அதனை விடவும் மோசமான நிலமையொன்றே உள்ளது. சித்திரங்கள், வடிவங்கள் மற்றும் கலை வடிவங்கள் சிங்கள மரபையே கொண்டிருக்கின்றன. தமிழ் மரபுகள் முற்றாக மறைக்கப்பட்டுவிட்டன.

சிங்களவர்கள், ஆரியர்களாக இங்கு வருவதற்கு முன்னமே, தமிழர்கள் இரண்டு இனங்களாக இங்கிருந்தனர். அவையெல்லாம் மறைக்கப்பட்டு, வரலாறு திணிக்கப்படுகின்றது. ஆங்கிலேயருக்கு எதிராக சிங்களவர்கள் மட்டுமன்றி தமிழர்களும் போராடினர். இந்து– பௌத்த பாடசாலையை சேர்.பொன்.இராமநாதனே நிறுவினார். போயா தினத்தை விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என்ற யோசனையையும் அவரே முன்வைத்தார். இவையெல்லாம் மறக்கப்பட்டு விட்டன.

வரலாறு திரிபுபடுத்தப்பட்டு, மாற்றப்பட்டு பலவந்தமாகத் திணிக்கப்படுவதனால், இனங்களுக்கு இடையில் கசப்பான உணர்வுகளே தோற்றுவிக்கப்படுகின்றன - என்றார். (ற-5)

# கோப் முன்னிலையில் 22 அரச நிறுவனங்கள்

கொழும்பு, நவ.24

22 அரச நிறுவனங்களை கோப் குழுவிடம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கூடிய கோப் குழுவின் கூட்டத் தொடரின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

குறித்த அரச நிறுவனங்கள் தொடர்பில் கணக் காய்வாளர் நாயகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

குறித்த 22 அரச நிறுவனங்கள் தொடர்பிலும் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ற)

# சமர விக்கிரமவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, நவ.24

சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுக்கு எதிராக, இலஞ்ச ஊழல் ஆணைக் குழு வில் கூட்டு எதிர்கட்சியின் உறுப்பினர்களால் நேற்று முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

அமைச்சர் மலிக் சமர விக்கிரமவுக்கு எதிராக மோசடிகளுக்கு எதிரான பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்று மகிந்த தரப்பு கூட்டு எதிர்க்கட்சி முன்னர் அறிவித்திருந்தது.

1.5 பில்லியன் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டே அவர் மீது சுமத்தப்படவுள்ளது என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தாநந்த அளுத்கமகே தெரிவித்திருந்தார். (ற)

# அரச நிறுவனங்கள் மூலம் 600 பில்லியன் ரூபா இழப்பு

கொழும்பு, நவ.24


2014 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையிலான ஆட்சியின் போது 250 அரச நிறுவனங்களில் அதிக இழப்பு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அரச பொது முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன இதனைத் தெரிவித்தார்.

குறித்த 250 நிறுவனங்களின் மூலம் 600 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. அரசியல் தலையீடு மற்றும் முறையற்ற நிர்வாகம் காரணமாகவே இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். (ற)

# வாகனங்களுக்கு ஸ்ரிக்கர்



திருமலை, நவ.24

திருகோணமலை - உப்புவெளிப் பொலிஸாரும், அநுராதபுர சந்தியிலுள்ள விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலய மாணவர்களும் இணைந்து நடத்திய போக்குவரத்து விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இதன்போது வாகனச்சாரதிகளைத் தெளிவு படுத்தும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் வாகனங்களுக்கு விசேட ஸ்ரிக்கர் களும் ஒட்டப்பட்டன.

உப்புவெளிபொலிஸ்பொறுப்பதிகாரி டி.ஏ.ஜானக ஜயரட்ண தலைமையில் இடம்பெற்ற இவ்விழிப்புண ர்வு நிகழ்வில் போக்கு வரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.திஸாநாயக்கவும் கலந்துகொண்டார்.

இதில் பாடசாலை மாணவ ர்கள் வாகனங்களில் ஸ்ரிக்கர்களை ஒட்டி சாரதிகளுக்கு அறிவுறை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-ய-45)

# பாலம் உடைந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு

நுவரெலியா, நவ.24

நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன் - டயகம பிரதான வீதியின் போடைஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் பாலம் ஒன்று இடிந்து விழுந்ததனால் அவ்வீதியினூடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாலத்தின் அரைவாசிப் பகுதியே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது. இதனால் சிறிய ரக வாகனங்கள் ஒருவாறு பயணிக்கக் கூடியதாகவுள்ளது.

மேலும், அவ்வீதியினூடாக அக்கரப்பத்தனை மற்றும் டயகம ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து போடைஸ் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ்வீதியினூடாக பாரவூர்த்திகள் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாலம் உடைந்துள்ளதால் பயணிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-ய-43)

# அடையாளம் தெரியாது 3,500 காச நோயாளர்கள்

## சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு, நவ.24

நாட்டில் 3 ஆயிரத்து 500 அடையாளம் காணப்படாத காச நோயளர்கள் உள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அதனால் காச நோயை கட்டுப்படுத்துவதில் சிக்கல் தன்மை காணப்படுகின்றது என்று வைத்தியர் காந்தி ஆரியரத்ன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த 5 வருடங்களில் நாட்டில் 9 ஆயிரத்து 500 காச நோயார்கள் இனங்காணப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் காச நோயைப் பரிசோதிப்பதற்கு வசதிகள் உள்ளன.

6 மாதங்கள் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றால் காச நோயிலிருந்து முற்றாக விடுபடலாம்.- என்றார்.(ற)

# கஞ்சா விற்ற பெண் கைது

பதுளை, நவ.24

பதுளை - கந்தகெட்டிய பிரதேசத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரது கைப்பையிலிருந்து பதப்படுத்தப்பட்ட 49 கஞ்சாப் பைக்கற்றுக்களை மீட்டதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர். இவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (க-ய-41)

# பாடசாலைகளின் தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு விசேட நிதி ஒதுக்கீடு

செங்கலடி, நவ. 24

கிழக்கு மாகாணப் பாடசாலைஉகளில் நிலவும் தளபாடப் பற்றாக்குறைகளை நிவர்த்திப்பதற்கு விசேட நிதி ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் செவ்வாய்கிழமை மாகாண முதலமைச்சர்களுடனான கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உள்வீதிகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்குவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதன்போது, மாகாணங்களுக்கு வழங்கப்படும் அனைத்து நிதியொதுக்கீடுகளும் எதிர்வரும் மாதத்திற்குள் வழங்கப்பட வேண்டும் என நிதியமைச்சருக்குப் பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, தற்போது நாட்டில் தலைதூக்கியுள்ள இனவாதச் செயற்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (க-ய-47)

# படகுச்சேவை ஆரம்பம்

செங்கலடி, நவ.24

மட்டக்களப்பு - ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி சந்தனமடு ஆற்றின் இறங்குதுறையில் படகுச்சேவை கடந்த 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக சித்தாண்டி சந்தனமடு ஆறு பெருக்கெடுத்துள்ளது.

இதன் காரணமாக ஈரளக்குளம், வேரம், இலுக்குப்பொத்தானை, பெரியவட்டவான் மற்றும் பெருமாவெளி ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி இப் படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பாதையூடாக நாளாந்தம் சுமார் நானூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பிரயாணத்தை மேற்கொள்வதாக படகுச்சேவையின் உரிமையாளர் தெரிவித்தார். (க-ய-47)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகாண விவசாய கூட்டுறவு அமைச்சின் வேண்டுகோளின் பிரகாரம் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் நேற்று சங்க வளாகத்தில் மரம் நடுகைத் திட்டத்தை ஆரம்பித்தனர். சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வை சங்கப் பணியாளர் மரக் கன்று நட்டு ஆரம்பித்து வைத்தார். சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ற-9)

# மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட மருத்துவ சேவை யாழ்ப்பாணத்துக்கும்

## வடக்கு சுகாதார அமைச்சரின் இணைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 24
வடக்கு சுகாதார அமைச்சரால் படுக்கையிலிருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சேவை ஆரம்பிக்கப்பட்டுள் ளது. மிக விரைவில் இந்தச் சேவை யாழ்ப்பாண மாவட்டத்தி லும் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகா தார அமைச்சரின் இணைப்பாளரும், கலை மகள் நற்பணி மன்றத்தின் தலைவருமாகிய பாலச் சந்திரன் சிந்துஜன் தெரி வித்தார்.

பருத்தித்துறையில் 'கருணை உள்ளம்' வலிந் துதவு சமூக அமைப்பின் ஏற்பாட்டில் மாற்றுத்திற னாளிகள் மற்றும் பெற் றோரை இழந்த குழந் தைகளுக்கான உதவி கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைப் பின் செயலாளர் திருமதி கலா ஜினி தலைமையில் நடை பெற்றது.

அதில் முதன்மை விருந்தின ராகக் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சுகாதார அமைச்ச ரின் இணைப்பாளரும், கலைம கள் நற்பணி மன்றத்தின் தலைவருமாகிய பாலச்சந்திரன் சிந்துஜன் அனுப்பிய ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது- உடல் ஊனம் என்பது ஒரு குறையல்ல. எம் மில் பலர் உடலால் முழுமை யாய் இருப்பினும் உள்ளத்தில் பல குறைகளுடன் இருக்கின் றார்கள். அவ்வாறானவர்களே ஊனமானவர்கள். உடலில் குறைகள் இருப்பினும் மனதில் தைரியம் கொண்டு பல சாதனை கள் செய்துவரும் உடல் ஊன முற்றவர்கள் எம்மிலும் உயர்ந்த வர்கள். சுகாதார அமைச்சரின் முயற்சியின் மூலம் ஒஸ்ரியா நாட்டின் நிதியுதவியுடன் பருத்தி த்துறை வைத்தியசாலையில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக் கின்றன.

> “உடல் ஊனம் என்பது ஒரு குறை யல்ல. எம்மில் பலர் உடலால் முழுமையாய் இருப்பினும் உள் ளத்தில் பல குறைகளுடன் இருக் கின்றார்கள். அவ்வாறானவர்களே ஊனமானவர்கள். உடலில் குறை கள் இருப்பினும் மனதில் தைரியம் கொண்டு பல சாதனைகள் செய்து வரும் உடல் ஊன முற்றவர்கள் எம்மிலும் உயர்ந்தவர்கள்.”

இலங்கையில் முதல் முறையாக வடக்கு மாகாணத்தில் இலவச அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த சேவையில் அனைத்து மக்களும் பயன்பெற முடியும். - என்றுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித் துறையைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக் கான உதவிப் பொருள் கள் வழங்கப்பட்டன. பெற் றோரை இழந்த பிள்ளை கள் மற்றும் அநாதரவானோ ருக்கான கொடுப்பனவுகளும், உதவிப்பொருள்களும் 'கருணை இல்லம்' அமைப் பினரின் ஏற்பாட்டில் வழங்கப் பட்டன. (ற-10)

# இனவாதம் பேசும் தேரர்களின் மீது நடவடிக்கை எடுக்க தயக்கம் ஏன்?

## வடமாகாண சபை உறுப்பினர் சிவநேசன் கேள்வி

முல்லைத்தீவு, நவ. 24
கொக்கிளாயில் அத்துமீறி செயற் படும் துறவி மீது பௌத்த மத பீடங்களும், அரசும் உரிய நட வடிக்கைகள் எடுத்திருந்தால் சாம் பல்தீவு, மாணிக்கமடு போன்ற இடங்களில் மேற்கொள்ளபட்ட நல்லிணக்க சீர்குலைவு நடவ டிக்கைகள் தடுக்கப்பட்டிருக்கும். இன்று மட்டக்களப்பில் பௌத்த துறவியின் காடைத்தனமும் அரங்கேறியிருக்காது.

இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் கந்தையா சிவ நேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு விகாராதிபதியின் செயற்பாட்டைக் கண்டித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையில் அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

கடந்த காலங்களாக எமது பகுதி களில் பலவந்தமாக நிறுவப் படும் பௌத்த விகாரைகள். சில பிக்குகளின் நடவடிக்கைகளால் கவலை அடைந்துள்ளோம். அதன் உச்சக்கட்டமாக மட்டக் களப்புமங்களராமவிகாராதிபதிஅம்பி பிட்டிய சுமணரத்தின தேரரின் நடடிவக்கை அமைந்துள்ளது.

நல்லொழுக்கங்களை போதிக் கும் பௌத்த மதத்தின் பிக்கு ஒரு வரின் நடவடிக்கை அனைத்து பௌத்தர்களும் வெட்கப்பட வேண்டிய விடயமாகும். சட்டங் களை மதிக்காது செயற்படும் பிக்குவுக்கு எதிராக சட்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளாதது. அரசும் இதற்கு துணைபோகின் றது என்றே பொருள் கொள்ள வேண்டி உள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் பௌத்ததுறவிகள்கூட பேரினவாத ஆக்கிரமிப்புச் செயல் பாட்டாளர்கள் எனும் நீண்டகால எண்ணப்பாட்டை வலுப்பெறச் செய்யும்.

தெற்கில்வன்முறையைத்தூண்டு வதாக குற்றம்சாட்டி, சுரேன் பிரியசாந்தவையும், அப்துல் ராசிக்கையும் கைது செய்ய முடியுமாயின், அதே குற்றத்தை தைரியமாக செய்துகொண்டிருக் கும் சுமணரத்தின தேரரை கைதுசெய்ய முன் வராதது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது. இந்த நாட்டின் பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு சார்ந்த கொள்கைகளும் செயற்பாடுகளும் கூட தமிழ் மற் றும் சிங்களம் பேசும் பிரதேசங் களில் முற்றிலும் எதிர்மறையா னது என்பதையும் நிரூபிக்கின் றது.

போர் முடிவுற்றிருக்கும் நிலை யில் இனங்களுக்கிடையே கட்டி யெழுப்பப்படவேண்டிய நல்லிணக்க நடவடிக்கைகளும், அரசியல் தீர்வு நடவடிக்கைகளும் காத்திர மானதாக முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் பௌத்தமத பீடங்களின் பங்குபற்றலும், பணி யும் மிகமிக அவசியமானது என்பது யதார்த்தமானது.

இவ்வாறான நிலையில் பௌத்த மதத்தின் பெயரால் துறவிகள் மேற்கொள்கின்ற அடாவடித் தனங்களை கட்டுப்படுத்தவும், தடுத்து நிறுத்தி நெறிப்படுத்தவும் பௌத்தமத பீடங்கள் உடனடி யாக செயற்பட வேண்டும். பௌத்த மத ஒழுங்கங்களை கட்டிக்காத்து, பௌத்த சிங்கள மக்களை உயரிய மனித விழு மியங்களை கடைப் பிடிக்கும் சமூகமாக வழிநடத்த முன்வர வேண்டும் என்றும் பகிரங்கமாக வேண்டுகோள் ஒன்றினை தமிழ் மக்கள் சார்பில் வினய மாக முன்வைக்கின்றேன் - என்றுள்ளது. (ற-7,102)

# யாழ்ப்பாணத்தில் மக்கள் குறைகேள் மையம் உருவாக்கம்

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுமக்களின் குறை களைத் தீர்க்கும் பொருட்டு பொதுமக்கள் குறைகேள் மையம் மாவட்ட மேலதிக செய லாளர் பா.செந்தில்நந்தனின் தலைமையில் உருவாக்கப்பட் டுள்ளது. பொதுமக்கள் தமது குறைகளை நேரடியாகவோ அல்லது 021 222 5000 என்ற தொலைபேசி இலக்கத் துக்கு அழைப்பெடுத்தோ தெரிவிக்க முடியும் குறைகேள் மையத்துக்கு பொதுமக்கள் தகவல் வழங்கும்போது சம்பவம் தொடர்பான தகவல்களுடன் ஒளிப்படம், காணொலி போன்ற ஆதாரங்களையும் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. தகவல்கள் தொடர்பான இரகசியம் காக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அவை தொடர்பில் இறுக்கமான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-8)


# படகில் தினமும் சென்று பரீட்சை எழுதும் அவலம்

## எழுவைதீவில் பரீட்சை மண்டபம் அமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாணம், எழுவைதீவு மாண வர்களுக்கு அதிகாரிகளால் வழங்கப்பட்ட உத்தரவாதம் இந்த ஆண்டும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று பிர தேச மக்கள் கவலை வெளியிட்ட னர்.

எழுவை தீவில் உள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு எழுவைதீவிலேயே பரீட்சை மண் டபம் அமைக்க வேண்டும் என்று 2014ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுகின்றோம். ஒவ்வொரு முறையும் அடுத் தாண்டு பரீட்சை நிலையம் அமைக்கப்படும் என்று அதிகாரி கள் தெரிவிப்பார்கள். ஆனால் நடைபெறவில்லை. இந்த ஆண்டின் ஆரம்பம் முதலே இது குறித்து அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தோம். முயற்சி எடுக்கின்றோம் என்று அவர்கள் பதிலளித்தனர். இந்த ஆண்டும் பரீட்சைமண்டபம் எழுவைதீவில் இல்லை. கொட்டும் மழையில் படகில் தினமும் பயணித்து பரீட்சை எழுத வேண்டிய துர்ப் பாக்கிய நிலையே எமது பிள் ளைகளுக்கு ஏற்பட்டுள்ளது - என்று அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

எழுவைதீவில் பரீட்சை மண்ட பம் அமைக்கக் கோரியிருந் தோம். 13 மாணவர்கள் மட்டுமே உள்ள தீவுக்குத் தனியான பரீட்சை மண்டபம் அமைக்க அனுமதியில்லை என்று பரீட் சைத் திணைக்களம் மறுத்து விட்டது - என்று தீவக வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித் தார். (ற-101)



# இளைஞர்களுக்கான சிறப்புச் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், நவ. 24
இனங்களுக்குள் நல்லிணக்கம் எனும் தொனிப்பொருளில் இளைஞர்களுக்கான சிறப்புச் செயற்றிட்டம் மன்னாரில் நடத்தப் படுகின்றது என்று அரச சார்பற்ற நிறுவனமான எஸ்.எப்.சி.ஜி ஆலோசகர் சின்கிளேயர் பீற்றர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களான எஸ்.எப்.சி.ஜி மற்றும் சர்வோதயா ஆகிய நிறுவனங்கள் இணைந்து மன்னார் மாவட் டத்தில் செயற்றிட்டத்தை நடத்தி வருகின்றது.

கடந்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் இந்த மாதம் வரை இளைஞர்களின் திறமைகளை வெளிக் கொணரும் நோக்கில் முன்னெடுக்கப்படுகின்றது. திறமைகள் அடிப்படையில் 100 இளைஞர்கள் இனம்காணப்பட்டு பயிற்சி வழங்கப்படுவதுடன் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

ஓவியப்போட்டி, சிரமதானப்பணிகள், சகோதர மொழி கற்கைகள் என்பனவும் நடைபெறுகின்றன. சகல இனத்தவர்களும் இணைந்து இந்த செயற்றிட்டத்தின் கீழ் இயங்கி நன்மை அடைவதுடன், நல் லிணக்க ரீதியில் குறித்த திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.- என்றார். (ற-எ-10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பில் கேட்ஸுக்கு உயர் கௌரவம்

அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு, உலக அமைதி, கலை, விளையாட்டு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆற்றும் சேவைகளை கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் சுதந்திர பதக்கம் என்ற உயரிய விருது வழங்கப்படுகிறது. நடப்பு வருடத்துக்கான விருது வழங்கும் நிகழ்ச்சி வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

உலகம் முழுவதும் போலியோ நோயை ஒழிப்பதற்காக சேவை புரிந்த பில் கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலின்டா கேட்ஸ் ஆகியோருக்கு அதிபர் பராக் ஒபாமா இந்த விருதினை வழங்கிக் கௌரவித்தார். அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் ஆராய்ச்சிக்கு துணையாக இருக்கும் அறிவியலாளர் மார்க ரெட் ஹமில்டன் உட்படப் பலருக்கும் குறித்த விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ம-எ)





## ஹிலாரி விசாரிக்கப்படார் ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு

மின்னஞ்சல் மோசடிக் குற்றச்சாட்டில் ஹிலாரி மீது மீண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப்.

அமெரிக்காவில் 58 ஆவது ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் முக்கிய வேட்பாளரான ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியில் வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனைத் தோற்கடித்து ஜனாதிபதியானார். ட்ரம்ப் தனது தேர்தல் பரப்புரையில், அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சராக ஹிலாரி செயற்பட்ட காலத்தில் அரச தேவைகளுக்கு தனது தனிப்பட்ட மின்னஞ்சலைப் பயன்படுத்தினார் என்று குற்றம் சுமத்தினார். ஹிலாரியும் அதை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஊழல் மோசடிகள் ஏதும் செய்யவில்லை என வாதிட்டார். தேர்தலின் இறுதிக்கட்டத்தில் ஹிலாரி பெரும் பின்னடைவைச் சந்திக்க ட்ரம்பின் இந்தக் குற்றச்சாட்டு முக்கிய பங்காற்றியது. தவிர தான் அமெரிக்க ஜனாதிபதியானால் ஹிலாரி மீது முழுமையான விசாரணை நடத்தப்படும், ஹிலாரி சிறையில் தள்ளப்படுவார் என்றெல்லாம் தெரிவித்திருந்தார். தற்போது முற்றிலும் முரணான நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தினார்.

அமெரிக்க புலனாய்வுத்துறை தேர்தல் காலத்தில் குறித்த குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடத்தி ஹிலாரி குற்றமற்றவர் என்று அறிக்கை சமர்ப்பித்த நிலையில் குறித்த முடிவே இறுதியானது என ட்ரம்ப் கருதுகிறார் என்று அவரது ஆலோசகர் கெல்லியன் கான்வே தெரிவித்தார். (ம-எ)

## 100 நாள் திட்டத்தை வெளியிட்டார் ட்ரம்ப்

வொஷிங்ரன், நவ. 24

அமெரிக்க ஜனாதிபதியாகதெரிவாகியுள்ளட்ரம்ப், தான் பதவியேற்ற பின்னர் முதல் நூறு நாள்களில் செய்யப்போகும் திட்டங்கள் தொடர்பான அறிக்கையைநேற்றுமுன்தினம் வெளியிட்டார்.

புதிய வர்த்தக ஒப்பந்தங்கள், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வர்த்தகஒப்பந்தங்களைதொடர்வது தொடர்பான பரிசீலனைகள், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கும் வழிவகைகள், நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகள், இணைய ஊடுவல்களைக் கட்டுப்படுத்தல், இனப் பிரச்சினைகள் தொடர்பான புதிய தீர்வுகள் என்பன அந்த அறிக்கையில் உள்ளன என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



## குள்ளமான தம்பதியர்

லண்டன், நவ. 24

உலகின் மிகக் குள்ளமான தம்பதியர் என்ற கின்னஸ் சாதனை பதிவை பிரேசிலைச் சேர்ந்த தம்பதியர் படைத்துள்ளனர்.

போலோ காபிரியேல் மற்றும் கற்யுச்சியா லி என்ற தம்பதியரே குறித்த சாதனையைப் படைத்துள்ளனர். இருவரது உயரமும் 71.42 அங்குலங்கள் ஆகும். இந்தத் தம்பதியரின் திருமணம் லண்டனில் நடைபெற்றது. (ம-எ)

## தென்கொரிய அதிபரின் நிறுவனங்களில் நேற்றுமுன்தினம் திடீர்ச் சோதனை



தென்கொரியாவின் ஜனாதிபதியாகப்பதவிவகிக்கும்பார்க் ஜியுன் ஹையின் நண்பியின் அலுவலகங்களில் நேற்றுமுன்தினம் வருமான வரித் துறையினரால் திடீர் சோதனை நடத்தப்பட்டது.

பார்க் ஜியுன் ஹையின் நெருங்கியநண்பியானசோய் சூன்-சில்என்பவர்இருபெரும் தொண்டு நிறுவனங்களை நடத்தி வந்தார். இவர் பார்க்கின் செல்வாக்கின் மூலம் ஊழல்மோசடியில்ஈடுபட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. விசாரணை களிலும் குறித்த விடயம் அம்பலமானதை அடுத்து கடந்த ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி பார்க் கியூன்ஹை, மக்களிடம் மன்னிப்புக் கேட்டார். இதனையடுத்து அவரைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என வலியுறுத்தி அவ்வப்போது சில போராட்டங்களும் கையெழுத்து வேட்டைகளும் நடத்தப்பட்டன.

தலைநகர் சியோலில் அண்மையில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஒன்று திரண்டு மிகப்பெரும் போராட்டத்தை நடத்தினர். இந்தப் போராட்டத்தின் மூலம் பார்க் ஜியுன் ஹைக்கு அதிகளவு அழுத்தம் ஏற்பட்டுள்ளது என தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சோய் சூனினது நிறுவனங்களிலும், அவரது நிறுவனத்துடன் தொடர்பு வைத்திருந்த நிறுவணங்களிலும் வருமான வரித்துறையினரால் நேற்றுமுன்தினம் சோதனைகள் நடத்தப்பட்டன. (ம-எ)

## நியூசியில் பதற்றம்

நியூசிலாந்து நாட்டின் மத்திய பகுதியில் நேற்றுமுன்தினம் 6.3 ரிச்டர் அளவிலான பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. நியூசிலாந்தின் கிறைஸ்ட்சேர்ச் பகுதியில் அண்மையில் பெரிய நிலநடுக்கமொன்று ஏற்பட்டது. அதன் விளைவாக சிறிய சுனாமி அலைகளும் வீசின. சில நாள்கள் இடைவெளியில் மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டமையானது அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் சேதவிவரங்கள் தொடர்பில் அறிவிக்கப்படவில்லை. ஆனால் சேதங்கள் பெரியஅளவில் இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

## தினமும் ரூ. 12 கோடிகள் ட்ரம்ப்பின் பாதுகாப்புக்கு

வொஷிங்ரன், நவ. 24

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டெனால்ட் ட்ரம்பையும் அவரது குடும்பத்தினரையும் பாதுகாக்க நாள் ஒன்றுக்கு இலங்கை மதிப்பில் 12 கோடி ரூபா செலவாகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. தனது ஆடம்பர மாளிகையான ட்ரம்ப் ட்ரவரிலேயே தங்கியிருக்க ட்ரம்ப் விரும்புகிறார் என அவரது மனைவியான மெலனியா அண்மையில் தெரிவித்திருந்தார். இதனையடுத்து குறித்த மாளிகைக்கு பல அடுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. விசேட பொலிஸ் பிரிவு, அதிரடிப்படையினர், சிறப்பு உளவுத்துறையினர் என அனைவரும் இணைந்து பாதுகாப்பு வழங்குகின்றனர். ட்ரம்பின் பிள்ளைகள், அவரது [illegible] என அனைவருக்கும் [illegible] பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே இந்தப் பெருஞ் செலவு ஏற்பட்டுள்ளது என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஏற்கனவே பல சர்ச்சைகளை எதிர்கொள்ளும் ட்ரம்ப், தற்போது தனது பாதுகாப்புத் தொடர்பான சர்ச்சையிலும் சிக்கியுள்ளார். (ம-எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 500 அழுகிய சடலங்களுடன் மோசூலில் மனிதப் புதைகுழி

பக்தாத், நவ. 24
500 அழுகிய சடலங்களுடன் மோசூல் நகரில் பெரும் மனிதப் புதைகுழி ஒன்றும்-கிணறு ஒன்றும்-ஈராக் இராணுவத்தினால் இனங்காணப்பட்டது.

ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி, அவற்றை ஓர் தனிநாடாக பிரகடனம் செய்து அங்கு தனது அரக்கத்தனமான ஆட்சியை அரங்கேற்றிவருகிறது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் தலைமையகமாக ஈராக்கின் மோசூல் நகர் விளங்கியது. கடந்த 2014 ஆம் ஆண்டியிலிருந்து ஒட்டுமொத்த மோசூலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கத்துக்குள்ளேயே இருந்துவருகிறது. இதனையடுத்து மோசூலை மீட்கும் பணியில் தற்போது ஈராக் தீவிரம் காட்டியுள்ளது. ஈராக்குக்கு ஆதர வாக அமெரிக்காவும்-துருக்கியும் உள்ளன. மோசூல் நகர் முழுமையாகச் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடமிருந்து இதுவரை 25 கிராமங்கள் மீட்கப்பட்டன. குவையாராப் பெருங்கிராமம், பழமைகளை உள்ளடக்கியிருந்த நிம்ரூட் கிராமம் ஆகியனவும் இவற்றில் அடக்கம்.



இந்த நிலையில் மோசூலின் தெற்கு பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து மீட்கப்பட்ட கிராமமொன்றில் 500 அழுகிய சடலங்களுடன் மிகப்பெரும் மனிதப்புதைகுழி இனங்காணப்பட்டது.
அருகிலிருந்த கிணறு ஒன்றிலும் ஏராளமான சடலங்கள் இருந்தன எனச் சொல்லப்படுகிறது.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் கொன்று குவிக்கப்பட்ட 500 பேரின் உடல்களே அவ்வாறு மீட்கப்பட்டன.
கொல்லப்பட்டவர்களில் 300 பேர் ஈராக்கின் முன்னாள் பொலிஸ் அதிகாரிகளும், இராணுவத்தினருமாவர். அடக்கம் செய்யப்பட்டு ஒருமாதமான உடல்களே அவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என ஈராக் இராணுவத்தரப்பு தெரிவித்தது. (ம-எ)

# சாவைக் கொடுத்த உணவு

டோக்கியோ, நவ. 24
ஜப்பானில் நடைபெற்ற உணவு உண்ணும் போட்டியில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.
ஹினோன் பகுதியில் கடந்த வாரம் இந்தப் போட்டி இடம்பெற்றது.




3 நிமிடங்களில் 5 உணவு உருண்டைகளை விழுங்குவது விதிமுறையாகும். அதற்கு இணங்கி வேகமாக உட்கொள்ளுபவர் வெற்றியாளராக கருதப்படுவார்.
உணவு உட்கொண்ட போட்டியாளர் ஒருவர் திடீரென நிலத்தில் வீழ்ந்தார். உடனடியாக அருகிலிருந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சுயநினைவின்றி 3 தினங்கள் இருந்த பின்னர் உயிரிழந்தார்.
ஜப்பானில் வேகமாக உணவு உண்ணும் போட்டி மிக பிரபல்யமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-எ)



ஜோர்ஜியா நாட்டில் ஓர் ஆலயத்தில் கடந்த வாரம் 16 ஆம் திகதி 600 குழந்தைகள் திருமுழுக்கு பெற்ற சம்பவம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரிசி திருத்துவ ஆலயத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (ம-எ)

# மொகமட் மோர்ஸிக்கு ஆயுள் தண்டனையும் கைவிடப்பட்டது

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதியான மொகமட் மோர்ஸி மீது தொடரப்பட்ட இரு வழக்குகளில் இரண்டிலும் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அவற்றில் ஒன்றை கைவிட்டுத் தீர்ப்பு வழங்கியது மன்று.
எகிப்தில் கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சி மக்கள் புரட்சியால் 2011 ஆம் ஆண்டு வீழ்ந்தது. அதன்பிறகு 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் மொகமட் மோர்ஸி ஜனாதிபதியானார். எனினும் அவரது ஆட்சிக்கு எதிராகவும் போராட்டம் வெடித்தது. 2013 ஜூலையில் அவரது ஆட்சியை இராணுவம் கலைத்தது.



அதைத்தொடர்ந்து 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி அப்தெல் பத்தா அல் சிசி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
இதனிடையே முன்னாள் அதிபர் முகமது மோர்ஸி மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஊழல் மோசடி செய்தமை தொடர்பான வழக்கிலும், 2011 ஆம் ஆண்டில் சிறையை உடைத்து பலரைக் கொலை செய்தார் எனத் தொடரப்பட்ட வழக்கிலும் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.
மோர்ஸியின் தரப்பால் இந்தத் தீர்ப்புக்களை எதிர்த்து, மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிமன்றம், ஆயுள் தண்டனைகளில் ஒன்றைக் கைவிட்டு நேற்றுத் தீர்ப்பு வழங்கியது. (ம-எ)

# உலகின் சிறந்த நாணயத்தாள்; இந்தியாவின் 2 ஆயிரம் ரூபா

*ஐ.நா. தகவல்*

புதுடில்லி, நவ. 24
உலகின் சிறந்த நாணயத்தாள், இந்தியாவின் புதிய 2 ஆயிரம் ரூபா என ஐக்கிய நாடுகள் சபையால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.
புதிய நாணயத்தாள்களில் செயலிகள் பொருத்தப்பட்டுள்ளன. செய்மதி மூலம் நாணய நகர்வுகளை அவதானிக்கலாம் என்பது இதன் சிறப்பம்சமாகும்.



இந்தியாவில் 181 பில்லியன் டொலர் கறுப்பு பணம் தேங்கியுள்ளது என்ற தகவலை அடுத்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பழைய ஆயிரம், 500 ரூபாய்தாள்களுக்குத் தடை விதித்ததுடன், புதிய தாள்களை அறிமுகப்படுத்தினார். அவ்வாறு அறிமுகம் செய்த 2 ஆயிரம் ரூபாவே இந்தச் சிறப்பைப் பெற்றது. (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALUMNI AS

## JAFFNA ADVANCED TECH

# பாராட்டி வாழ்




**22.11.2016 செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்**

**வைபவத்தில்** HNDA, HNDM, HNDIT, HNDE, HNDE (Electrical), HNDE(Civil)

**பழைய மாணவர் சங்க அங்கத்துவ மாணவர்களையும், பட்டம் பெறும் ஏனை**

# ALUMNI ASSOCIAT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## JAFFNA ADVANCED TECHNOLOGICAL IN

# SSOCIATION

## HNOLOGICAL INSTITUTE

# த்துகின்றோம்

SLIATE



| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திரு. க.நிர்மலகஜன் | திரு. ஞானகுரு கோவர்த்தன் | திரு. கோபால்ஸ திரேஸ்குமார் | திரு. குணரத்தினம் சபாநாதன் | திரு. ஜெயக்குமார் யக்கோநொரிஸ் | திரு. ஜெயக்குமார் கரல்டிச்சன் | திரு.ஜெயக்குமாரன் மினேஸ் | திரு. ஜெயதாஸ் நிர்மலகாந் | திரு. கைலாசநாதன் மனோஜ | செல்வி. குயேந்தினி குமாரதாஸ் | திரு. கதிரவேலு கிருஷ்ணவேணன் | திரு. கதிரவேலு மனோராஜ் |
| திரு.மோகனதாசன் கனகதாசன் | திரு. முத்துராஜா செந்தூரன் | செல்வி. மைதிலி சிறீஸ்கந்தராசா | திரு. நடராசா சுபலோஜன் | திரு. நடராசா அன்பரசன் | திரு. நாகமுத்து ஜெயவதனன் | செல்வி.குணராஜா நித்தூஷியா | செல்வி. நித்யா ஈஸ்வரானந்தம் | திரு. பரமசிவம் அனுஸ்காந் | செல்வி. பார்த்திகா உதயகுமார் | திரு. ப.சுதர்சன் | திரு. பத்மநாதன் பத்மகாந்தன் |
| செல்வி. சஜீவினி குமாரசாமி | செல்வி. சக்தி சபாரத்தினம் | செல்வி. சலஞ்ஷா கலாதரன் | திரு.சந்திரசேகரம கெங்காதரன் | திரு. ச.றெஜில்டன் றெனாட் | செல்வி. பொ.சதயகுமாரி | திரு. சீலரத்தினம் சிறீஸ்குமார் | திரு.சன்முகானந்தா அகிலன் | திருமதி. செரீனா நவரத்தினராஜா | செல்வி. சியாமினி இராஜகுலேந்திரன் | திரு. சிங்கராசா சிறீதரன் | திரு.சின்னத்துரை கஜமுகன் |
| திரு தங்கராசா கௌரீஷன் | செல்வி. தருமினி கேதாரநாதன் | திரு. த.மேனகாந் | திரு. தேவராசா லக்ஷன் | திரு. திருக்குமரன் துசியந்தன் | செல்வி. துஜிதா சிவலிங்கம் | செல்வி. துளசிகா நாராயணசர்மா | திருமதி. வாசுகி ஷதூர்ஷன் | திரு.விஜயரத்தினம் கோகுலதாசன் | செல்வி. த.வினோசியா | HNDBS | வேனட் லூசியன் லேனட் யேசுநேசன் |
| செல்வி. லூட்ஸ் சர்மினி சில்வேஸரா | திருமதி. மாதுரி ஜயேந்திரநாத் | திரு. மனோகரன் லாவன்சன் | செல்வி. மயூரி அரியராஜா | திரு. பரமானந்தம் பாலரூபன் | செல்வி. பூமழா மகேந்திரராசா | செல்வி. சி.பிரிஷந்தினி | செல்வி. ரோஜிதா பத்மநாதன் | செல்வி.செல்வநிதி செல்வநாயகம் | செல்வி. தவராசா சிந்துஜா | செல்வி. சிந்துஜா சிவலிங்கம் | திருமதி.சியாமளா சிறீதரன் |
| திரு. பாக்கியதுரை குமணா | திரு. பத்மநாதன் ரஜிந்தன் | திரு. இ.கேதுரன் | திரு. றி.கலிஸ்ரஸ் | திரு.செ.அலெக்ஸ் வாஸ் | திரு. சுகமார் சுஜந்தன் | திரு.தர்மலிங்கம் திருக்கோகுலன் | திரு. த.பிருந்தாபன் | HNDE (Electrical) | திரு. கணேசமூர்த்தி ஆதிரன் | செல்வி. இ.நிலானி | திரு சர்வானந்தா சஜீவன் |
| திரு. மரியதாஸ் ஜோய்லன் | திரு.இராஜரட்ணம் புஸ்பரூபன் | செல்வி. மதியழகன் றோமிகா | செல்வி. ஷோபிகா மயில்வாகனம் | திரு. தயாளநிதி நிரோஷ் | செல்வி. திருமாலினி தர்மலிங்கம் | திருமதி.ஜனந்தன் துஷானி | செல்வி. துஷ்யா குணரத்தினம் | செல்வி. துஷ்யந்தி பிறேமச்சந்திரன் | செல்வி. யாலினி தெய்வேந்திரன் | திரு. யோகநாதன் ரஜீகன் | HNDM |
| செல்வி. ஜனனி அருணாசலம் | திருமதி. தனீஸ்வரன் கஜனி | செல்வி.கஜரூபிகா தில்லைநாயகர் | செல்வி. கமலினி லூயிஸ் அன்ரனி | செல்வி. கந்தசாமி லக்ஷி | செல்வி. மேரி நிறோஜினி ஜெனித ஸ்ரெலஸ்போர் | செல்வி. கு.மதிவதனி | செல்வி. பா.மயூரதி | செல்வி. மயூரதி ஸ்ரீபத்மநாதன் | செல்வி. நித்ஜா இராஜகுலரத்தினம் | செல்வி நிரோஜினி குலேந்திரராஜா | திரு. பஞ்சலிங்கம் கயேந்திரா |
| திரு. தியாகராசா நந்தராஜ் | செல்வி.முருகேசு விஜயகௌரி | செல்வி.வினோதினி வடிவேலு | செல்வி. யசோதரா ஸ்ரீஸ்கந்தராஜா | HNDTHM | திரு கதிரமலை கபிலன் | செல்வி.கிருசாலினி கருணாமூர்த்தி | திரு குலராஜா துதிராஜ் | செல்வி. பார்த்தீபா தேவராசன | திரு இராசேந்திரா றஜீவன் | செல்வி.சு.ரோன்சனா பிரமேஸ்வரன் | திரு.தட்சணாமூர்த்தி கோகுலன் |

த்தில் நடைபெற்ற இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 13ஆவது பட்டமளிப்பு
I) HNDTHM, HNDBS பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன
னய மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

# TION

# STITUTE,

No.665/2, BEACH ROAD, JAFFNA
Tele.:- 021 3206542
E-mail:- jatialumni@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் நடவடிக்கை ஏற்கப்பட முடியாதது

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் அல்லது வடக்கின் எந்தவொரு பகுதியிலாவது கைது செய்யப்படுவர்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவது சட்டத்திற்கு முரணானது என்பதை யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி ம.இளஞ்செழியன் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கெதிராக, மனித உரிமைகள் மீறல் வழக்கைத் தாக்கல் செய்ய முடியும் என்பதையும் கோடிகாட்டியுள்ளார். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் தான்தோன்றித்தனமானதும், எதேச்சாதிகாரம் கொண்டதுமான இதுபோன்ற நடவடிக்கைகளை எதிர்காலத்திலாவது தடுத்து நிறுத்துவதாக இருந்தால் தன்னார்வ சட்டத்தரணிகள் அல்லது பொது அமைப்புகள் அத்தகைய மனித உரிமைகள் மீறல் வழக்குகளை, கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு உதவி செய்யவேண்டும்.

ஆயுதப் போர் 2009ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்துவிட்டாலும்கூட, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்தும் நடந்துகொண்டேதான் இருக்கிறது. கடந்த சில வருடங்களில் மட்டும் வடக்கில் பல நூற்றுக்கணக்கானவர்கள் இவ்வாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில் சுட்டுக்கொல்லப்பட்ட அப்பன், கோபி, தேவிகன் வழக்குடன் தொடர்புபட்டவர்கள் என்று அப்போது 40க்கும் மேற்பட்டவர்கள் சடசடவெனக் கைது செய்யப்பட்டார்கள். பின்னர் அவர்களில் அனேகர் விடுவிக்கப்பட்டார்கள்.

அதன் பின்னரும், பல சமயங்களில் பல்வேறுநபர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்கள். தென்மராட்சி, தனங்களப்பில் தற்கொலை அங்கி மற்றும் கிளைமோர்கள் மீட்கப்பட்ட சம்பவத்தின் பின்னரும் இவ்வாறு பலர் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டார்கள். அண்மையில் ஆவா குழுவுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பாடசாலை மாணவர்கள் உட்படப் பல இளைஞர்கள் அடுத்தடுத்துக் கைது செய்யப்பட்டார்கள்.

இவர்கள் அனைவருமே கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள நீதிமன்றத்தில்தான் முற்படுத்தப்பட்டார்கள். ஒரு நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் கைது செய்யப்படுபவர்கள் அந்த நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட வேண்டும் என்பதே சட்டம் - வழமை. அப்படியிருந்தபோதும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தாம் கைது செய்யும் எல்லோரையும் கொழும்பு நீதிமன்றங்களிலேயே முற்படுத்துவது பல சந்தேகங்களைக் கிளப்புகிறது. அதனையே நீதிபதி இளஞ்செழியனும் தொட்டுக்காட்டியுள்ளார்.

வடக்கில் உள்ள நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும் புறக்கணிக்கின்ற வகையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு நடந்துகொள்வது, இங்குள்ள நீதிபதிகள் தமிழர்கள் அல்லது தமிழ் பேசும் நபர்கள் என்கிற காரணத்தால்தானா என்கிற சந்தேகத்தையும் தவிர்க்க முடியவில்லை. இது ஒருவகையில் நீதிமன்றங்களையும் நீதிச் செயற்பாட்டையும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அவமதிப்பதைப் போன்றதுதான்.

இந்த நிலமை உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். அதற்குள்ள ஒரே வழி சட்டத்தின் உதவியை நாடுவதுதான். அதை உரியவர்கள் செய்யத் தவறியிருக்கிறார்கள் என்பதைத் தான் நீதிபதி இளஞ்செழியன் சுட்டிக்காட்டியிருக்கிறார். இனியாவது தன்னார்வ அமைப்புக்கள் அல்லது சட்ட அமைப்புக்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, உடனடியாக வழக்கைத் தாக்கல் செய்ய முன்வரவேண்டும். நல்லிணக்க செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அப்பால், இதுபோன்ற அவசிய நடவடிக்கைகளில் இறங்க இனியாவது சட்டத்துடன் தொடர்பான அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

# தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி பிராந்திய நிலங்களுக்கு உரிமை கோருவது தவறு

(யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வரவு-செலவுத் திட்ட விவாத உரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது)

நவீனமும் சிக்கல் நிறைந்ததுமான தொழில்நுட்ப வளர்ச்சி போதிய அளவு இல்லாதது சமூக ஏற்புகளாக இருக்க முடியாது. இதற்கான விடை முதலில் சமூகத்தை மீட்டு, பின்பு தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதுதான். போரினால் தாக்கமடைந்துள்ள பிராந்தியங்களுக்கு மேலும் பொருளாதார அநீதிகள் இழைத்து நிதிப் பிரச்சினை களைத் தவிர்க்க முயல வேண்டாம். நாம் எழுந்துநிற்க, நாம் சொல்வது ஏனையோரால் செவிமடுக்கப்பட வேண்டும்..

**மன்னார், கிளிநொச்சியில் களஞ்சியங்கள் அமைப்பது வரவேற்கத்தக்கதே**

மன்னார், கிளிநொச்சிப் பிராந்தியங்களில் பெரிய களஞ்சியங்கள் கட்டப்பட இருப்பதை வரவேற்கிறோம். இருப்பினும், அது குறித்து இங்குள்ளவர்களோடு கலந்தாலோசிக்கப்பட வேண்டும். இங்குள்ளவர்கள் பொருளாதார செயற்பாடுகளில் பங்குபற்றவும் வாய்ப்பளிக்கும் விதத்தில் மூலோபாயம் வகுக்கப்படவேண்டும். இடைத்தரகர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் போரால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் கோழிவளர்ப்பு என்பது குறிப்பிடத்தக்க ஓர் இடத்தை வகிக்கின்றது.

**அடுத்த ஆண்டில், எக்ஸிம் வங்கி செயற்படவுள்ளமை சிறப்பானதே**

2017இல் எக்ஸிம் வங்கி தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பதை நாம் வரவேற்கிறோம். எல்லா மட்டத்திலும், இந்த வங்கி வர்த்தக சுழற்சியில் வரும் விரிவான உற்பத்திகளையும், சேவைகளையும் வழங்குமென நம்புகின்றோம். வறுமைக்கு எதிரான போர் பற்றி அறிவித்திருப்பது போரினால் பாதிக்கப்பட்ட பிராந்திய மக்களுக்கு சாலப் பொருத்தமானது. 1.25க்கும் குறைவான நாளாந்த வருமானம் உள்ளவர்களும், 2 டாலர்களுக்கு குறைவான தினசரி வருமானம் பெறுபவர்களும் போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களிலேயே அதிகமாக அடைந்து கிடக்கின்றார்கள். சமுர்த்தி நிர்வாகம் எமக்கு குறிப்பிடத் தக்க அளவு பிரச்சினையான ஒன்றாக இருக்கின்றது. இளைஞர்களுக்கு ஆரம்ப தொழிற்பயிற்சிக்கான ஒதுக்கீடு என்பது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் அது மேலதிக சவால்களுடன் வராதென்று நாம் நம்புகின்றோம். தற்போதைய நிலையில் நாளாந்த வருமானத் திற்காக காத்திருக்கும் இளைஞர்கள்தான் அதிகம். போரால் பாதிக்கப்பட்ட இடங்களில், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலுமுள்ளவர்கள் ஒரு தொழிலில் பயிற்சி பெறுவதைவிட, தினசரி உழைப்பிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள்.

> இளைஞர்களுக்கு ஆரம்ப தொழிற்பயிற்சிக்கான ஒதுக்கீடு என்பது வரவேற் கத்தக்கவிடயம். ஆனால் அது மேலதிக சவால்களுடன் வராதென்று நாம் நம்புகின்றோம். தற்போதைய நிலையில் நாளாந்த வருமானத்திற்காக காத்திருக் கும் இளைஞர்கள்தான் அதிகம். போரால்பாதிக் கப்பட்ட இடங்களில், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலுமுள்ளவர்கள் ஒரு தொழிலில் பயிற்சி பெறுவதை விட, தினசரி உழைப்பிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமசேவை பிரிவுக்கமைய சிறு வர்த்தகத்தில் ஈடுபட்டு சுயமாக வேலை செய்ய விரும்பும் இளை ஞர்களுக்கு வட்டியில்லாத கடன் தொகையாக ஒரு கோடி ரூபாய் கொடுக்க முன் வந்திருப்பது வரவேற்கத் தக்கது.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக விசேட நிதியாக 300 மில்லியன் ரூபா தொகை தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்டு உள்ளூர் தலைவர்கள் ஒரு கடன் திட்டத்திற்காக அங்கீ கரிக்கும் அதிகாரம் வழங் கப்பட்டுள்ளது. இந்த உள்ளூர் தலைவர் யார் என்பதில் எமக்கு குழப்பம் இருக்கின்றது.

இராணுவத்தினர் ஹோட்டல்களை நிர் வகிப்பது, நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவது போன்ற வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதை கௌரவ அமைச்சர் ஒளி வின்றி ஒப்புக் கொண்டதை நாம் வரவேற் கின்றோம். பல ஆண்டு காலம் இராணுவத்தி னரின் இப்படியான வர்த்தக நடவடிக்கைகளால் எமது மக்கள் பாதிக்கப்பட்டிருப்தோடு, உள்ளூர் சந்தை விலைகளிலும் வீழ்ச்சி காண வைத்து எமது மக்களின் வாழ்வாதாரத்தை திட்டமிட்டு அழித்து வருகின்றார்கள். தேசிய பாது காப்பின் நன்மை கருதி என்று நியாயம் கற்பித்துவிட்டு, பிராந்தியங்களிலுள்ள நிலங்கள் மீது ஒருதலைப்பட்சமாகவும், கட்டாயப் படுத்தியும் சொத்துக்களுக்கு உரிமை கொண்டாடுவது, சமூக உட்போக்கு என்று கருத முடியாது.

சமரசத்தைக் கருத்தில் கொண்டு பொறுப்புள்ள தன்மையோடு சொத்துக்களை மாவட் டத்துக்கு திரும்பக் கையளிக்காமல், இப்படியான நடவடிக்கைகளை அமைச்சர் மேலும் விஸ்தரிக்க விரும்புவது எம்மைப் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கி இருக்கின்றது.

கௌரவ சபாநாயகர் அவர்களே;

பாரம்பரியமாக போர் விடயங்களை மட்டும் கருத்தில் கொண்டு வரும் வரவு செலவுத் திட்டங்கள் அகற்றப்பட்டு முன் வைக்கப்பட்டுள்ள இந்த வரவுசெலவுத் திட்டம் வரவேற்பிற்குரியது. இந்த வரவுசெலவுத் திட்டம் மைக்ரோ சிறிய நடுத்தர நிதியங்கள் நிலையாக நிற்கும் தன்மையை உருவாக்கி இருப்பதுடன், வர்த்தக சுற்றுச்சூழலையும் சிருஷ்டித்து கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு களையும் அதிகரித்துள்ளது. ஆனால் இதெல்லாம் நடைமுறைக்கு வருவதற்கு வரவு செலவுத் திட்டம் நடை முறைப் படுத்தப்படுதலே பிரதான விடயமாக இருக்கப் போகின்றது.

அரச சேவையிலிருந்தும், தனியார் அமைப்புகளிலிருந்தும் ஆட்களைத் தெரிவுசெய்து ஒரு குழுவை நியமித்து வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டவை நடைமுறையில் செயற் படு கின்றனவா என்பதை அவதானிக்க ஏற்பாடு செய் யப் போகும் ஒரு பிரேர ணையை

> கிராமப் புறங்களில் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கி வேலை வாய்ப்புகளை வழங்குவதை நோக்குமிடத்தில் நாம் இவை சார்ந்த பல விடயங்களுக்கு ஆதரவளிக்கின்றோம். போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் நெகிழ்வான கொள்கைகளையும், சட்டமைப்புகளையும், பொறிமுறைகளையும் கொண்டதாக இருந்தால்தான் வரவு செலவுத் திட்டங்களை முடிவுகள் கொண்டதாக மாற்ற முடியும்.



கௌரவ அமைச்சர் வெளிப் படுத்தியுள்ளார். மிகக்குறைந்த ஜீடிபி உள்ள மாவட்டங்களின் பிரதிநிதிகளும், இந்தக் குழுவில் இணைந்து கொள்ள வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

அப்படிநியமிக்கப்பட்டால், அரசின் 2020 வரையிலான திட்டத்தைஎம்மால்எட்டமுடியும். நடைமுறைப்படுத்தலுக்கும், பின்னுட்டலுக்கான பொறிமுறைக்கும் இது கண்காணி;ப்பாகவும் அமையலாம்.

கிராமப்புறங்களில் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கி வேலை வாய்ப்புகளை வழங்குவதை நோக்குமிடத்தில், நாம் இவை சார்ந்த பல விடயங்களுக்கு ஆதரவளிக்கின்றோம். போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் நெகிழ்வான கொள்கைகளையும், கட்டமைப்புகளையும், பொறிமுறைகளையும் கொண்டதாக இருந்தால்தான் வரவு செலவுத் திட்டங்களை முடிவுகள் கொண்டதாக மாற்ற முடியும்.

வணிக அடைகாத்தல், வழிநடத்தல், கைகளை ஒன்றாகக் கோர்த்தல் என்பவைதான் 2020க்கான இலக்கை மிகக்குறைந்த ஜீடிபி மாவட்டங்கள் எட்ட முக்கிய திறவுகோலாக இருப்பதுடன், ஏனைய மாவட்டங்களுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் தரும். (முற்றும்)

# கல்வித்துறை நிர்வாகம் கவனம் செலுத்துமா?

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இயங்கும் அரச மற்றும் தனியார் பாடசாலைகள் அடுத்த ஆண்டின் முதலாம் தவணையிலிருந்து காலை 7.30 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 1.30 மணிக்கு முடிவடையும் வகையில் பாடசாலைகள் இயங்கும் நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இத்தகைய நேரமாற்றம் குறித்து ஏற்கனவே அறிவிப்பு வெளியானதும், வடமாகாணக் கல்வி அமைச்சின் குறித்த முடிவுக்கு ஆட்சேபனை தெரிவித்து விமர்சனங்கள் வெளியாகியிருந்ததும், பலரும் அறிந்ததொன்றே.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் பாடசாலைகள் காலை 7.30 மணிக்கே ஆரம்பிக்கப்படுகின்றன எனவும், வடமாகாணத்தின் மேற்குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களில் மட்டுமே காலை 8.00 மணிக்கே அவை ஆரம்பிக்கபடுவதாகவும், நாட்டின் சகல பகுதிகளிலும் ஒரே வித நடைமுறையைப்பேணவேண்டும் என்பதற்காகவே இத்தகைய மாற்றம் அறிமுகப்படுத்தப்படுவ்தாகவும் கல்விப்புல மேலதிகாரிகள் தரப்பால் நியாயப்படுத்தப்படுகிறது.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கும் பாடசாலைகளில் கற்பித்தல் பணியை மேற்கொள்வோரில் பெரும்பாலான ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்டிருப்போரே. அதிலும் குறிப்பாக அவர்களில் பெரும்பாலானோர் பெண் பாலர் ஆவர். திருமணமாகாத, திருமணமாகி குடும்பமாக வாழும் இவர்களில் பெரும்பாலோர் தற்பாதைய நாட்டுச் சூழ்நிலை காரணமாக பாடசாலை நாள்களில் தினமும் யாழ் மாவட்டத்தில் உள்ள தத்தமது சொந்த வாழ்விடங்களிலிருந்து பஸ் மூலம் பயணித்துச் சென்று பாடசாலைகளில் கடமையாற்றிவிட்டு மாலையில் மீண்டும் அதே விதத்தில் பயணித்துத் தத்தமது இல்லிடம் திரும்புகின்றனர். இது கல்விப்புலம் சார் உயர் அதிகாரிகளுக்குத் தெரியாததொன்றல்ல. இதுத விரவும் இதுவரைகாலமும் காலை 8 மணிக்கு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சென்றடையும் வகையிலான நேரசூசிகையுடன் நடைமுறைப்படுத்தப்படும் இ.போ.ச பஸ் சேவைகளை அரைமணிநேரம் முன்ன தாகப் புறப்படத் தக்க வகையில் மாற்றியமைக்க இ.போ.ச. நிர்வாகம் முன்வரவேண்டுமே? தவிரவும் குறிப்பிட்ட ஆசிரியர்கள் அனைவரும் யாழ்ப்பாணப் பிரதம பஸ் நிலையச் சூழலிலிருந்து வேறுபட்ட தூரங்களிலுள்ள வீடுகளிலிருந்து புறப்பட்டு வந்து யாழ்.பஸ் நிலையத்தில் உரிய நேரத்தில் பஸ்ஸைப்பிடிக்கும்பெரும் சிரம நிலைக்கு உட்பட்டிருப்போரே. இரண்டு நிமிட தாமதத்தால் பஸ்ஸைத் தவறவிட்டு அங்கலாய்க்கும் பல ஆசிரியைகளை நான் அதிகாலை வேளையில் பஸ் நிலையத்தில் கண்டிருக்கிறேன். இத்தனைக்கும் இவர்களெல்லாம் இந்தவிதம் சிரமப்படுவதைவிட தாம் கல்விப் பணிபுரியும் பாடசாலைகளில் உள்ள விடுதிகளில் தங்கியிருந்து வார இறுதி விடு முறை நாள்களில் தத்தமது வாழ்விடங்களுக்குச் செல்லலாமே என்ற கேள்வியும் எழுவது நியாயமே. கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியர்களுக்கான விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படவில்லையயனக் கூறப்படுகிறது. அந்தவித விடுதிவசதிகள் உள்ள பாடசாலைகளிலும் வேறு பல அசௌகரியங்கள், வசதிக் குறைவுகள் நிலவுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இவை ஒருபுறமிருக்க ஆரம்ப வகுப்புக்களில் கல்வி கற்கும் சிறார்கள் பாடசாலையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு தூர இடங்களில் இருந்து புறப்பட்டுப் பாடசாலை வருவதற்கு இந்த அரைமணிநேரம் முந்தித்தயாராக வேண்டியநிலையும் அவர்களுக்கு ஓரளவு சிரமத்தைக் கொடுக்குமொன்றே.


மொத்தத்தில் நீண்ட காலமாக காலை 8மணிக்கெனத் தம்மைத் தயார்ப்படுத்திப் பழக்கப்பட்டு விட்ட இந்த ஆசிரியர்களும், மாணவர்களும் இந்த அரைமணிநேரம் முந்தித்தம்மைத் தயார்ப்படுத்தும் நிலைமையை எதிர்கொள்ள மிக்க சிரமப்படப் போகிறார்கள் என்பதே எனது அபிப்பிராயம். மறுபுறத்தில் இதனால் கல்விப்புல நிர்வாகத்தரப்பு பெரிதாக எதனைச் சாதித்து விடப்போகிறது என்ற கேள்வியும் எழுவது நியாயமே. ஆக மொத்தத்தில் இந்த நேரமாற்றம் குறித்து மீள்பரிசீலனை செய்ய கல்வித்துறை நிர்வாகத் தரப்பு முன்வருமா?

**க.கண்ணன், அரியாலை**

வாசகர் திருமுகம் பகுதிக்க எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ... குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# நட்சத்திரப் பலன்கள்

**புனர்பூச நட்சத்திரப் பலன்கள்**

ஏகபத்தினி விரதனாம் ஸ்ரீராமன் அவதரித்த நட்சத்திரம். தேவர்கள் அவதாரம் புரிந்த நட்சத்திரம் இது. இதில் பிறந்தவர்கள் உண்மை, ஒழுக்கம், நீதி, நேர்மை ஆகிய பண்புகளுடன் வாழ்வர். பிறருக்கு மனதிலும் தீங்கு எண்ணாதவர்கள். நல்ல ஆஜானுபாகுவான உருவமும் அழகிய கேசமும் நல்ல கண்களும் உடையவர்கள். எதையும் உறுதியான முடிவு எடுக்கும் திறமை உடையவர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்புடன் மற்றும் ஊக்கத்துடன் விளங்குவர். அதிக பற்று இன்றி விலகி அலைந்து திரியும் இயல்பினர். எல்லோரிடமும் சகஜமாக கலந்து பழகும் இயல்புடையவர்கள்.

**புனர்பூச நட்சத்திரம் : 1ம் பாதம்**

கோபகுணமும் சற்று முரட்டு சுபாவமும் உடைய இவர்கள், நல்ல அடர்த்தியான கேசத்துடன் காணப்படுவார்கள். உடலில் சற்று குறைபாடு உள்ளவர்கள். ஆடம்பரமான வாழ்வு வாழ்பவர்கள். காதில் பிரச்சினை உள்ளவர்கள்.

**புனர்பூச நட்சத்திரம் : 2ம் பாதம்**

உஷ்ண சம்பந்தமான வியாதி உடையவர்கள். எப்பொழுதும் யாத்திரை செல்வதை விரும்புவர். அடிக்கடி பிரயாணம் செய்யும் ஆர்வம் உள்ளவர்கள். உடல் நலக்குறைவு அடிக்கடி ஏற்படும். அவைஅடக்கம், நாவடக்கம் இல்லாதவர்கள். உற்றார், உறவினர்களை அதிகம் விரும்பி நேசிப்பார்கள்.

**புனர்பூச நட்சத்திரம் : 3ம் பாதம்**

நல்ல ஆயுள் உள்ளவர்கள். நல்ல கல்வி அறிவும், ஆற்றலும் உடையவர்கள். உண்மைக்கு புறம்பாக எப்பொழுதும் செயற்படாதவர்கள். நல்ல இளகிய மனமும் பெருந்தன்மையான குணமும் உடையவர்கள். வீண் அலைச்சல் அலைவார்கள். நல்ல சுறுசுறுப்பும் உற்சாகமும் உடையவர்கள்.

**புனர்பூச நட்சத்திரம்: 4ம் பாதம்**

பேராசை பிடித்த இவர்கள் மற்றவர் பொருள்களை அதிகம் விரும்புவர். பெண்களை தெய்வமாக மதிக்கும் இவர்கள், தந்தை சொல்லைத் தட்டாதவர்கள். நல்ல அங்க லட்சணம் உள்ள இவர்கள் உற்றார், உறவினர் களை அனுசரித்து வாழ்வர். கோபகுணமும் சற்று முரட்டு சுபாவம் உடையவர்கள்.

## நாளை

**கார்த்திகை-10**

வெள்ளிக்கிழமை -25.11.2016
திதி: ஏகாதசி மு.ப.10.14
நட்சத்திரம்: அத்தம் பி.ப.02.51
ராகுகாலம்:10.42-12.12 வரை
சுபநேரம்:06.12-07.42 வரை
சனிப்பிரதோச விரதம்

# உள்ளூர் கிரிக்கெட்டின் அபிவிருத்தி

## பாராட்டப்பட வேண்டிய முயற்சி

இலங்கையின் உள்ளூர் கிரிக்கெட்டை ஊக்குவிப்பதற்காக, கழகங்களை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக, இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்தது. மாகாணமட்டத்தில் முதல்தரத் தொடர்களும் அவற்றில் களமிறங்கும் கழகங்களுக்கு கணிசமான அளவு நிதியும் வழங்கப்படவுள்ளது.

தெரிவுசெய்யப்படும் தகுதியான கழகங்களுக்குப் பந்துவீச்சு இயந்திரங்கள், இயந்திரப்படுத்தப்பட்ட உருளைகள், மைதானப் பராமரிப்புக்கான ஏனைய உபகரணங்கள் ஆகியனவும் தேவைப்படும் இடங்களுக்கு மைதானங்களும் வழங்கப்படவுள்ளன.- இலங்கையின் உள்ளூர் மட்டத் தொடர்களில், கழகங்களின் தரம் போதாது என்பதால், மாகாணமட்டத் தொடர்களை நடத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன. இலங்கை அணியின் முன்னாள் தலைவரான மகேல இந்தக் கருத்தை அடிக்கடி வலியுறுத்தி வந்தார். இந்தப் பின்னணியிலேயே இலங்கை கிரிக்கெட் சபையால் இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

“கிரிக்கெட்டை ஊக்குவிக்கும், நிலைக்க வைக்கும், அபிவிருத்தி செய்யும் இடங்களாக, கழகங்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். இந்தப் பகுதியில், எங்களால் முடியுமானளவு நாங்கள் முதலிடுவோம்” என கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார். இது மிகவும் வரவேற்கத்தக்க கருத்தே. வடக்கைப் பொறுத்தவரை, கால்பந்தாட்டத்துடன் ஒப்பிடுகையில், கிரிக்கெட் சிறந்த அபிவிருத்தி நிலையை எட்டவில்லை என்பது வெளிச்சம். இதற்கு மிக முக்கிய காரணமாக போதிய தொடர்கள் இல்லாமையைக் குறிப்பிடலாம். கிரிக்கெட்டுக்கு என வடக்கு மாகாண அணிகளை உள்வாங்கியோ அல்லது தேசிய ரீதியிலோ மிகப்பெரிய தொடர்கள் நடத்தப்படுவது மிகக் குறைவாகவே உள்ளது. கால்பந்தாட்டத்தைப் பொறுத்தவரை ஏகப்பட்ட தேசியத் தொடர்கள் நடத்தப்படுகின்றன. சமபோச கிண்ணத் தொடர், கொத்மலை கிண்ணத் தொடர் ஆகியவற்றை முக்கியமானவையாகக் குறிப்பிடலாம்.

வடமாகாணத்திலும் மைலோ கிண்ணத் தொடர், ஏனைய கழகங்களின் தொடர்கள் என ஒன்றுமாறி ஒன்றாக அணிகள் விளையாடிக் கொண்டே இருக்கின்றன. இதனால் கால்பந்தாட்டத்தில் வடக்கு மாகாணத்தின் அணிகளும், ஏனைய அணிகளும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியிருக்கின்றன. உதாரணமாக, அண்மையில் நடைபெற்றுமுடிந்த பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டக் கால்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வடக்கு அணிகளான சென். பற்றிக்ஸ் கல்லூரி தங்கப் பதக்கத்தையும், சென். ஹென்றிஸ் கல்லூரி வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் சென். லூசியஸ் கல்லூரி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. சில தினங்களுக்கு முன்னர் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று முடிந்த கொத்மலை கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத்தில் கொழும்பு சாகிராக் கல்லூரி சம்பியனானாலும், சென். பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாம் இடத்தையும், சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. கழகங்களில் சென். மேரிஸ், குருநகர் பாடுமீன், பாசையூர் சென். அன்ரனிஸ், இளவாலை யங்ஹென்றிஸ், டயமன்ஸ் போன்ற அணிகள் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துகின்றன, கொழும்பிலும் சென்று சாதிக்கின்றன.




ஆனால் துடுப்பாட்டத்தில் முரளிக் கிண்ணத் தொடரொன்றைத் தவிர, வேறு முக்கியத் தொடர்கள் இல்லை. முரளிக் கிண்ணத்திலும் வடக்கு அணிகள் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவதாகத் தெரியவில்லை. இந்தப் பின்னடைவுக்கு பன்னாட்டுத் தரமுடைய மைதானம் வடக்கில் இல்லாமையும் முக்கிய குறைபாடாகக் கருதப்படுகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கை கிரிக்கெட் சபையின் குழு, மண்டைதீவு அல்லது கோவிலாக்கண்டி என இரு இடங்களைப் பரிசீலித்துப் பார்க்கத் திட்டமிட்டுள்ளது. எது எப்படியோ? ஓர் பன்னாட்டு மதிப்புப் பெற்ற மைதானம் அமையப்பெற்றால் அது திருப்புமுனையாகவே அமையப்பெறும். சுமதிபாலவின் முயற்சி அறிக்கைக்குள் மட்டுப்படுத்தப்படாவிட்டால், அது அனைவருக்கும் சிறந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய அபிவிருத்தியின் இன்றைய தேவைப்பாடுகள்

அ.அஜித்சஞ்ஜீவ்

வளர்ச்சிப் பிரதேசங்கள் நீர்வள வலயாங்ளாக முதலில் வகுக்கப்பட வேண்டும். ஆறுகள், குளங்கள், கிணறுகள் என்பனவற்றை அவதானித்து, ஆய்வு செய்து அவற்றின் நீர்ப்பீட அளவுகள், உவர்த்தன்மை, நீரின் கடினத்தன்மை, உரம், கிருமி நாசினிப் பாவனைகளால் நீர் மாசுபடும் தன்மை, ஆவியாக்கம், ஆவியுயிர்ப்பு, ஊடுபரவுதல் போன்ற அம்சங்கள் கணிக்கப்பட்டு- நீர்வள வலயாங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படைத் தரவுகளின் துணையு டனேயே அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

வடக்கு- கிழக்குப் பிரதேசத்தின் விவசாயமும் நீர்ப்பாசனமும் பற்றி நோக்கும்போது, அவற்றின் அபிவிருத்தி அம்சமே முன்னுரிமை பெறுகிறது. இதனை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று- யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்துடனான விருத்தி. மற்றது, பிரதான நிலப்பகுதியில் அதிகளவு மேற்பரப்பு நீர்வளம், குறைந்தளவு தரைக்கீழ் நீர்வளம்.

யாழ். குடாநாட்டில் இனி விளைபரப்பை அதிகரித்து விவசாய விரிவாக்கத்தை மேற்கொள்ளவேண்டும் என எண்ணுவது தவறு. அதற்கு வழியுமில்லை. இங்கு தற்போது காணப்படும் விவசாயச் செய்கையை மிகவும் நவீன முறையில் மாற்றுவதோடு, நீர்ப்பாசன முறைகளிலும் நவீனத்துவத்தைக் கையாளவேண்டும். அத்துடன், நல்ல முறையில் பாசன முகாமைத்துவத்தைப் பேணி நீர் வீண்விரயமாவதைத் தடுத்து, இருக்கின்ற விவசாயப் பயன்பாட்டை உச்ச வருமானம் தரத்தக்கதாக மாற்றியமைக்கவும்வேண்டும். அதே நேரம், குடி நகர்வுக்கான இழுவிசையை உருவாக்கக் கூடிய பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பிரதான நிலப்பகுதி நோக்கியே எதிர்காலத்தில் திசை திருப்பப்பட வேண்டும். யாழ். குடாநாட்டின் நிலப் பயன்பாட்டினைச் சிறப்புத் தேர்ச்சி பெற்றதாக மாற்ற வேண்டும். அதிக செலவில் விவசாயம் செய்யப்படும் இந்தப் பகுதியில், ஒவ்வொரு அங்குல நிலமும் உச்சப் பயன் தரத்தக்கதாகப் பயன்படுத்த வேண்டும். விவசாய அபிவிருத்தி வர்த்தக முறையில் அமையப் பெறவேண்டும்.

யாழ். குடாநாட்டில் நெற்செய்கை தவிர்க்கப்பட்டு, அதிக வருமானம் ஈட்டித்தரும் பணப் பயிர்ச் செய்கை விருத்தி செய்யப்பட வேண்டும். குறிப்பாக, உப உணவுப் பயிர்கள் மற்றும் காய்கறி, எண்ணெய் வித்துக்கள் போன்றன செய்கை பண்ணப்பட வேண்டும். இந்த உற்பத்திகளில் சில விவசாய- கைத்தொழில் விருத்திக்கு மூலப் பொருள் வழங்குவனவாக இருக்க வேண்டும். யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீரின் மீள்நிரப்புத் தன்மை அதிகரிக்கப்பட வேண்டும். இங்கு குறுகிய காலத்தில் கிடைக்கப் பெறும் ஒரேயொரு மீள்நிரப்பியான மழை வீழ்ச்சியால் கிடைக்கும் நீர். மேற்பரப்பால் ஓடி வீணே கடலில் சென்றடைய விடாது தடுத்து அதனைத் தரைக்கீழ் நீராகச் சேமிக்கச் சகல வழிகளிலும் முயலவேண்டும்.

யாழ். குடாநாட்டின் சுண்ணக்கல் புவியியல் அமைப்பின் காரணமாக- சுண்ணக்கல் கரைசலால் ஏற்பட்ட 1050 குளங்கள் காணப்படுவதாக அறியமுடிகிறது. இந்தக் குளங்களில் நிறையும் தண்ணீரில் பெரும் பகுதி தரைக்கீழ் சென்று நீர் வளத்தை அதிகரிக்கச் செய்கின்றது. இவ்வாறான குளங்கள், குப்பை கூளங்கள் கொட்டுவதாலும் தூர்ந்து போவதாலும் நீரை உள்ளெடுக்கும் தன்மை குறைவடைந்து காணப்படுகின்றன. மீள்நிரப்பியாகக் காணப்படும் இத்தகைய குளங்களைத் துப்புரவு செய்தலும் தூர்வை அகற்றுதலும் அவசியம். இதில் விவசாயம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சு அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

யாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் சுண்ணக்கல் நிலத்தோற்றத்தில் ஒன்றான தரைக்கீழ் நீர் ஓடும் அநேகமான குளங்கள், மேற்பரப்பு இடிந்த நிலையில் காணப்படுகின்றன. நிலாவரை, குரும்பசிட்டி, பேய்க்கிணறு, புன்னாலைக்கட்டுவன், பறங்கியாறு, கீரிமலைக்கேணி, அல்வாய் மாயக்கைக் குளம், கரவெட்டி குளக் கிணறு, வரணிக் கிணறு என்பன இந்த வகையில் அமைந்த குளப் பள்ளங்களாகும். இவற்றில் சில பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இன்னும்சில, ஆய்வின்பின்பயன்படும் வாய்ப்பும் காணப்படுகிறது.

தரைக்கீழ் நீர் குளம் மூலம் கடலைச் சென்றடையும் முறையும் காணப்படுகிறது. கீரிமலைக் கேணிக்குக் குகை மூலம் வரும் நீர் இதற்குச் சான்றாகும். தரைக்கீழ் நீரைக் கடலில் கலக்க வைக்கும் இலகு வழிகள் எல்லாப் பகுதியிலும் கண்டறியப்பட்டு, அவற்றை நிலத்தின் கீழ் அணைகட்டித் திருத்த வேண்டும். இத்தகைய முயற்சிக்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருப்பினும், செயல் முறையில் இல்லை.

குடாநாட்டின் எதிர்கால வாழ்வுக்கும் வளத்துக்குமுரிய இன்றியமையாத திட்டம் பற்றி அக்கறையுடன் நோக்கும் எவரும், இங்குள்ள கடலேரிகளை நன்னீரேரிகளாக்கும் திட்டம் பற்றி அக்கறையுடன் சிந்திக்காதிருக்க முடியாது. நன்னீரேரித் திட்டங்கள் யாழ்ப்பாணத்தின் தரைக்கீழ் நீர்ச் சேமிப்பு அதிகரிக்கவும் கடலை அடையும் நீர் தரைக்கீழ் மீள்நிரப்பியாக மாறவும் வழிவகுக்கும். குடாநாட் டின் தரைக்கீழ் நீர் துண்டுபடாது தொடராகவே இருக்கும். இதனால் குடாநாட்டின் உவர்நீராதல் கணிசமான அளவு குறையும். உவர் நிலங்கள் வளமுள்ள விளை நிலங்களாக மாறும். குடாநாட்டின் நிலப்பரப்பும் நன்னீர்ப்பரப்பும் அதிகரிக்கும். இத்தகைய பல நன்மைகளை நன்னீராக்கும் திட்டம் மூலம் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ். குடாநாட்டில், நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் நன்னீரேரிகளாக மாற்றக்கூடிய 14 கடல் நீரேரிகளும் நடைமுறையில் உள்ள ஒரு உவர்நீர் தடுப்புத் திட்டமும் உள்ளன. மேற்பரப்பு 13 கடல் நீரேரிகளில் நான்கை அதிக செலவின்றி நன்னீரேரிகளாக மாற்றலாம்.

01. ஆனையிறவு மேற்கு கடல் நீரேரி
02. ஆனையிறவு கிழக்கு கடல் நீரேரி
03. தொண்டமானாறு கடல் நீரேரி
04. உப்பாறு கடல் நீரேரி

கடல் நீரேரிகளை நன்னீர் ஏரிகளாக மாற்றும் திட்டத்துக்கு எதிர்ப்புப் தெரிவிப்போர் முக்கியமாக இரண்டு பிரச்சினைகளை முன்வைக்கின்றனர்.

01.சூழல் மாசடைதல்.
02.கடல் நீரேரிகளில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ளும் மீனவர்களின் தொழிற்றுறை பாதிப்படைதல்.

யாழ். குடாநாடு, பாசனத்தில் மாத்திரமல்ல பிரதான நிலப்பகுதிப் பாசனத்தில் முறையான பாசன முகாமைத்துவ வளர்ச்சி அடையவில்லை. நீர் முகாமையில் வடி நிலப்பகுதி முகாமைத்துவம், நீர்வள அபிவிருத்தியும் சேமிப்பும், வயல் நிலமட்டத்தில் நீரின் பாசனத்துக்குரிய விநியோகமும், கட்டுப்பாடும், வடிகாலும் நீர்ப்பாசனத்துக்குரிய நீர்விடுப்பும் என்றவாறு நீர் முகாமைத்துவ மட்டம் வேறுபடுகிறது. இந்த முகாமைத்துவச் செயற்பாடுகளை இருவகைப்படுத்தலாம்.

01.நீர்த்தேக்க நீர் வழங்கல் முறையிலான முகாமைத்தும்.
02.வயல் நிலமட்டத்திலான முகாமைத்துவம்

நீர்வள அபிவிருத்தி தொடர்பான திட்டமிடலுக்குப் பல்வேறு தரவுகள் தேவைப்படுகின்றன. இதற்கு புவியியல், பொருளியல், புவிச்சரிதவியல், மண்ணியல், விவசாய அறிவியல் போன்ற துறைகளின் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து இயங்க வேண்டும். வளர்ச்சிப் பிரதேசங்கள் நீர்வள வலயங்ளாக முதலில் வகுக்கப்பட வேண்டும். ஆறுகள், குளங்கள், கிணறுகள் என்பனவற்றை அவதானித்து, ஆய்வு செய்து அவற்றின் நீர்ப்பீட அளவுகள், உவர்த்தன்மை, நீரின் கடினத்தன்மை, உரம், கிருமிநாசினிப் பாவனைகளால் நீர் மாசுபடும் தன்மை, ஆவியாக்கம், ஆவியுயிர்ப்பு, ஊடுபரவுதல் போன்ற அம்சங்கள் கணிக்கப்பட்டு- நீர்வள வலயங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படைத் தரவுகளின் துணையுடனேயே அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

பிரதான நிலப்பகுதி நீர்வள ஆய்வுகள் இன்றும் சரியாக ஆய்வு செய்யப்படவில்லை. இந்தப் பகுதிக் காடுகளிலே பழைய குளங்கள் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றன. இவை புனரமைக்கப்பட வேண்டும். பயன்பாட்டில் உள்ள குளங்களில் நீர் மட்டத்தை அதிகரிக்க வேண்டும். தெளிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சூழல் நிலமைகளைப் பாதிக்காத வகையில் புதிய நீர்த்தேக்கங்கள் உருவாக்கலாம். பறங்கி ஆறு, பாலி ஆறு என்பனவற்றைப் பொருத்தமான இடத்தில் மறித்துக் கட்டி, புதிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்கக்கூடிய வளவாய்ப்புக்கள் பற்றி நீரியலாளர்களால் ஆராயப்பட்டுள்ளதையும் இங்கு நினைவுகூர வேண்டும்.


பிரதான நிலப்பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களில் ஏற்று நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பதன் மூலம் அங்கு உப உணவுச் செய்கையை அதிகரிக்கலாம். வடபகுதிக் குடியேற்றத் திட்டங்களுக்கு ஏற்று நீர்ப்பாசன வசதிகளுடன் உப உணவு உற்பத்திக்கு முதலிடம் வழங்கிய இளைஞர் குடியேற்றத் திட்டங்களே பெருமளவுக்கு வெற்றியைத் தந்துள்ளன. இவ்வாறான ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களில் பணப்பயிர்ச் செய்கைகளை ஊக்கப்படுத்த வேண்டும். ஏற்று நீர்ப்பாசன முறைகள் அதிக செலவில் அமைக்கப்படுவதால், பணப்பயிர்ச் செய்கை அதிக வருமானத்தைத் தரத்தக்கதாக அமையும்.

*கட்டுரையாளர்:*
*அபிவிருத்தி உத்தியோகத்தர்,*
*பிரதேச செயலகம், நெடுந்தீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள்; கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.



# பிறவிப் பகை நட்பாக மாற முடியாது

ஓர் ஊருக்கு வெளியே அரசமரம் ஒன்று இருந்தது. அதை இருப்பிடமாகக் கொண்டு, கீரிப்பிள்ளை, எலி, பூனை, ஆந்தை ஆகிய நான்கும் வசித்து வந்தன. கீரியும், எலியும் மரத்தின் வேரின் கீழ் உள்ள வளைக்குள் தனித்தனியாக வசித்து வந்தன.

பூனை, மரத்தின் அடியில் உள்ள பெரிய பொந்தில் வசித்தது. ஆந்தை மரத்தின் உச்சியில் இருந்த ஒரு பொந்தில் வசித்தது. எலியின் நிலைமைதான் பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது. ஆந்தை, பூனை, கீரி இவற்றின் கண்களில் படாமல், எலி தினமும் இரைதேட வேண்டியதாயிருந்தது.

ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது. அதனால், இரவில்தான் இரை தேடுவது வழக்கம். பூனையோ, பகலிலும் இரவிலும் அருகில் இருந்த வயலுக்குச் சென்று பயமின்றி இரை தேடி உண்டு வந்தது.

பூனையைப் பிடிப்பதற்காக, வேடன் ஒருவன், வயலுக்குப் போகும் வழியில், கண்ணி வைத்துவிட்டுப் போனான். வழக்கம்போல, எலிகளைப்பிடிக்கச்சென்றபூனைவேடன் போட்டிருந்த கண்ணியில் சிக்கிக் கொண்டது. தப்பிக்க வழி இல்லை. சிறிது நேரத்தில் பதுங்கிப் பதுங்கி, திருட்டுத்தனமாக இரை தேடி வந்த எலி, கண்ணியில் சிக்கிக் கொண்டிருந்த பூனையைக் கண்டு துள்ளிக் குதித்தது. அப்போது ஆந்தையும், கீரியும் சேர்ந்து சென்றபோது, பூனை கண்ணியில் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தன. "இனி பூனையைப் பற்றிய பயம் இல்லை; எலியைப் பிடித்து விடலாம்" என்று எண்ணின. தன்னைக் குறி வைத்து ஆந்தையும், கீரியும் வருவதைக் கண்டு எலி நடுங்கியது. கீரிக்கும், ஆந்தைக்கும் பயந்து எலி, வழியை மாற்றிக் கொண்டு, பூனையின் பக்கம் சென்றது. பூனையின் கால்கள் கண்ணியில் சிக்கிக் கொண்டிருந்த போதிலும், ஒரே அறையில் கொன்று விடுமே என்று கலக்கமுற்று, கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

பூனையின் அருகில் சென்று, "நீ என் எதிரியாக இருந்தாலும் கூட, இப்போது நீ சிக்கிப் பரிதவிப்பதைக் காணும்போது, எனக்கு இரக்க மேலிடுகிறது. என் பற்களால் இந்தக் கண்ணியைக் கடித்து உன்னை விடுவித்து விடுகிறேன். ஆனால், நீ விடுபட்டதும், உன்னால் எனக்கு ஆபத்து நேரிடுமோ என்றுதான் பயமாக இருக்கிறது." என்றது எலி.

எலியே! நாம் எதிரிகளான போதிலும், இப்போது என்னை நீ விடுவித்து விட்டால், உனக்கு நண்பனாக இருப்பேன். ஆபத்தான வேளையில் என் உயிரைக் காப்பாற்றிய உன்னை ஒருபோதும் ஒன்றும் செய்யமாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன்," என்று கெஞ்சியது பூனை.

உடனே எலி, பூனையை நெருங்கியது. அதைக்கண்ட கீரியும், ஆந்தையும், எலியைப் பிடிக்க வழியில்லாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்று விட்டன.

எலியிடம், "சீக்கிரம் பற்களால் கண்ணியை அறுத்துவிடு. விடியப் போகிறது வேடன் வந்து விடுவானே!" என்று அவசரப்படுத்தியது பூனை. கண்ணிகளைக் கத்தரிப்பதுபோல், பற்களை வைத்துப் பாசாங்கு செய்து வேடனின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தது எலி.

கண்ணியிலிருந்து சீக்கிரமே விடுபட்டு விடுவோம் என்ற நம்பிக்கையோடு இருந்தது பூனை.

பொழுது விடிந்தது. வேடனும் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்ட எலி, கண்ணியின் சுருக்கை இறுகச் செய்துவிட்டு, வேடனுக்கு அஞ்சி ஓடத்தொடங்கியது.

எலியிடம், "இது நியாயமா? உதவி புரிவதாகக் கூறி, நம்பிக்கை மோசம் செய்து விட்டாயே?" என்று பரிதாபமாகக் கேட்டது பூனை.

"விரோதிகள் கூட, சந்தர்ப்பம் காரணமாக நண்பர்களாக ஆவார்கள். ஆனால், அத்தகைய நட்பு, உண்மையான நட்பாகவும், வெகு காலத்துக்கு நீடிக்கக் கூடியதாகவும் இருக்காது!" என்று கூறி, ஒரே ஓட்டமாக ஓடியது எலி. பிறவியிலேயே பகைவர்களாக இருப்பவர்கள் நட்பு கொள்ள முடியாது.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# வரலாற்றில் இன்றைய தினம்

1992 - நள்ளிரவு வேளை பலாலி கிழக்குப் படைத்தளம் மீது, புலிகள் பெரும் அதிரடி. காவலரண்கள் 150 தகர்த்தன. 2 மைல் காவல் வேலி அழிந்தது.

1996 - போரில் அரசுக்கு செய்மதி வசதி வழங்க இணங்கியது அமெரிக்கா.

- 175 பயணிகளுடன் கடத்தப்பட்ட விமானம் இந்து மா கடலில் விழுந்து நொறுங்கியது. மடகஸ்கார் அருகே சம்பவம். 53 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். 90 சடலங்களும் மீட்பு.

- மாணவி கிருஷாந்தி கொலை வழக்கு கொலைக்குற்றச்சாட்டு மட்டுமே. கற்பழிப்புக் குற்றச்சாட்டு இல்லை சொலிசட்டர் ஜெனரல் சில்வா தெரிவிப்பு.

1999 - தினக்குரல் பத்திரிகை ஆசிரியர் ஆ.சிவநேயச் செல்வனும் உதவி ஆசிரியர் எஸ்.சிவகணேசனும் நாலாம் மாடியில் வைத்து சி.ஐ.டியினால் விசாரணை.

- சிறுபான்மையினர் தமது பகுதிகளைத் தாமே நிர்வகிக்கும் தீர்வே அவசியமென வாசுதேவ கூறுகின்றார்.

- கைதான மலையக இளைஞர்களைத் தாமதமின்றி விடுவிக்கப் பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு.

2006 - வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் 5 பேர் கொலை தொடர்பாகப் படைச் சிப்பாயும் கைது.

- புலிகளைச் சுதந்திரப் போராளிகளெனக் கூறிய லலித் கொத்தலாவலவைக் கைது செய்யுமாறு ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் சோபித தேரர் சபையில் கோசம் எழுப்பினார்.

## மயிலே, மயிலே ஆடி வா

*மயிலே, மயிலே ஆடிவா*
*மக்காச் சோளம் தருகிறேன்!*
*குயிலே, குயிலே பாடிவா*
*கோவைப் பழங்கள் தருகிறேன்!*

*பச்சைக் கிளியே பறந்துவா*
*பழுத்த கொய்யா தருகிறேன்!*
*சிட்டுக் குருவி நடந்துவா*
*சட்டை போட்டு விடுகிறேன்!*

*ஓடைக் கொக்கு இங்கே வா*
*ஓடிப் பிடித்து ஆடலாம்!*
*மாடப்புறாவே இறங்கிவா*
*மடியில் குந்திப் பேசலாம்!*




சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** முக்கிய செயல் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். தொழிலில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். உறவினர் வருகையால், திடீர் செலவு ஏற்படலாம். சிலருக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.



**இடபம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சியால், வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**மிதுனம்:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு வாழ்வில் வளர்ச்சியடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.



**கடகம்:** சிலரது பேச்சால், மன சங்கடத்துக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். ஆரோக்கியம் பலம் பெறும்.



**சிங்கம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல்பணிபுரிவதுஅவசியம். அளவானபணவரவு கிடைக்கும். வாகன வகையில் பராமரிப்புச் செலவு உண்டாகலாம்.





**கன்னி:** உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.



**துலாம்:** எதிர்கால நலன் குறித்த அக்கறை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். உடல் நலனில் அக்கறை அவசியம்.



**விருச்சிகம்:** அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.



**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.




**மகரம்:** முக்கியமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பரிசும், பாராட்டும் பெறுவர்.



**கும்பம்:** நடைமுறை வாழ்வு சுமுகமாக அமைந்திடும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் பெருகும். உறவினர்களுடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**மீனம்:** மனதில் இருந்த குழப்பம் சரியாகும். ஆன்மிக சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.




## பாகுபலி 2 படத்தின் வரை கலை செம்மையாக்கி கைது

பாகுபலி 2ஆம் பாகத்தின் முக்கிய வரைகலை காட்சிகள் சமூக வலைத்தளங்களில் கசிந்தது தொடர்பாக அந்தத் திரைப்படத்தில் பணியாற்றி வரும் வரை கலை செம்மையாக்கி கைது செய்யப்பட்டார்.

தெலுங்கு நடிகர் பிரபாஸ், ராணா, சத்யராஜ், நாசர், ரம்யா கிருஷ்ணன், அனுஷ்கா, தமன்னா நடிப்பில் பாகுபலி திரைப்படத்தின் 2ஆம் பாகம் வேகமாக உருவாகி வருகிறது. இந்தத் திரைப்படத்தின் முக்கிய கிராபிக்ஸ் காட்சிகள் ஹைதராபாத் அன்னபூர்ணா ஸ்டுடியோவில் ரகசியமாகப் படம் பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் 9 நிமிடம் ஓடக் கூடிய காட்சிகள் அண்மையில் சமூக வலைத்தளங்களில் கசிந்தது படக்குழுவினரை மிகுந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியது.


இதைத் தொடர்ந்து ஹைதராபாத் சைபர் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டது. இந்தத் திரைப் படத்தில் வரைகலை செம்மையாக்கியாகப் பணியாற்றி வரும் கிருஷ்ணா என்பவர்தான் இதற்கு காரணம் என விசாரணையில் தெரியவந்தது. விஜயவாடாவில் நேற்று அவரை பொலிஸார் கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது சரியாப் போச்சா... எப்படி?**




**காலையில் மனைவியைத் திட்டினேன். சாயங்காலம் அடி பின்னிட்டா....!**

**மனைவியின் அற்புதமான சமையலுக்கு கிடைத்த கோப்பை**




**கணவரின் தொப்பை!**

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | 8 | | | |
| | 6 | 1 | | | | 7 | | |
| 9 | | | | | | 5 | | |
| | | 3 | 7 | | 5 | | | |
| | | | | | 9 | | | |
| 8 | 7 | | | | 2 | 4 | 9 | |
| | | | | | | | | 2 |
| 2 | | | | 8 | 1 | | | |
| 1 | | 4 | 3 | | | | | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).


இந்த ஒவ்வொரு நிரையிலும், நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**அம்மா: ஏன் செல்லம் அழுற?**
**குழந்தை: அப்பா எனக்கு முத்தம் தரல்ல**
**அம்மா: நீ நல்லாப் படிச்சா அப்பா உனக்கு முத்தம் தருவாரு..**



**குழந்தை: நம்ம வீட்டு வேலைக்காரி மட்டும் என்ன ஐ.ஏ.எஸ். படிக்கிறாவா?**

**ஆசிரியர்: உலகம் ஒரு நாடகமேடை அதில் நாமெல்லாம் நடிகர்கள்....**
**மாணவன்: சார்.. அப்படின்னா எனக்கு ஜோடியா தமன்னாவைப் போடுங்க சார்...**




**பிச்சைக்காரர்: அம்மா தாயே... பிச்சை போடுங்க, நான் வாய் பேச முடியாத ஊமை.**
**வீட்டுக்காரம்மா: பக்கத்து வீட்டுல போய் கேளுப்பா... எனக்கு காது கேட்காது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஐ லைனர் இடும்போது....

1. ஐ லைனர் இடுவதற்கு முன்னர் கண்ணைச் சூழவுள்ள பகுதியை சுத்தப்படுத்தி, பவுன்டேஏன் சிறிதளவு இட்டு பிரகாசமாக்கிக் கொள்ளவும்.
2. கீழ் கண்மடலின் கோணத்தில் மேல்புறமாக கோடிடவும்.
3. கண்ணின் மேல் மடலில், எந்தளவுவில் ஐ லைனர் இடப் போகிறீர்களோ அந்த அளவுக்கு மேலோட்டமான கோடிடவும்.
4. 5 பின்னர் பக்கத்தில் இட்ட கோட்டுக்கும், கண் மடலின் மெல் இட்ட போட்டுக்கும் தொடர்பை ஏற்படுத்தவும்.




6. இடை வெளியை ஐ லைனர் பூச்சினால் நிரப்புக.

ஐ லைனரினை ஆரம்பத்தில் பயன்படுத்தபவராக இருந்தால், படத்தில் காட்டப்பட்ட படிமுறையைப் பயன்படுத்தவும். சிறப்பான ஐ லைனர் பூச்சு, தகுந்த மெல்லிய தூரிகையைக் கொண்டு கண் மடலைக் அலங்கரிக்கவும். கொண்டாட்டங்களுக்குச் செல்லும் தருணத்தில் பதற்றமடையாமல், முன்னரே பயிற்சி செய்து பார்ப்பது சிறந்தது.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 70 | 60 | 70 | 60 | 60 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 60–120 | 100 | 80–120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 50 | 60 | 50 | 60 | – | 60 |
| பயிற்றை | 100 | 80 | 120 | 100 | 100–120 | 160 | – | 60 |
| பாகல் | 120 | 100 | 160 | 120 | 120 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 60 | 80 | 60 | 60 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 80 | 120 | 100 | 120 | 100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 35 | 70 | – | 30 |
| தக்காளி | 60 | 60 | 60 | 50 | 40–60 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 40 | 40–50 | 80 | – | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 50 | 70 | 60 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 60 | 40 | 60 | 60 | 50 | 60 | – | 50 |
| கோவா | 70 | 80 | 60 | 80 | 60 | 80 | – | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 60 | 40 | – | 30 |
| போஞ்சி | 200 | 160 | 180 | 180 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 100 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 100–120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 400 | 500 | 500 | 500 | 550 | 600 | – | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 100 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 70 | 40 | 80 | 80 | – | 100 |

## கரட் ஊறுகாய்

தேவையான பொருள்கள்
கரட் - 150 கிராம்
பச்சை மிளகாய் - 10
எலுமிச்சை - இரண்டு
கடுகு - அரைத் தேக்கரண்டி
பெருங்காயம் - சிறிது
எண்ணெய் - ஒரு மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

### செய்முறை

கரட்டை நன்கு சுத்தம் செய்து துருவல் தட்டில் தேய்த்து, பூ பூவாகத் துருவிக் கொள்ளவும். பச்சைமிளகாயையும் பொடியாக நறுக்கி ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்.

எலுமிச்சம்பழங்களை பிழிந்து சாறு எடுத்து மிளகாய், கரட் துருவலுடன் சேர்த்துக் கொள்ளவும். தேவையான உப்பையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளவும். கடுகு, பெருங்காயத்தை தாளித்துக் கொட்டி கிளறி வைத்துக் கொள்ளவும். நன்கு ஊறியபின் பயன்படுத்த சுவையாய் இருக்கும்.





## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | பண்ணை | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 550 | 500 | – | 800 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | – | 300 | 300 | 550 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 600 | 700 | – |
| பாரை | 550 | 400 | 400 | – | 500 | 400 | 400 |
| சுறா | 500 | 500 | 500 | – | 600 | 500 | – |
| சீலா | 300 | 350 | 300 | – | 300 | 500 | 300 |
| விளை | 650 | 400 | 300 | – | 400 | 300 | 450 |
| முரல் | 300 | 300 | 300 | – | 250 | 400 | – |
| கும்பிளா | 400 | 200 | 400 | – | 200 | 300 | 200 |
| கிளாக்கன் | 800 | 500 | 300 | – | 400 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 200 | 300 |
| திரளி | 300 | 200 | 100 | – | 200 | 100 | 300 |
| நகரை | 250 | 200 | 100 | – | 200 | 200 | 300 |
| சூடை | 150 | 100 | 100 | – | 100 | 100 | – |
| ஓட்டி | 300 | 100 | 200 | – | – | 250 | 200 |
| திருக்கை | 150 | 250 | 200 | – | 300 | – | – |
| [illegible] | 150 | 100 | – | – | 250 | – | 200 |
| [illegible] | 100 | 100 | 50 | – | 100 | 50 | – |
| [illegible] | 400 | 100 | 300 | – | 100 | – | – |
| வாழை | 100 | 100 | – | – | 300 | 200 | 200 |

## இது புதுசு



தொலைக்காட்சி தாங்கிகள் அறிமுகமாகியுள்ளன. விதம்விதமான வடிவங்களில், நிறங்களில் அவை அறிமுகமாகியுள்ளன. இந்தத் தாங்கிகள் 7 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப ரீதியில் மேம்பட்ட உற்பத்திகளை அறிமுகம் செய்கிறது சிங்கர் சிறிலங்கா





டியூஓ ரு இன் வண் (DUO 2 in 1) மடிகணினி தற்போது சந்தையில்

நீண்ட கால பயனுறுதியுடைய தொழில்நுட்ப சாதனங்களின் விற்பனையிலும் வாடிக்கையாளர் சேவை நலனிலும் முன்னிலை வகித்துவருகின்ற சிங்கர் சிறி லங்கா நிறுவனம் தற்போது சிங்கர் டியூஓ ரு இன் வண் (DUO 2 in 1) மடிகணினி மற்றும் ரப் சாதனத்தை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்த சிங்கர் லைவ் ஸ்ரை (Life Sty) கண்காட்சி நிகழ்வின் போதே இவை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. இதன்பிரகாரம் சிங்கர் சிறீ லங்கா குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அசோக பீரிஸ், சிங்கர் சிறீ லங்கா நிறுவனத்தின் விற்பனை மற்றும் வர்த்தகத்துறை பணிப்பாளரான மகேஷ் விஜே வர்த்தன மற்றும் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தென் கிழக்கு ஆசியாவிற்கான புதிய சந்தைகளுக்கான அசர் உபகரண உற்பத்தியாளர் துறைப் பணிப்பாளரான பஸ்நாயக்க ஆகியோர் மேற்படி அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அறிமுகமானது பாவனையாளர்கள் தமது தேவையைப் பொறுத்து உபயோகிக்கக்கூடிய வகையிலே மடிகணினி வடிவம் மற்றும் ரப் சாதன வடிவம் என இரு வேறுபட்ட வடிவங்களில் வெவ்வேறாக அகற்றப்படக்கூடியதான சிறப்பம்சத்தையும் அதி சிறப்பு வாய்ந்த தொழில்நுட்ப அம்சங்களையும் கொண்டமைந்துள்ளது.

---

ஞாலு



## புதிய வகையான வாகனத்தரிப்பிடம்

இரண்டு கார்கள் மட்டுமே தரித்து நிற்கக்கூடியதான இடத்திலே பன்னிரண்டு கார்களை ஒரே நேரத்தில் விடக்கூடியதான புதுமையான கார் தரிப்பிடமொன்றை சீனா உருவாக்கியுள்ளது.

சீனாவின் சோங்கிங் நகரில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய வகையான கார்த் தரிப்பிடமானது அளவு பரிமாண ரீதியில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தரித்து நிற்பதற்காக வருகை தருகின்ற ஒவ்வொரு காரினதும் அளவிற்கேற்ப அது எங்கே தரித்து நிற்க வேண்டுமென்பதனை தானாகவே தீர்மானித்துக் கொள் கின்றது.

இவை தவிர ஒவ்வோர் காரினையும் உரிய முறையிலே தரித்துவிடுவதற்கு 90 விநாடிகளை மட்டுமே எடுத்துக்கொள்கின்றது. அத்துடன் கார் தரிப்பிடத்தை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்வதற்கான கைபேசி 'அப்' வசதியும் இதற்கு இணைவாக செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையிலே சனத்தொகை அதிகமாகவுள்ள நாடுகளில் இவ்வாறான வாகன தரிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



---

# இலங்கைக்கான கடன் உதவி திட்டம்

### "இரண்டாவது தொகை மதிப்பீட்டை" வழங்க சர்வதேச நாணய நிதியம் தீர்மானம்



சர்வதேச நாணய நிதியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைக்கான கடன் வழங்கும் திட்டத்தின் செயன்முறைகள் திட்டமிட்டபடி இடம் பெற்று வருகிறது.

அந்தவகையிலே நாணய நிதியத்தால் வழங்கப்பட்டு வருகின்ற கடன் தொகையின் இரண்டாவது பகுதியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 162.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை இரண்டாவது கடன் தொகைமதிப்பீடாக இலங்கை அரசிடம் கையளிக்கவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் குறித்துக் காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு இதுவரை 325.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன்தொகை மதிப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த கடன் திட்டத்தின் கீழாக இலங்கை அரசு 1.45 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசினால் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றவரிக்கொள்கை மற்றும் வரவு செலவுத் திட்டத்தின் நேர்முறையினைக் கருத்திலெடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் நிறை வேற்றுக்குழு இந்தக் கடன் வழங்கும் திட்டத்தை நடை முறைப்படுத்துகின்றமை நோக்கத்தக்கது.

வணிகம்

---

# சீன உதவியுடன் தொழிற்பேட்டை



சீனாவின் நிதி முதலீட்டின் பங்களிப்புடன் 15,000 ஏக்கர் அளவுடைய காணியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது கருத்துரைத்ததாக தெரிய வருகிறது.

இதன் பிரகாரம் இந்த செயற்றிட்டத்துக்கான காணி பெறுகை தொடர்பில் தெற்குஅபிவிருத்திஅமைச்சு ஈடுபட்டுவருவதாகவும் தொழிற் பேட்டைக்கான சூழமைவுகளை அறிந்து கொள்வதற்கு சீன நிறுவனங்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாகவும் தனது உரை மூலம் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் கணித் தெரிவானது புத்தல மற்றும் யால பகுதியிலும் அங்கு பொருத்தமற்ற தன்மைகள் காணப்படுமிடத்து மொனராகல, எம்பிலிபிட்டிய பிரதேசங்களில் தெரிவு முறைகள் இடம் பெறுமெனவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

---

CSE
COLOMBO STOCK EXCHANGE

| 23/11/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| [illegible] | | [illegible] | [illegible] |
| ASPI | -13.30 | 6,242.68 | 6,255.98 |
| S&P SL20 | -5.60 | 3,468.05 | 3,473.65 |
| வியாபாரப்புரள்வு | | 284,860,000 | 648,995,520 |
| உள்நாடு- கொள்வனவு | | 251,258,928 | 353,826,784 |
| விற்பனை | | 150,561,808 | 345,071,520 |
| வெளிநாடு- கொள்வனவு | | 33,601,068 | 295,168,736 |
| விற்பனை | | 134,298,192 | 303,924,032 |



பங்குச் சந்தை தகவல்கள்

| அதிகூடிய பங்குப்புரள்வு | | | | |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 146 | 771,760 | 111,929,7[illegible] |
| அக்செஸ் இஞ்சினியரிங் | AEL.N | 23.90 | 1,489,924 | 35,727,[illegible] |
| ஏசீல் கேபிள் | ACL.N | 59.9 | 307,406 | 18,4[illegible] |
| லாஃப்ஸ் காஸ் | LGL.N | 32.50 | 509,309 | 16,595,[illegible] |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | [illegible] | 155,190 | [illegible]7,836,[illegible] |
| வலிபல் பைனான்ஸ் | VFIN.N | 59 | 114,443 | 6,752,0[illegible] |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 59.8 | 105,328 | 6,34[illegible] |
| ரெக்ஸ்பேட் பொரஸ் | TJL.N | 42.0 | 144,847 | 6,0[illegible] |
| லங்கா ஐ.ஓ.சி | LIOC.N | 33.7 | 133,110 | [illegible] |
| லைன்றோன் லூப்ரிகன்ட்ஸ் | LLUB.N | 156 | 28,056 | [illegible] |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் (CCS) - பங்கு ஒன்றிற்கு Rs [illegible]
லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் (LHCL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
கொமர்சியல் வங்கி (COMB) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50

சந்தைக் குறிகாட்டிகள்

| | |
|---|---|
| பங்கிகள் | [illegible] |
| [illegible] | [illegible] |
| [illegible] உழைப்பு | [illegible] |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசுள்ள குடிதண்ணீர் போத்தல் விற்றோருக்கு தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

மாசுத்துணிக்கைகள் கலந்த குடிதண்ணீர்ப் போத்தல்களை விற்பனை செய்தமையுடன் பொய்யான தகவல்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு வழங்கிய உற்பத்தியாளர், முகவர், விற்பனையாளர் ஆகிய மூவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையையடுத்து 99 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

முல்லைத்தீவுப் பகுதியில் விற்பனை செய்யப்படும் குடிதண்ணீர்ப் போத்தல்களில் மாசுத்துணிக்கைகள் இருப்பதை அவதானித்த பொதுமக்கள் இது குறித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குத் தெரியப்படுத்தினர். சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் அந்தப்பகுதியிலுள்ள வங்கி, மின்சாரசபை ஆகியவற்றிலிருந்த குடிதண்ணீர்ப் போத்தல்களைச் சோதனை செய்தபோது மாசுத்துணிக்கைகள் இருப்பதை அவதானித்துள்ளார்.

அதையடுத்து 20 லீற்றர் கொண்ட 10 குடிதண்ணீர்ப் போத்தல்களைக் கைப்பற்றி, முல்லை மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைத்த சுகாதாரப் பரிசோதகர் உற்பத்தியாளர், முகவர் விற்பனையாளர் ஆகிய மூவருக்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையையடுத்து நீதிவான் மாசுத்துணிக்கைகள் கலந்த குடிதண்ணீரை விற்பனை செய்தமைக்காக மூவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் 90 ஆயிரம் ரூபாவும், சுகாதாரப் பரிசோதகருக்குப் பொய்யான தகவல்களை வழங்கியமைக்காகத் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார். (ற-115)

## ஜி.சீ.ஈ. பரீட்சையில் கடமையாற்றுவோருக்கு அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 24

க.பொ.த. சாதாரண பரீட்சையில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும்.

கூட்டத்தில் கலந்து கொள்ளும் அலுவலர்கள் மாத்திரமே பரீட்சைக் கடமைகளில் கடமையாற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

## மின் ஒழுக்கால் வீடு சேதம்

முல்லைத்தீவு, நவ. 24

முல்லைத்தீவு முள்ளியவளையில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணியளவில் திடீரென மின் ஒழுக்கு ஏற்பட்டது. அதில் வீட்டின் அறையொன்றின் ஒரு பகுதி எரிந்து சேதமடைந்துள்ளது. வீட்டில் பொருத்தப் பட்டிருந்த மின் குமிழ்களும், வயர்களும் எரிவடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் முல்லைத்தீவு மின்சார சபை தகவல் வழங்கியுள்ளார். சம்பவ இடத்துக்கு வருகை தந்த மின்சார சபையினர் மின் இணைப்பை துண்டித்தனர். மின் ஒழுக்குக்கான காரணம் கண்டறியப்படவில்லை. (ற-7,102)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**நாகலெட்சுமி நமசிவாயம்**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
எமக்கு வழிகாட்டும் மணிவிளக்கே
அன்பான உங்கள்முகம் தான்
வெகுதூரம் போனதெங்கே
கார்த்திகை மாதமதில்
எதிர்பாராவேளைதனில்
ஒருநொடியில் எமையெல்லாம்
தவிக்கவிட்டு
நீங்கள் விண்ணுலகம்
சென்ற மாயமென்ன?
என்றும் உங்கள் நினைவுகள்
எம்மோடு கலந்திருக்கும்...

மண்ணில் 05.06.1936
விண்ணில் 06.12.2015

சிரி இரும்புத் தொழிற்சாலை,
70,ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
57.ஓடைலேன்.

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 10 . 04 . 1938



இறைவன் அடியில் 24 . 11 . 2015

**அமரர் ஆசீர்வாதம் சவரிமுத்து**

'உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'
(யோவான் 11:25)

ஓராண்டு கடந்து சென்றாலும் கனிவு மிக்க உம் உள்ளமும்
நீர் காட்டிய அன்பும் உறவுகளின் தோழமையும்
எம் மனங்களை விட்டு என்றும் மறையாது
உம் ஆன்மா இறைவன் பதம் அமைதி பெற
என்றும் பிரார்த்திப்போம்.

மைத்துனர், மைத்துனி, மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

No.1, புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர்.

## நீங்காத நினைவுகளுடன் 3 ஆம் ஆண்டு



**பத்திநாதன் புஸ்பவதி**

தோற்றம் 28.12.1960
மறைவு 24.11.2013

24.11.2016

நித்திய இளைப்பாற்றி அளித்தருளும் இறைவா
நீர் எம் அம்மாவின் பரிசாய் இருந்தருளும்
ஆண்டுகள் நூறு ஆனாலும் ஆறாது
எம் மனங்கள் .........
உம் பூமுகமும் புன்சிரிப்பும் எம்
கண் முன் தெரியுதம்மா
உங்கள் நினைவுகளில்
நாங்கள் வாழ்கின்றோம்
ஆண்டவருக்குள் அமைதியாய்
உறங்கியபடி உங்கள்
ஆசீர்வாதங்களால் எங்களை
வழி நடத்துங்கள்.......

திருநகர், கிளிநொச்சி.
(K 226) (22,18,21)
கணவர், பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வில் ஓராண்டு........

உயிராகி உலகில் 18 . 04 . 1948



துயராகி நினைவில் 06 . 12 . 2015

**அமரர் செல்லர் இராசமணி**

திதி: கார்த்திகைத் திங்கள் அபரபக்க ஏகாதசி (24.11.2016)

பன்னிரண்டு மாதங்கள் பார்த்திருக்க பறந்ததப்பா!
அன்பின் அடைக்கலமே! விருந்தோம்பல் பண்பாளனே!
பாசத்தின் சிகரமே தேசத்தின் தொண்டனே!
எம் குடும்ப தியாக தீபமே!
நித்தம் நாம் பார்த்த நின் புன்னகை வதனம் எங்கே?
பக்க மெல்லாம் தினம் ஒலித்த சமாதானத்தின் பாசக்குரல் எங்கே?
சிந்தனையில் நீர் மூழ்கி நிற்க உம் தலைசுருட்டிய கரங்கள் எங்கே?
தேடுகிறோம் இவ்வுலகில் அத்தனையும் ஏமாற்றம்........
இவ்வுலகில் நாம் வாழ்வாங்கு வாழ உங்களை உருக்கி - எங்களிற்கு
ஒளி ஊட்டி- எங்களை சீராக்கிய சிற்பி ஆனீர்
இன்னும் சில காலம் எம்மோடு இருப்பீர் என நாம் நினைக்க
ஏன் இந்த அவசரமோ இன்னும் தான் புரியவில்லை - ஆனாலும்
வேண்டுகிறோம் அப்பாவின் நல்லாசிகளும் வழிகாட்டலும்
என்றும் எங்களுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

சித்திர வேலாயுதர் கோயிலடி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.
021 227 0889

## பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 . 09 . 1921



விண்ணில் 22 . 11 . 2000

**அமரர் அருணாசலம் ஆறுமுகம்**

(முன்னாள் உபஅதிபர் - சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சமாதான நீதிவான்)

திதி: ஏகாதசி

கற்பனையிலே மிதந்த படியிலும் கனவுகள் கலைந்த நிலையிலும்
கண்ணீர் மழையில் நனைந்த படியும்
உங்களை என்றும் நினைத்துப் பார்க்கின்றோம்
ஐயா! நீங்கள் இல்லை என்று எங்களால் நம்பமுடியவில்லையே
எமது கண்முன்னே நீங்கள் தினமும்
கம்பீரமாக நடமாடுகின்றீர்களே!
உங்களை எங்களால் மறக்கத்தான் முடியுமா?
மகிழ்வுடன் தான் இருக்க முடியுமா?
ஆண்டுகள் பதினாறும் கடந்து விட்டன
பதினாறு ஆண்டுகளென்ன ஒருயுகம் சென்றாலும் உங்களை
நாம் என்றென்றும் மறவோம்

தாமோதரம் வீதி,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்து
கொண்டிருக்கும்
ஜெயபதி குடும்பம்

(C/26599)(12.18.21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மக்கள் பெரும் அச்சத்தில்

## சிவில் அமைப்புகள் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.24
கிழக்கு மாகாண மக்கள் தற்போது பெரும் அச் சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்துக் கான அரங்கத்தின் கிழக்கு மாகாணத் தலைவர் வர்ணகுலசிங்கம் கமலதாஸ் தெரிவித்தார்.

இது குறித்து நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

அதிகார அழுத்தங்கள் இருப்பதாக அச்சப்படும் சூழ்நிலையில் சட்டத்தில் என்ன வகையான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பது பற்றி எது வும் தெரியாதவர்களாக மக்கள் இருக் கின்றார்கள்.

சிவில்நிர்வாகத்தைச்செயற்படுத்தக்கூடிய பொறுப்புள்ள அலுவலர்களான பொலி ஸாரின் நடவடிக்கைகள் நடு நிலையா னதாக இல்லை. அது பாரபட்சமும் பக்கம் சார்பானதாகவும் காணப்படுகின்றது. இதனையிட்டு மக்கள் மேலும் அச்சம டைந்துள்ளார்கள்.

இதனால் கிழக்கு மாகா ணத்தில் பரவலாக அச்சம் ஏற்பட்டுள்ளதோடு புதிய முரண்பாடு களும் தோன்றுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பொலிஸ் விசாரணையின் போதுகூட அதி கார அழுத் தங்கள் பிரயோகிக்கப்படுவ தாக மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

பொலிஸ் உயரதிகாரிகளைச் சந்திக்கக் கூடிய செல்வாக்குடையவர்களுக்கு மாத் திரம் பொலிஸாரின் சிநேகமான நட்புறவு கிடைப்பதாகவும் சிவில் சமூகம் கருது கிறது.

மாற்றுக் கருத்துக்களை மௌனிக்கச் செய்ய வேண்டும் என்பதில் அதிகாரிகள் அக்கறையாக இருப்பதாகவும் இது மீண் டும் போர்க் காலத்தைப் போன்று அச் சுறுத்தலான செயற்பாடுகளுக்கு வழி வகுக்கின்றதா என்றும் ஐயப் படக்கூடியதாக இருக்கின்றது.

ஒட்டு மொத்தத்தில் சமகால நாட்டு நடப்பு களையிட்டு மட்டக் களப்பு மாவட்டத் திலே செயற்படும் சிவில் அமைப்புகள் குழம்பிப்போய் இருக்கின்றன. ஆனாலும், எத்த கைய சூழ்நிலையி லும் ஜனநாயக விரோதச் செயற் பாடுகளுக்கு ஒரு போதும் விட்டுக் கொடுக்கக் கூடாது எனச் சிவில் அமைப் புகள் திடசங்கற்பம் கொண்டுள்ளன- என்றார். (த-ய-46)

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
3மாத, ஒரு மாத ஊர்க்கோழி, வான் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
**077 2453673**

**கண்ணீர் அஞ்சலி**
யாழ். மாவட்டச் செயலக இலங்கை சமூக பாதுகாப்பு சபையில் பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்
**திரு.மார்க்கண்டு சூரியகாந்** அவர்களின் அன்புத்தாயார்.
திருமதி **அன்னபூபதி மார்க்கண்டு**
அவர்கள்21.11.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்ததை யிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
(சி/26707)(7.19.20)
**யாழ். மாவட்டச் செயலக நலன்புரிகழகம்.**

# போதைப்பொருள்கடத்தலை தடுக்கக் கடலில் கண்காணிப்பு

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 24
ஹெரோயின் கடத்தல்காரர்களைக் கைதுசெய்யும் வகையில் கடலில் பாது காப்பு நடவடிக்கைகளை விரிவாக் கியுள்ளதாகக் கடற்படை தெரிவித்துள் ளது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஹெரோ யின் கடத்தும் முயற்சி களைக் கடற்படை ஏற்கனவே பல்வேறு சந் தர்ப்பங்களில் முறியடித் துள்ள தாகக் கடற்படைத் தளபதி ரவீந்திர விஜய குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

கடல்மார்க்கமாக ஹெரோயின் கடத்தும் நடவடிக்கை குறித்து கடற்படையின் புலனாய்வுப் பிரிவு உன்னிப்பாக அவ தானித்துவருவதாகக் கடற்படைத் தள பதி கூறினார். (தி)




**யாழ்ப்பாணம் மாநகரசபை**
**உழவு இயந்திரங்கள், சிறியரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல்**

01) யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக் கப்படுகின்ற வட்டார ஆதனங்களிலிருந்து வெளியேற்றப் படும் திண்மக் கழிவுகளினை வகைபிரித்து எடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக் கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு உழவு இயந்திரங்கள் தேவைப் படுகின்றது.

02) யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக் கப்படுகின்ற வட்டாரங்களின் கடைகள் சந்தைகளில் வெளி யேற்றப்படும் பிளாஸ்ரிக் மற்றும் இறைச்சி எலும்புகளினை எடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளி யிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சிறிய ரக வாகனம் தேவைப்படுகின்றது.

இச்சேவையினை வழங்கக் கூடிய வழங்குநர்கள் 28.11.2016ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சபையின் கொள்வனவுப் பகுதியுடன் தொடர்பு கொண்டு இதற்குரிய கூறுவிலைப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து எதிர் வரும் 09.12.2016 வெள்ளிக்கிழமை முன்னதாக அதற் குரிய கூறுவிலைப் பெட்டியினுள் சேர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு **071 862 8580** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பொ.வாகீசன்**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**
(C/ 26704) (11.17.21)

# திடீர் தேடுதலில் கொழும்பில் 10 பேர் கைது

## வேட்டை தொடருமாம்

கொழும்பு, நவ. 24
கொழும்பில் நேற்று இடம்பெற்ற 4 மணிநேர சுற்றிவளைப்புத் தேடுதலில் 10 பேர் கைது செய்யப் பட்டனர். கைது வேட்டை தொடரும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகியுள்ள குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை யும், போதைப் பொருள் சந்தேக நபர்களையும் தேடியே கொழும் பின் தோட்டப் பகுதிகளில் திடீர் தேடுதலை நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையி னரின் ஒத்துழைப்புடன் இந்த தேடுதல்முன்னெ டுக்கப்படுகிறது.

அதன்படி மட்டக்குளி, சமித் புர பகுதியில் நேற்று 4 மணி நேரம் முன்னெடுக்கப் பட்ட தேடுதலில் 10 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் தேடுதல் வேட்டையின் போது, போதைப் பொருளினைக் கண்டறிய பயிற்றப்பட்ட மோப்ப நாய்களும் பயன் படுத்தப்பட்டன என்று பொலிஸர் குறிப் பிட்டனர். (வ-4)

**கேள்வி அறிவித்தல்**
**தனியார் பாதுகாப்பு சேவை**
**யாழ்ப்பாணம் மாநகர சபை**

01) யாழ்ப்பாணம் மாநகர சபையின் வடமாகாண உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் வேலைநாள்களில் காலை 9 மணி முதல் மாலை 2.00 மணி வரை 24.11.2016 - 15.12.2016 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

03) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 24.11.2016 ஆம் திகதியில் இருந்து 15.12.2016 வரை காலை 9 மணிக்கும் மாலை 2 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000.00 + வற் வரியினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

04) கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 15.12.2016 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலை யில் திறக்கப்படும்.

தலைவர்/ஆணையாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு
மாநகரசபை
யாழ்ப்பாணம்
24.11.2016
(சி/26765) (7.19.20)

**மரண அறிவித்தல்**
**சின்னத்துரை ஸ்ரீஅன்பழகன்**



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக வும் இலக்கம் 10 திருமகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஸ்ரீ அன்பழகன் 20.11. 2016 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத் துரை - மகேஸ்வரி தம்பதி யரின் மூத்த மகனும், இராச ரெத்தினம்-நல்லம்மா தம் பதியரின் மூத்த மருமக னும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், கலைச் செல்வியின் பாசமிகு சகோதரனும், சுபாசினி, யசிதரன், சுயாத்தா, விஜிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி, காலஞ் சென்றவர்களான மணிமகலாதேவி, கணேசலிங்கம், கண்ணன் மற்றும் மகாலிங்கம் (சுவிஸ்), கனகலிங்கம் (லண்டன்), யோக சாந்தா (லதா-சுவிஸ்) ஜெய்நூடின் ஆகியோரின் பாசமிகு மைத்து னரும் ஜெயக்கொடி, முத்துலிங்கம், நித்திய லட்சுமி, கலா, சுவேந் திரன் ஆகியோரின் சகலனும், சுரேந்திரன் யதீசன் ஆகியோரின் பாசமிகு மாமனும், குமணன், பவித்திரா, கஸ்வினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.11.2016 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயா னத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.10, திருமகள் வீதி,**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**
(J/6328) (10.17)
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆயிரத்தம்மா (சரஸ்வதி) கதிர்காமன்



பிறப்பு:10.06.1941
இறப்பு:22.11.2016

கொழும்பைப் பிறப்பிடமாகவும், மணிக்கூட்டு வீதி . யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆயிரத்தம்மா கதிர்காமன் 22.11.2016 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் கதிர்காமன் (கதிர்காமன் இரும்புத் தொழிற்சாலை உரிமையாளர்) அவரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுரேஸ்குமாரின் (சுரேஸ்) அன்புத் தாயாரும் மாசாணப்பிள்ளை - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் , இராமகிருஷ்ணன் மற்றும் இராமேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வடிவழகி. காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சங்கரன் (இந்தியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**7/3, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**0777 917 753** (சதீஸ் - முகாமையாளர்- மலாயன் கபே)



திருமதி
### தனலெட்சுமி சுந்தரலிங்கம்

ஊர்காவற்றுறை, கரம்பனைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலெட்சுமி சுந்தரலிங்கம் 22.11.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் அ.சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் சுரேஸ்குமார் (ஆஸ்திரேலியா), தனேஸ்குமார் (கண்ணன்), சிவகுமார் (லண்டன்), ராஜ்குமார் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் சிவாஜினி, சத்தியபாமா, சத்தியவாணி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பரதராசா மற்றும் சத்தியமூர்த்தி, யோகநாதன், விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சோமலிங்கம் பூலோகசுந்தரம் பிள்ளை (சோதி), ராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சுவேத்தா, சஞ்சை, தமிழ்மதி, பாவலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2016) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**15, கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.**

தகவல்
**சு.தனேஸ்குமார்
(தூயவன்-மகன்)
077 3662802**

# இந்தியாவை தாக்கிவிட்டு சீனாவுக்கு பறந்த மகிந்த

மகிந்த ராஜபக்ச நேற்று ஆரம்பித்தார். இதற்கு முன்னதாக நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை, கொழும்பில் ஊடக ஆசிரியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது அவர் இந்தியா மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எனது ஆட்சிக் காலத்தில் புதுடில்லி கடைப்பிடித்த அணுகுமுறையைவிட இப்போதைய அரசுடன் இந்தியா மென்மையான போக்கை கடைப்பிடிக் கிறது.

கொழும்பில் சீன நீர்மூழ்கி தரித்து நின்றபோது இந்தியா சீற்றம் கொண்டது. இந்தியப் பெருங்கடலுக்குள் தமது நீர்மூழ்கி நுழைவதற்கு முன்னர், பீஜிங்கில் உள்ள இந்தியத் தூதரகத்துக்குச் சீனா தகவல் கொடுத்தது. அது எனக்குத் தெரியும். அவர்கள் அதற்குப் பெரிதாகக் கதறினார்கள்.

பெருமளவு நிலத்துடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசு சீனாவுக்குக் கொடுக்கும் போது, இந்தியா மௌனமாக இருக்கிறது.

நீர்மூழ்கிகள் விவகாரத்தைப் பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொண்டார்கள். இன்று, முழுத் துறைமுகமும் சீனாவுக்கு வழங்கப்படும்போது, இந்தியாவுக்கு பிரச்சினையில்லையா?

இராஜதந்திர உறவுகளில் உள்ள வேறுபாட்டையே இது காட்டுகிறது.

நாட்டையோ, நாட்டின் எந்தவொரு பிராந்தியத்தையோ அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு உதவியைப் பெறுவதை நான் எதிர்க்கவில்லை. வெளிநாட்டவர்களுக்கு நிலத்தை விற்பதை எதிர்க்கிறேன்.

அம்பாந்தோட்டையில் உள்ள காணிகளைச் சீனாவுக்கும், திருகோணமலையில் உள்ள காணிகளை இந்தியாவுக்கும், கொடுக்க அரசு முயற்சிக்கிறது. காய்கறிகள் உற்பத்திக்காக ஜப்பானுக்கு ஆயிரம் ஏக்கர் காணிகளை வழங்கவும் முயற்சிக்கிறார்கள்.

99 ஆண்டு குத்தகைக்குக் காணிகளை வழங்குவதையும் நான் எதிர்க்கிறேன். 99 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தக் காணிகளை உங்களால் மீளப் பெறமுடியுமா? அது நடக்காது என்றார். (த-5)

# தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதை தவிர்க்கிறது அரசு

னது, போரில் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்களுக்கு உண்மை மற்றும் நீதியை வழங்குவதைத் தவிர்க்கும் முயற்சியாக இருக்கக் கூடும்.

இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ள போர்க்குற்ற விவகாரங்களுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ஸ்டீபன் ஜே ராப், அமெரிக்காவின் ஆட்சி மாற்றத்தினால் இலங்கை விவகாரத்தில் மாற்றம் ஏற்படாது என்றும் குறிப் பிட்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும், தூதுவராகப் பணியாற்றியவர் ஸ்டீபன் ஜே ராப். ஹேக்கில் நடைபெறும், பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கான அரச தரப்புகளின் அவைக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

இதில் பங்கேற்றுள்ள அவர் கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில், இலங்கையில் வழக்குத் தொடுநர் பணியகத்தை இன்னமும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. இதற்கான ஆரம்பக்கட்டப் பணிகளைச் செய்யாமல் உடனடியாக, நீதிமன்றத்தை அமைக்க முடியாது.

இந்த விசாரணைகளுக்காக அரசு விசாரணை அலகுகளையும், வழக்குத்தொடுநர் பணியகத்தையும் உருவாக்க முடியும். அப்போது தான் போர்க்குற்ற வழக்குகள் இருந்தால், அதனை உடனடியாக ஆரம்பிக்க முடியும். இல்லாவிடின், உடனடியாக நீதிமன்றப் பணிகளை ஆரம்பிக்க முடியாது.

நீதிப் பொறிமுறைகளை உருவாக்குவதைத் தள்ளிப் போடுவது, அதனை முற்றிலுமாகத் தவிர்க்கின்ற ஒரு முயற்சியாக இருக்கக் கூடும். காணாமற் போனோர் பணியக சட்டத்தின் மூலம், இலங்கை அரசு சில தடைகளை அகற்றியுள்ளது முக்கியமானது.

உண்மையைக் கண்டறிதலில் தான் நீதிச் செயன் முறைகள் ஆரம்பிக்கும். குற்றவியல் நீதி உண்மையை கண்டறியும் செயல்முறைகளில் தான் ஊற்றெடுக்க ஆரம்பிக்கிறது. உண்மையைக் கண்டறிதலில் இருந்து நீதியை வழங்குவது வரை இலங்கைக்கு இது முக்கியம்.

அமெரிக்காவில் அமையப் போகும் ட்ரம்பின் ஆட்சி, உலகளாவிய நீதி தொடர்பான வேறு விதமான பார்வையைக் கொண்டதாக இருக்கலாம்.

வொசிங்டனில் உள்ள அதிகாரிகளும் இராஜதந்திரிகளும், இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரங்களில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டேயிருப்பார்கள், என்று தெரிவித்துள்ளார். (த-5)

# மகிந்தவை நேரடி விவாதம் நடத்த அழைக்கிறார் ரவி

வுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்தாவது:

மக்கள் நேய வரவு செலவுத் திட்டத்தை நாம் சமர்ப்பித்துள்ளோம்.

அதில் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறை கூற முடியாது. ஆனால், எதிர்க் கட்சிகள் எதிர்க்கவேண்டும் என்பதற்காகவே அதை எதிர்க்கின்றன.

முன்னாள் ஜனாதிபதியான - முன்னாள் நிதி அமைச்சரான மகிந்த ராஜபக்சவால் அவரது காலத்தில் 10 ரூபாவைக் கூட நிவாரணமாக வழங்க முடியவில்லை. ஆனால், நாம் அதிக நிவாரணங்களை வழங்கியுள்ளதால் பொறாமையால் வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் பொய் கூறித் திரிகின்றார்.

இது தொடர்பில் விவாதிப்பதற்கு நாம் அவரை அழைக்கின்றோம். அவர் எங்கு அழைத்தாலும் நான் வருவதற்குத் தயார். அம்பாந்தோட்டைக்கு வேண்டுமென்றாலும் வருகிறேன். வாருங்கள் விவாதிப்போம். சும்மா சந்திகளில் நின்று பொய் கூற வேண்டாம்.

குறைந்தது நாடாளுமன்றிலாவது விவாதத்துக்கு வாருங்கள். அதிலுள்ள குறைபாடுகளை நேருக்கு நேரே சுட்டிக் காட்டுங்கள்.

அதற்கான பதிலை நான் அப்போது வழங்குவேன். அப்போதுதான் மக்கள் உண்மை நிலையை விளங்கிக் கொள்வார்கள். அப்படி இல்லாது இப்படி ஒளிந்து குறை கூறித் திரிவதில் அர்த்தமில்லை.

மகிந்த கூறித் திரிகின்ற அத்தனை விடயங்களும் பொய்யாகும். அது பொய் என்பதை நாம் நிரூபித்து வருகின்றோம். இது தொடர்பில் நேரடி விவாதத்துக்கு வந்தால் மக்கள் உண்மையை விளங்கிக் கொள்வார்கள் - என்றார். (த-5)

# கொள்ளைக் கும்பலிடம் கத்திகள், வாள்கள் மீட்பு

மற்றும் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேகத்தில் 4 பேர் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து தங்க நகைகள், கைக் குண்டுகள், கத்திகள், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பன ஆரம்பத்தில் கைப்பற்றப்பட்டிருந்தன.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின்போது சிலாவத்துறை, மன்னார், செட்டிகுளம், கோவில்குளம், இராசேந்திரகுளம், பொன்னாவரசங்குளம், அடம்பன், தச்சன்குளம், மாங்குளம், கனகராயன்குளம், ஒட்டுசுட்டான் போன்ற பிரதேசங்களில் வீடுகளை உடைத்துக் கொள்ளையில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

தங்க நகைகளையும் திருடியதாகவும், திருடப்பட்ட நகைகள் தொடர்பாக அவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் இருந்து 12 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் உருக்கப்பட்ட நிலையில் தங்கக் கட்டிகளாகக் கைப்பற்றப்பட்டிருந்தன. அவர்களிடம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது, மேலும் சில ஆயுதங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன. (த-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவரைச்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் நினைவு கூரப்பட்டு வரும் சூழலில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் நாளை மறுதினம் சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ள நிலையிலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றுள்ளது. இதனால் பல்கலைக்கழக சமூகத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆண்கள் விடுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு, மாணவன் ஒருவனின் பிறந்த நாளுக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பல்கலைக்கழக அயல் சூழலில் உள்ள மாணவர்களையும் அழைத்துள்ளனர்.

பல்கலைக்கழக விடுதிக்கு வெளியில் வசிக்கும் மாணவர்கள், விடுதிக்குள் வந்து சேர்ந்த சில நிமிட நேரத்தில், பொலிஸார் பல்கலைக்கழக விடுதிக்குள் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்ததாவது: பல்கலைக்கழக ஆண்கள் விடுதி வாசலில் இருந்த காவலாளியை அச்சுறுத்தியே பொலிஸார் உள்ளே பிரவேசித்தனர். நான்கு பொலிஸார் காக்கி உடையுடன், துப்பாக்கியை ஏந்தியவாறு அத்துமீறி விடுதிக்குள் உள் நுழைந்தனர். விடுதிக்குள் பிறந்த தின விழாவில் கலந்துகொண்ட நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். பொலிஸார் உள்ளே வருவதைக் கண்ட நாம் பொலிஸாரிடம் நீங்கள் ஏன் இங்கு வருகின்றீர்கள்? வந்ததன் காரணம் என்ன? என்று கேட்டோம்.

இங்கு யார் கேக் வெட்டி கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் தொந்தரவுகள் ஏற்படுவதாக 119 பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு எமக்கு முறைப்பாடு வந்துள்ளது. இதனால் தான் நாம் இங்கு வந்தோம் என்று பொலிஸார் எம்மிடம் தெரிவித்தனர். விடுதிக்குள் நீங்கள் நுழைவதற்கு அனுமதியை பெறவேண்டும். விடுதி தொடர்பில் விடுதிக் காப்பாளரிடம் தொடர்பு கொள்ளவேண்டும். அதை விடுத்து மாணவர்களை அச்சுறுத்துவது போல் செயற்படுவது நீதி அல்ல என்று தெரிவித்தோம்.

பொலிஸார் இதன்போது, துப்பாக்கியைக் காண்பித்து–எதிர்த்து ஏதாவது கதைத்தால் உங்களைச் சுட்டுக்கொலை செய்வோம் என்று மிரட்டினர். அத்துடன் மாணவர்களின் விவரங்களையும் பெற்றுச் சென்றனர். நாம் இதனால் அச்சமடைந்துள்ளோம். பல்கலைக்கழக துணைவேந்தரிடம் முறைப்பாடு செய்துள்ளோம். விசாரணை செய்வதாகச் சொல்லியுள்ளார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளையிலும் முறைப்பாடு செய்துள்ளோம் – என்றனர். (த-5-8)

## புலிகளை...

இராணுவம் பார்த்துக்கொள்ளும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சர் ராஜித தெரிவிக்கையில், இதுபோன்ற (மாவீரர் தினம்) கருத்துக்களை வெளியிடுகின்றவர்கள் சிலர்தான். கடந்த முறை சிவாஜிலிங்கம் மாவீரர் தினத்தை அனுட்டித்தபோது 13 பேர் தான் இருந்தனர். இந்த முறை எத்தனை பேர் என்று பார்ப்போம். கடந்த முறை இடம்பெற்ற தேர்தலில் அவர் எத்தனை வாக்குளை எடுத்தார். அதுபோல சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு நடந்தது என்ன? கொழும்பிலிருந்து சென்ற சுமந்திரனை ஏன் மக்கள் வெற்றியடையச் செய்தனர். தமிழ் மக்கள் நடுநிலையான நிலைப்பாட்டில் இருக்கின்றனர். இறந்த தமது உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவு கூருவதில் தவறில்லை. ஆனால், புலிகளை நினைவுகூருவது குறித்து இராணுவம் பார்த்துக்கொள்ளும் – என்றார்.

வடக்கு முதலமைச்சரின் கூட்டாட்சி பற்றிய கருத்து தொடர்பான கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர்,

கூட்டாட்சி என்பது ஒரு எண்ணக்கரு. இது உலகில் பல நாடுகளில் இருக்கின்றது. ஆரம்பத்தில் மலையக நாட்டிலிருந்த சிங்கள மக்கள்தான் கூட்டாட்சியைக் கோரினர். அரசியல்வாதிகளில் 1926 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கதான் முதன் முதலில் கூட்டாட்சியைப் பற்றி கூறினார். நாட்டை அபிவிருத்தி செய்து முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூட்டாட்சியே சிறந்தது என்று கூறினார்.

பிற்காலங்களில் ஒவ்வொருவரும் வாக்குகளைச் சேகரிக்க இதை மறந்து, அச்சப்பட்டு அது இல்லாது போயுள்ளது. நாட்டை அபிவிருத்தி செய்ய அதிகாரப் பகிர்வு மிகவும் சிறந்தது என்றே நான் அன்று முதல் கூறுகின்றேன். மக்கள் தத்தமது மாகாணங்களை அபிவிருத்தி செய்ய சிறு கிராமராச்சியம் வரை அதிகாரத் தைப் பகிர்ந்தளித்து அவர்களுக்கு இடமளிக்க வேண்டும். அப்போது ஒரு மாகாணம் போல ஏனைய மாகாணங்களும் அபிவிருத்தி அடையும் என்றார். (த-5)

## தமிழ்க்...

கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள, தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் கடந்த ஒக்ரோபர் மாதம் கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

பெறப்பட்ட கையெழுத்துக்களை ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மனுவாகக் கையளித்துள்ளதாக, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது. (த-5)

## மாவீரர்...

நெஞ்சு ரத்தோடும் – நேர்மைத்திறனோடும் எதிர்த்து நின்ற நின்று மண்ணுறங்கிக் கிடக்கும் 'மாவீரத்தை' தட்டி எழுப்பிக் கௌரவப் படுத்துவோம்.

மாவீரர்களின் உயிர்க்கொடையே இன்றுள்ள தமிழ் தேசிய இனத்தின் உயிர்வாழ்வு. மாவீரர்நாளான நவம்பர் 27 ஆம் திகதி மாலை 6.05 க்கு எனது மொழி தமிழ், எனது பிறப்பு தமிழன் – தமிழிச்சி என்று உணருகின்ற ஒவ்வொரு தமிழ் மகனும், ஈகச் சுடரேற்றுங்கள்.

இவ்வாறு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இராணுவத் தீர்வில் பெருத்த நம்பிக்கை கொண்டு, உலக வல்லாதிக்க சக்திகளின் சகல வளங்களையும் திரட்டி வந்து, மாபெரும் தமிழ் இனப் படுகொலையை நிகழ்த்தி, தமிழ் மக்களின் தேசிய வாழ்வையும் – வளத்தையும் சிதைத்து, தமிழர் தாயகப் பிரதேசங்கள் மீது நடத்திய நில ஆக்கிரமிப்புப் போரில் சிறிலங்கா அரசு வெற்றி பெற்றுள்ளது.

போர் அறம் வழுவி சிறிலங்கா அரசால் நடத்தப்பட்ட இந்த மா பெரும் தமிழ் இன அழிப்புப் போருக்குப் பின்னரும் கூட, இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் என்று சொல்லப்படுகின்ற தமிழ் தேசிய இனம் உயிர் பிழைத்திருக்கிறது என்றால்,

இந்த அருமை பெருமைகள் எல்லாம், நிலப்பசி எடுத்துப் புறப்பட்டு வந்த சிறிலங்காவின் நில ஆக்கிரமிப்பு படைகளை, தமிழர் தாயகத்தின் எல்லைகளில் நெஞ்சுரத்தோடும் – நேர்மைத் திறனோடும் எதிர்த்து நின்று மண்ணுறங்கும் மாவீரர்களையே சேரும்.

பௌத்த பேரினவாத சிந்தனைக்குள் ஊறி, உப்பி உருப் பெருத்துக் கிடக்கும் சிறிலங்கா நாட்டுக்குள், தமிழ் மக்கள் தமது முடிக்குரிய ஆட்சி நிலத்தை பாதுகாத்துக் கொள்ளவும், அந்த நிலத்தில் தங்களுக்கே உரித்தான மொழி, கலை, கலாசாரம், மரபுரிமைகளை நிலை நிறுத்திக் கொள்ளவும், தமிழ் மக்களின் பாதுகாவலர்களாக – மீட்பர்களாக – மரபுவழிப் படையணியாக எழுச்சி பெற்று, கட்டமைக்கப்பட்ட 'தமிழீழ நடைமுறை நிர்வாக அரசை' நிறுவியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழ் மக்களின் ஒரே ஏகப்பிரதிநிதிகளாவர்.

தமிழர் தேசத்தின் அசைவியக்கமாகிய இந்த மாபெரும் தூய விடுதலை இயக்கத்தின் கொள்கை வழி நின்று, உண்மை வாழ்க்கை வாழ்ந்து, தமிழ்மொழி பேசும் மக்களின் வாழ்வுரிமைக்காகவும் – அரசியலுரிமைக்காகவும் ஆயுத மொழி பேசி, தமிழர் தேசத்தின் இதய ஆத்மாவாக உள்ளிருந்து எங்கள் மொழியாகி, எங்கள் கலையாகி, எங்கள் மூச்சாகி, எங்கள் வாழ்வுமாகி, எங்களையெல்லாம் இயக்குகின்ற உந்துசக்திகளை, மாசுமருவற்ற ஒப்பற்ற மானமாமறவர்களை எங்கள் நெஞ்சத்தில் கொலு இருத்தி கௌரவப்படுத்துகின்ற மதிப்பளிக்கின்ற தேசிய எழுச்சி நாளே மாவீரர் நாள்: நவம்பர் 27.

அன்று வழமை போன்றே இம்முறையும், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியா நகரத்தில் ஆலய மணியோசை மூன்று முறை ஒலிக்கவிடப்பட்டு மாலை 6.05 க்கு மாதிரிக் கல்லறைகளுக்கு முன்பாக ஈகச்சுடர் ஏற்றலுடன் மண்டப நிகழ்ச்சியாக மாவீரர் நாள் நினைவேந்தல் இடம்பெறும்.

'தமிழ் தேசிய மாவீரர் நாள் – நவம்பர் 27' எனும் தொனிப் பொருளில் இடம்பெறும் நினைவேந்தல் எழுச்சியில், மாவீரர் போராளி குடும்பங்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், தமிழ் இன மான உணர்வாளர்கள், சிவில் சமூக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அனைவரையும் சமவாய்ப்புடன் பங்கேற்று, 'தமிழ் தேசிய இனத்தின் வீர ஆத்மாக்களுக்கு' உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்துமாறு அழைக்கின்றோம் – என்றுள்ளது. (த-5)

## பஸ்...

2 லட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு வழங்கிய அனுமதியை, சட்டவரைவில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அனுமதியளித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்கத்தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் 40 ஆவது உறுப்புரையைத் திருத்தம் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தம்) சட்ட வரைவை அனுமதிக்காக வேண்டி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் வெளியிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் இன்றி பேருந்துகளைச் செலுத்துவோருக்கு எதிராக மாவட்ட நீதிமன்றங்களின் மூலம் தற்போது அறவிடப்படுகின்ற குறைந்த தண்டப்பணத் தொகையை 10 ஆயிரம் ரூபா முதல் 2 லட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது.

அது தொடர்பில் விதிமுறைகள் அடங்கிய திருத்த சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைகளுக்கே மேற்படி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## அச்சுவேலியில்...

மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் எந்த ஆபத்துக்களும் இல்லை என்று மாவட்டச் செயலகத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே மேலதிக ஆய்வுகள் மேற்கொள்வதற்கு அமைச்சர் சுவாமிநாதன் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

'இந்தச் சம்பவம் தொடர்பிலான காரணங்களைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்கும், குறித்த நிலப் பகுதியை எதிர்காலத்தில் பயன்படுத்துவது தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தேசிய கட்டட ஆய்வு அமைப்பின் மூலம் ஆய்வை மேற்கொள்வதற்கு' அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது. (த-5)

## ராணுவப்...

இருக்கிறோம்.

இராணுவச் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுவோம். இராணுவத்தின் செயற்பாடுகள் எவ்வாறானவை என்பது தொடர்பில் மக்கள் பெரிதும் அறிந்திருப்பதில்லை. அதனால் இராணுவத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சிக்கின்றபோது அவதானமாக இருக்கவேண்டும்.

இராணுவம் உளரீதியாக பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்ற பரப்புரைகள் செய்யப்படுகின்றன. அவ்வாறான நிலையில் இராணுவம் இல்லை. இராணுவத்துக்கு முன்னர் கிடைக்காதிருந்தவற்றையும் தற்போது பெற்றுக் கொண்டுள்ளோம். இராணுவத்தின் அதிகாரங்களையும் ஏனைய செயற்பாடுகளையும் பலப்படுத்தியும் உள்ளோம்.

இராணுவத்தின் பலம் எந்த விதத்திலும் குறையவில்லை. எவராலும் குறைக்கப்படவும் இல்லை. முன்பைவிட தற்போது இராணுவத்தின் பலம் அதிகரித்துள்ளது. போர்க் காலத்தில் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர்களுக்கு அப்பால் சென்ற ஆயுதக் கப்பல்களைத் தாக்கி அழித்து, தீவிரவாத அமைப்புக்களுக்குப் பதிலடி கொடுத்தவர்கள் நாங்கள். இத்தகைய ஆற்றல் உள்ள இராணுவம் உளரீதியாக பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறினால் அது வேடிக்கையானது.

இராணுவச் சூழ்ச்சியை மேற்கொள்ளவோ அல்லது புரட்சியை ஏற்படுத்தவோ ஒருபோதும் நாம் இடமளிக்கப் போவதில்லை. போர் நிறைவடைந்த காலத்திலும் அதற்கு முன்னரான காலப் பகுதியிலும் தற்போதும் நாங்கள் அவ்வாறு சிந்தித்ததில்லை. எதிர்காலத்திலும் அவ்வாறானதொரு நிலைமை தோற்றம் பெறுவதற்கு இடமில்லை.

இராணுவத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலான கருத்து வெளியானமை தொடர்பில் இராணுவம் அதிருப்தியடைந்துள்ளது. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் எம்மைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் – என்றார். (த-5)

## இந்தியாவில்...

ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில், மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிகள்,

நாங்கள் இங்கு வந்து ஆதரவு அற்று கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். எமக்குரிய உலர் உணவுகள் வழங்கப்படவில்லை. எம்முடைய வாழ்வாதாரம் முன்னேற்றப்படவில்லை. நாம் இன்று எமக்கான உதவிகளைத் தேடி ஆவணங்களுடன் திரிகின்றோம். இப்படி இருக்கையில் இந்தியாவிலிருந்து அகதிகளை வரும்படி சொல்கின்றீர்கள். இந்தியாவில் 3 ஆயிரம் பட்டதாரிகள் அகதிகளாக இருக்கின்றனர். அவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் இங்கு அழைத்து நடுத்தெருவில் விடவா போகின்றீர்கள்? இந்தியாவிலிருந்து அவர்களை இங்கு அழைப்பதற்கு முன் அவர்களின் தேவைகளை பூர்த்தியாக்கிய பின்னர் அவர்களை இங்கு அழையுங்கள் என்றனர்.

இந்தியாவில் இருந்து வந்துள்ள எமக்கான பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் என்பவற்றைப் பெறுவதில் நாம் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளோம். வீடுகள், காணிகள் இல்லாத நிலையிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிட்டனர்.

யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்பொழுது வரை 1 இலட்சம் பேர் வரையிலானோர் நாடு திரும்பாமல் இந்தியாவில் அகதிகளாக உள்ளனர். நாடு திரும்பியவர்களுக்கு நிறையத் தேவைகள் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கின்றன. இந்த ஆண்டுதான் இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்துக்கும் நாம் முன்னுரிமை கொடுக்கின்றோம்.

உலர் உணவு வழங்குவது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனவே விரைவில் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் – என்றார். (த-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஆஸிக்குச் சிக்கல்கள்


தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்று களமிறங்கவுள்ளது ஆஸ்திரேலிய அணி. மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில்



உள்ளது தென்னாபிரிக்கா. இதனால் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது தென்னாபிரிக்காவுக்கு சிக்கலலை ஏற்படுத்தாது. ஆனால் தொடரில் ஒரு வெற்றியையேனும் பெறாமல் தொடரை இழப்பதைவிட குறைந்தபட்சம் ஒரு வெற்றியையாவது பதிவுசெய்ய வேண்டுமாயின் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் வெல்லவேண்டும் என்ற நெருக்கடி நிலை ஆஸ்திரேலியாவுக்கு உள்ளது. (ம)

# வலைப்பந்தாட்டத் தொடர்

கரணவாய், நவ. 24
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக வலைப்பந்தாட்டத் தொடரொன்றை எதிர்வரும் 26 ஆம் திகதி முன்னெடுக்கவுள்ளது. காலை 8 மணிமுதல் நடைபெறும் இந்தத் தொடரின் இறுதியாட்டம் மின்னொளியில் இடம்பெறவுள்ளது. தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் ஏற்பாட்டுக் குழுவினரைத் தொடர்பு கொள்வதன் மூலம் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது. (ம-108)



# கென்ய ஒலிம்பிக் சம்மேளன துணைத் தலைவர் கைதானார்

கென்ய ஒலிம்பிக் சம்மேளனத்தின் துணைத்தலைவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.
பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடப்பு வருடம் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. ஒலிம்பிக் தொடரில் ஒவ்வொரு நாட்டின் சார்பிலும் கலந்துகொண்ட வீரர்கள். வீராங்கனைகளை வழிநடத்திச் செல்ல உயர் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். அவர்களிடம் வீரர்களுக்கான ஊக்கத் தொகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவது போன்றவைக்கான பணம் ஒப்படைக்கப்படும். இப்படி கென்யா அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தை அவர்கள் திருடினார்கள் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. குறித்த விடயம் தொடர்பில் கென்யா அரசு விசாரணை நடத்தி வருகிறது. நான்கு அதிகாரிகள் கடந்த செப்ரெம்பர் மாதம் கைது செய்யப்பட்டனர். இந்தக் கென்ய ஒலிம்பிக் சம்மேளனத் துணைத்தலைவரை நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர். (ம)

# மூன்று ஆண்டுகளின் பின்னரே தெரியும் தலைமையின் சுமை

## *இப்படிச் சொல்கிறார் கோக்லி*

தலைமைத்துவம் எவ்வளவு சுமையானது என்பது இன்னும் மூன்று வருடங்களின் பின்னரே தெரியவரும் என்று இந்திய அணியின் டெஸ்ட் தலைவர் கோக்லி தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.



அணித் தலைவர் பொறுப்பில் நான் உற்சாகமாக இருக்கிறேன். ஆனால், ஐந்து துடுப்பாட்ட வீரர், ஐந்து பந்துவீச்சாளர் கொள்கையைத் தொடர்ந்தும் தக்கவைப்பது சவாலாக இருக்கிறது. எனக்கான பொறுப்பு அதிகமாக இருக்கிறது. அணியில் சமநிலைத்தன்மை சிறப்பாக உள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் மேலும் பல வெற்றிகளைக் குவிக்கலாம் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், நவ. 24
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கபடித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய பி அணியை எதிர்த்து பருத்தித்துறை சித்தி விநாயகர் ஏ அணியும் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் பி அணியும் மோதவுள்ளன. (ம-108)

# பன்னாட்டு கிரிக்கெட்; டெஸ்ட் தரப்படுத்தல்

இந்தியா–இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் முடிவடைந்ததை அடுத்தது பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தனது தரப்படுத்தலை நேற்றுமுன்தினம் புதுப்பித்தது. பந்துவீச்சு, சகலதுறைத் தரப்படுத்தலில் அஸ்வின் முதலிடத்தில் உள்ளார். துடுப்பாட்டத் தரப்படுத்தலில் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித் முதலிடத்தில் உள்ளார்.
பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் 895 புள்ளிகளுடன் அஸ்வின் முதலிடத்திலும் 867 புள்ளிகளுடன் கேரத் இரண்டாவது இடத்திலும் 852 புள்ளிகளுடன் ஸ்ரெய்ன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே அன்டர்சன், புரோட், ஜடேயா, யாசிர், ஸ்ராக், ஹசில்வூட், பிளன்டர் ஆகியோர் உள்ளனர்.
சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் 469 புள்ளிகளுடன் அஸ்வின் முதலிடத்திலும் 405 புள்ளிகளுடன் சகிப் அல் கசன் இரண்டாவது இடத்திலும், 342 புள்ளிகளுடன் ஸ்ரோக்ஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே மொயின் அலி, பிளன்டர், ஜடேயா, ஸ்ராக், புரோட், வோக்ஸ், கேரத் ஆகியோர் உள்ளனர்.



ஆஸ்திரேலிய அணி தொடர்ந்து பல தோல்விகளைச் சந்தித்து வந்தாலும் அந்த அணியின் தலைவரான ஸ்ரீவ் சிமித் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளார். அவர் 897 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.
844 புள்ளிகளுடன் ரூட் இரண்டாவது இடத்திலும், 838 புள்ளிகளுடன் வில்லியம்சன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே கோக்லி, அம்லா, யுனிஸ்கான், வில்லியர்ஸ், வோர்ணர், புஜாரா, அலிஸ்ரர் குக் ஆகியோர் உள்ளனர். (ம)

# டக்லெட் நீக்கம்; பட்லர் அணியில்

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியில் பட்லர் சேர்க்கப்பட்டார்.
ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாட இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. மூன்றாவது ஆட்டம் மொகாலியில் எதிர்



வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான அணியிலேயே பட்லர் இணைக்கப்பட்டார்.
முடிவடைந்த இரு ஆட்டங்களிலும் மத்திய வரிசை வீரரான டக்லெட் பெரும் தடுமாற்றத்தை வெளிப்படுத்தினார். குறிப்பாக அஸ்வினிடம் திணறுகிறார். மூன்று தடவைகள் அஸ்வினிடம் ஆட்டமிழந்துள்ளார். இதனையடுத்தே அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டார் எனச் சொல்லப்படுகிறது. (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பீர் நீக்கம்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஏனைய மூன்று ஆட்டங்களுக்குமான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. கம்பீர் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

நீண்ட இடைவெளியின் பின்னர் டெஸ்ட் அணியில் இடம்பிடித்த கம்பீர் தனது இடத்தைத் தக்க வைப்பதற்கான பெறுபேறுகளை வெளிப்படுத்தத் தவறியிருந்தார். இதனையடுத்து அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டார். நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் காயமடைந்து ஓய்விலிருந்த புவனேஸ் குமார், தனது உடல் தகுதியை மீண்டும் நிரூபித்ததை அடுத்து அவர் மீண்டும் அணியில் இணைந்தார். இலக்குக் காப்பாளரான சகாவுக்குக் காயம் ஏற்பட்டுள்ளதால் மூன்றாவது ஆட்டத்துக்கான அணியிலிருந்து அவர் விலக பதில் வீரராக பட்டேல் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

இந்திய அணி வருமாறு: விராட் கோக்லி (தலைவர்), ரகானே (துணைத்தலைவர்), ராகுல், முரளி விஜய், புஜாரா, கருண் நாயர், பார்திவ் பட்டேல், அஸ்வின், ஜடேயா, ஜெயந்த் யாதவ், அமித் மிஸ்ரா, மொகமட் சமி, உமேஸ் யாதவ், இசாந்த் சர்மா, புவனேஸ்வர் குமார், ஹர்திக் பாண்டியா. (ம)





# பிளாசிஸைத் தொடர்ந்து கோக்லி கடும் சிக்கலில்

பந்து அதன் இயல்பான தன்மையை பிரதிபலிக்க அனுமதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இந்திய டெஸ்ட் தலைவர் கோக்லியின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு சென்றுள்ளது. முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இந்த ஆட்டத்தில் கோக்லி, தான் மென்ற ஒரு வகைச் சுவிங்கத்தைப் பயன்படுத்தி பந்தை பளபளக்கச் செய்தார் என்று இங்கிலாந்தின் ஊடகமொன்று செய்தி வெளியிட்டது. குறித்த விடயம் தொடர்பான காணொலியொன்றும் இணையத்தில் வைரலாகப் பரவி வருகிறது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் தென்னாபிரிக்க அணித்தலைவர் பிளாசிஸ் மீதும் இதேபோன்றதொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. குறித்த ஆட்டத்தின் காணொலியைப் பரிசீலித்துப் பார்த்த பன்னாட்டு கிரிக்கெட் சபை, பிளாசிஸ் செய்தது குற்றமே எனத் தெரிவித்து குறித்த ஆட்டத்துக்கான முழுக் கட்டணத்தையும் அபராதமாக விதித்தது.

ஆனால் கோக்லி மீது உத்தியோகபூர்வமான முறையில் முறைப்பாடு ஏதும் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் முறைப்பாடு செய்யவேண்டிய காலம் கடந்துவிட்டது. இவை இரண்டு காரணங்களாலும் அவர் நடவடிக்கை ஏதுமின்றி தப்பித்துக்கொள்ளவும் வாய்ப்பு உள்ளது. (ம)

# வவு. மாவட்ட கழகங்களுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், நவ. 24

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான லிங்கநாதன், இந்திரராசா, தியாகராசா, ஜெயதிலக, யாவாகீர் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வவுனியா மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் சிலவற்றுக்கு விளையாட்டு உபகரணங் கள் வழங்கப்பட்டன.



வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி எம்.பி.பரிசுத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் புஸ்பகுமார, வவுனியா மாவட்ட உதவிச் செயலர் கமலதாசன், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜெயதிலக, தியாகராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-23)


# ஓய்விலும் முதலிடத்தில் தொடர்கிறார் வில்லியர்ஸ்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தல் நேற்றுமுன்தினம் புதுப்பிக்கப்பட்டது. காயம் காரணமாக ஓய்விலிருந்து வந்தாலும் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் தொடர்ந்தும் முதலிடத்தில் இருந்து அசத்துகிறார் வில்லியர்ஸ்.

861 புள்ளிகளுடன் வில்லியர்ஸ் முதலிடத்திலும், 848 புள்ளிகளுடன் கோக்லி இரண்டாவது இடத்திலும், 786 புள்ளிகளுடன் வோர்ணர் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே குயின்டன், வில்லியம்சன், அம்லா, ரூட், குப்தில், ரோகித் சர்மா, பிளாசிஸ் ஆகியோர் உள்ளனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் 735 புள்ளிகளுடன் போல்ட் முதலிடத்தில் உள்ளார். 725 புள்ளிகளுடன் நரைன் இரண்டாவது இடத்திலும், 712 புள்ளிகளுடன் தாகிர் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே ஸ்ராக், ஹென்றி, சகிப் அல் ஹசன், ரசிட், ரபாடா, அக்சர் பட்டேல், மோர்ரசா ஆகியோர் உள்ளனர்.

சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்தலில் சகிப் அல் ஹசன் முதலிடத்தில் உள்ளார். அவர் 391



புள்ளிகளைப் பெற்றுள்ளார். மத்தியூஸ் இரண்டாவது இடத்தில் உள்ளார். அவர் 352 புள்ளிகளைப் பெற்றுள்ளார். ஆப்கானிஸ்தான் வீரர் நபி 332 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலுள்ளார். நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே பல்க்நெர், மிச்செல் மார்ஸ், மொயின் அலி, மக்ஸ்வெல், ஜடேயா, ஸ்ரோக்ஸ், அயர்லாந்தின் கெவின் ஓ பிரைன் ஆகியோர் உள்ளனர்.

ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரேயொரு வீரர் மத்தியூஸ் மட்டுமே ஆவார். (ம)

# சோட்டோக்கான் அக்கடமி மாணவர்கள் சிங்கப்பூரில் பதக்கம் பெற்றனர்

சிங்கப்பூர் கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட நடப்பு வருடத்துக்கான திறந்த கராத்தேத் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய சோட்டோக்கான் கராத்தே அக்கடமி மாணவர்கள் கணிசமான பதக்கங்களைக் கைப்பற்றினர்.

சிங்கப்பூர் பெடோக் உள்ளக விளையாட்டரங்கில் தொடர் நடைபெற்றது.

எஸ்.அமித்தேஷா, குமித்தே போட்டியில் வெண் கலப் பதக்கத்தினையும், காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும், எஸ்.ஆதேஷா, குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும், காட்டாப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும், எம்.சிறிராம் காட்டாப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். இவர்களுக்கான பயிற்சிகளை அன்ரோ டினேஸ் வழங்கினார். (ம-23)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணிக்கு வசிம் அக்ரம் பயிற்சி

இலங்கை கிரிக்கெட் அணிக்கு வேகப் பந்துவீச்சுப் பயிற்சி கொடுக்க பாகிஸ்தான் அணியின் முன்னாள் ஜாம்பவான் வசிம் அக்ரம் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரின் பலத்தை மேலும் வலுப்படுத்த, அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுக்க பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு இரண்டு முறை உலகக்கிண்ணத் தொடர்களில் தலைவராக இருந்த வசிம் அக்ரம் நியமிக்கப்படுவார் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட நிலையில் இந்த மாத இறுதியில் அவர் இலங்கை வரவுள்ளதை இலங்கை கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியது. (ம)

**சிற்றூழியர் தேவை**

உதயன் நெல்லியடிக்கிளையில்
பணியாற்றுவதற்கு சிற்றூழியர் தேவை.
வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்
25.11.2016 காலை 9.30 - 5.00 மணி வரை
நேரில் சமுகமளிக்கவும்.
நெல்லியடி அலுவலகம்.
55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**Evershine Education Centre**
No. 123, Brown Road, Jaffna

**ICT வகுப்புக்கள்**
Grade 10,11 & G.C.E. (A/L)

*பல்லூடக நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்.
*கற்றல் கையேடுகள் மாதிரி பரீட்சைகள் வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
*ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடத்தப்படும்.

அனுமதிக் கட்டணங்கள் எதுவுமில்லை

*தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்களும் நடைபெறும் .
*ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் முற்று முழுதாக ஆங்கிலத்தில் இடம்பெறும்.

ஆரம்பம் - 05.12.2016 மாலை 6 மணி - தரம் 10
07.12.2016 மாலை 6 மணி - தரம் 11

ஆசிரியர் - S.Gowsigan (B Tech - Network Tech)
தொடர்பு - 077 378 4053
Email : gowsivembadi@gmail.com

Note : க.பொ.தர (உ/த) 2018 மாணவர்களுக்கான வகுப்புக்களும் விரைவில் ஆரம்பமாகின்றன.

**வீடு வாடகைக்குத் தேவை**

வவுனியாவில் பூவரசங்குளம்,
வேப்பங்குளம் பகுதியில் 3 அறையுடன்
நல்ல நிலையிலுள்ள, சகல வசதிகளுடன்
கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (C 28587) (14,17,18)
தொடர்பு: 071 411 5004

FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவர்.
DELF A1, A2, B1பரீட்சைகளில் 100 % சித்தி. 1154 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 26.11.16 சனி 8 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம் 28.11.16 Mon @ 3.30pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre




# இலங்கை இறுதிக்குத் தகுதி தீவுகளை திரிலாக வீழ்த்தி

முத்தரப்புத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் தீவுகளை திரிலாக வீழ்த்தி இறுதிக்குத் தகுதிபெற்றது இலங்கை அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. 9 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் குசல் பெரேரா. தனஞ்சய சில்வா, டிக்வெல்ல இணை இன்னிங்ஸைத் திறம்படக் கொண்டு சென்றது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். இணைப்பாட்டமாக 105 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் ஆட்டமிழந்தார் தனஞ்சய டி சில்வா. டிக்வெல்ல, மெண்டிஸ் இணைந்து மீண்டுமொரு அபார இணைப்பாட்டத்தை அரங்கேற்றினர். 6 ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார் டிக்வெல்ல. சிக்சர்களை அடுக்கினார் குசல் மெண்டிஸ். 300 ஓட்டங்களைத் தாண்டியும் செல்லக்கூடிய அடித்தளம் இலங்கைக்கு ஏற்பட்டது. குசல் மெண்டிஸும் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க முடிவில் 330 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை.

பந்துவீச்சில் கோல்டர் 3 இலக்குகளையும், கபிரியேல், நேர்ஸ், கரோல்ஸ் பிரீத்வைட், கிரைக் பிரீத்வைட் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பெரியதொரு இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளுக்கு நம்பிக்கை கொடுத்தார் லூயிஸ். சாள்ஸ், கரோல்ஸ் பிரீத்வைட், கோப் ஆகியோர் முறையே 26, 16, 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் மறுமுனையில் லூயிஸின் வேட்டை தொடர்ந்தது. 41 பந்துகளில் அரைச் சதத்தைக் கடந்த அவர் சிக்சர்கள், பவுண்டரிகளை அடுக்கி சதத்தை விரைவாக நெருங்கினார். 91 பந்துகளில் சதமும் கடந்தார். சதத்தின் பின்பும் லூயிஸின் அதிரடி தொடர்ந்தது. மத்திய வரிசை தகர்ந்தாலும் பின்வரிசையில் நம்பிக்கை கொடுத்தார் கோல்டர். 148 ஓட்டங்களுடன் லூயிஸ் ஆட்டமிழக்க நிலமை அப்படியே மாறியது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 10 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. சிக்சரை விளாசி பதற்றத்தை அதிகரித்தார் பென். அவர் ஆட்டமிழக்க இறுதிப்பந்தில் இரு ஓட்டங்கள் தேவையென்றிருந்தது. ஓர் ஓட்டத்தை மட்டுமே விட்டுக்கொடுத்து ஓர் ஓட்டத்தால் வெற்றியைத் தேடிக்கொடுத்தார் பிரதீப். முத்தரப்புப் புள்ளிப்பட்டியலில் 11 புள்ளிகளுடன் இலங்கை இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. சிம்பாப்வே, தீவுகளுக்கு இடையிலான ஆட்டம் மட்டுமே லீக் சுற்றில் எஞ்சியுள்ளது. தீவுகள் 7 புள்ளிகளுடனும், சிம்பாப்வே 4 புள்ளிகளுடனும் உள்ளன. எனவே இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே இறுதிக்குத் தகுதிபெறும் நிலை ஏற்படும். (ம)

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட். யாழ்ப்பாணம். இரு இடத்திலும் K.K.S.றோட். இணுவில்.
**வணிகக்கல்வி**
ஆசிரியர்
சக்தி வடிவேல் பிரதீபன் (M.Com)
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
யாழ் நகரில்
2017 சந்தைப்படுத்தல் முகாமை 11.00 - 1.00 வரை
2018 வணிக அமைப்புக்கள் 10.00 - 11.00 வரை
இணுவிலில்
2017 சந்தைப்படுத்தல் முகாமை 2.00 - 3.00 வரை
2018 வணிக அமைப்புக்கள் 3.00 - 4.00 வரை
உங்கள் அனுமதிகளை விரும்பிய



நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் பன்முகப் படுத் தப்பட்ட நிதியிலிருந் உடுவில் பிரதேச இளைஞர் கழகச் சம்மேளனத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.